# பொருளியல் நோக்கு

மலர் 40 - ஐப்பசி/கார்த்திகை 2014

12 AUG 2015
பொதுசனநூலகம்
12 AUG 2015
மாநகரசபை
யாழ்ப்பாணம்

வாய்ப்புக்களும் சவால்களும் :
இலங்கையில் வங்கியியல் துறையில் பெண்கள்
- கலாநிதி : திலக்ஷி கோதாகொட

அரசதுறையில் ஊழலினை எதிர்த்துப் போரிடுவதில்
இலத்திரனியல் ஆளுகையின் பங்கு - பேராசிரியர். லலிதா. எஸ். பெர்னாண்டோ

சிறுவர் உரிமை மீறல்:
இலங்கைக்கான விசேடமான மேற்கோள்களுடன்
தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள்
- பேராசிரியர். டிகிரி நிமால் ஹேரத்

கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தகவல்:
கொள்கை வகுப்பாளர்களுக்கான சிக்கல்கள் - குணாத்ம குணவர்தன

நல்லாட்சி - நந்தசிறி கீம்பியஹெட்டி

நூல் விமர்சனம் - கலாநிதி. சமன் கெலேகம

மக்கள் வங்கி வெளியீடு - சித்திரை 2015

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk

பொருளியல் நோக்கு

வெளியீடு:
ஆராய்ச்சித்திணைக்களம்,
மக்கள் வங்கி,
தலைமை அலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.

ஆலோசனை சபை

ஹேமசிறி பெர்னாண்டோ,
தலைவர்,
மக்கள் வங்கி.

என். வசந்தகுமார்,
பிரதம நிறைவேற்று அதிகாரி,
பொதுமுகாமையாளர்,
மக்கள் வங்கி.

சந்தானி வெரபிட்டிய,
பிரதி பொது முகாமையாளர்,
தந்திரோபாய திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி.

ஆலோசகப் பதிப்பாசிரியர்

கலாநிதி. பிரட்ரிக் அபேரத்ன.

பலவேறு கோணங்களிலான அறிக்கைகள், கருத்துக்கள், விடயங்கள் மற்றும் விவாதங்கள் என்பவற்றை முன்வைப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் அறிவையும், ஆர்வத்தையும் தூண்டுவதே பொருளியல் நோக்கு சஞ்சிகையின் குறிக்கோளாகும். மக்கள் வங்கியின் ஒரு சமூக பணித் திட்டமாக இவ் வெளியீடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், இச்சஞ்சிகையில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் என்பன மக்கள் வங்கியின் கருத்துக்களையோ அல்லது அதன் உத்தியோகபூர்வக் கண்ணோட்டத்தையோ பிரதிபலிப்பவை அல்ல. ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் கட்டுரைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகவே உள்ளன. அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களின்; கருத்துக்களாகக்கூட அமையவில்லை என்பனையும் கவனத்தில் கொள்க. அத்தகைய பரந்த நோக்கிலான கட்டுரைகள், கருத்துக்கள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. பொருளியல் நோக்கு, இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. சந்தா செலுத்துவதன் மூலமோ அல்லது நேரடிக் கொள்வனவின் மூலமோ அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
மின்னஞ்சல்:ecorev@peoplesbank.lk

# உள்ளடக்கங்கள்

## வங்கியியல்

கலாநிதி. திலக்ஷி கோதாகொட — 02 — வாய்ப்புக்களும் சவால்களும்: இலங்கையில் வங்கியியல் துறையில் பெண்கள்

## இலத்திரனியல் ஆளுகை

பேராசிரியர். லலிதா எஸ். பெர்னாண்டோ — 11 — அரசதுறையில் ஊழலினை எதிர்த்துப் போரிடுவதில் இலத்திரனியல் ஆளுகையின் பங்கு

## சிறுவர் உரிமைகள்

பேராசிரியர். டிகிரி நிமால் ஹேரத் — 17 — சிறுவர் உரிமை மீறல்கள்: இலங்கைக்கான விசேடமான மேற்கோள்களுடன் தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள்

## கிராமிய கடன் சந்தை

குணாத்ம குணவர்தன — 28 — கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தகவல்: கொள்கை வகுப்பாளர்களுக்கான சிக்கல்கள்

## மாணவர்களின் பக்கம்

நந்தசிறி கீம்பியஹெட்டி — 36 — நல்லாட்சி

## நூல் விமர்சனம்

கலாநிதி. சமன் கெலேகம — 41 — இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றின் அம்சங்கள்

மக்கள் வங்கி அச்சிடல் சேவைகள் திணைக்களத்தில் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டது.

# வாய்ப்புக்களும் சவால்களும்: இலங்கையில் வங்கியியல் துறையில் பெண்கள்

மாசி - 2015

கலாநிதி.
திலக்ஷி கோதாகொட
மனித வளங்கள் துறை
முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

## அறிமுகம்

வரலாற்று ரீதியாக இலங்கையின் பொருளாதாரமானது பிரதானமாக விவசாயத்துறையினாலேயே மேலாதிக்கம் செலுத்தப்பட்டது. ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவரும் பிரதானமாக வாழ்வாதாரத்திற்காக சொந்த தொழில்களை, நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற இடங்களில் குடும்ப அலகானது சமூகத்தின் மதிப்பிற்குரிய மற்றும் முக்கிய அலகாக அடையாளப்படுத்தப்பட்டது. பொருளாதாரத்துறையினைப் பொறுத்தமட்டில் விவசாயத்துறையில் ஆண்களுடன் பெண்களின் பங்கேற்பானது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தமை சான்றாகவும் இருந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஜோன் டேவி (John davy) என்பவரினால் அவதானிக்கப்பட்டதற்கு இணங்க விவசாயத்தில் நிலத்தினைப் பண்படுத்தல் போன்ற மிக கடுமையான செயற்பாடுகள் ஆண்களின் மீது சுமத்தப்படுகின்றதுடன் களையெடுத்தல் மற்றும் அறுவடைக்கு உதவியளித்தல் போன்ற இலகுவான செயற்பாடுகள் பெண்களின் வசமாகின்றது (Davy, 1821:214). ஆண்களினதும் பெண்களினதும் தொழிற்பாடுகள் வெவ்வேறாக அடையாளப்படுத்தப்பட்ட விவசாயத்துறையில் ஆண்களும் பெண்களும் வேறுபட்ட பங்குகளினை வகித்தனர்.

மேலதிகமாக பெண்கள், குழந்தைகளின் சுமைகளைத் தாங்குதல், குழந்தை வளர்ப்பு மற்றும் வீட்டுத் துறைக்குரிய முகாமைத்துவம் போன்றவற்றில் முக்கிய பங்கினை வகித்தனர். பெண்கள் அவளுடைய கணவருக்கும் பிள்ளைகளுக்கும் வீட்டுத்துறைக்குரிய வசதிகளினை உறுதிப்படுத்துவதன் மூலமாக பிரியமான முறையில் தாயாகவும் மனைவியாகவும் அவர்களின் பங்கினை வகிக்க வேண்டுமென எதிர்பார்த்தனர். இந்த இரண்டு துறைகளிலும் பெண்கள் முனைப்பாக பங்கேற்கின்ற பொழுதிலும் பெண்களின் செயற்பாடுகள் குறை மதிப்பிடப்படுவதுடன் கண்ணுக்கு புலப்படாததாகவும் இருக்கின்றது. தாய்மைப்பொறுப்பு மற்றும் தொழில் ஆகிய இரண்டினையும் இணையாக கையாளுகின்ற தாய்மார்கள் தற்போதும் அவர்கள் எடுக்கின்ற தீர்மானங்களில் அவர்களின் பிள்ளைகளுக்கான பொறுப்புக்களில் ஈடுபடுவதை முதன்மைக் கரிசனையாக கொண்டுள்ளனர். பெண்கள் தியாகத்தினால் நிரம்பியிருக்காவிட்டால் அவள் பெண்ணல்ல என்ற சமூக எண்ணமும் இலங்கையில் நிலவுகின்றது. மேலும், தற்பொழுதும் பிள்ளைப் பராமரிப்பு பணியானது, சிறப்பாக முதன்மையான பராமரிப்பாளராக இருக்கின்ற பணிப்பெண், தாய், பாட்டி மற்றும் அத்தை போன்ற பெண்களுடன் இணைந்திருப்பது அவதானிக்கப்படுகின்றது. ஆகையினால் பிள்ளைப் பராமரிப்பு பணியானது எப்பொழுதும் தாய்மார்களின் பக்கம் செல்கின்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைகள் வழங்குகின்ற துறையினரின் வளர்ந்துவருகின்ற பங்கானது இலங்கையின் பொருளாதாரத்தில் தனிச்சிறப்புக்களில் ஒன்றாகவும் முனைப்பாய் தெரிகின்ற போக்கினையும் கொண்டதாக இருந்துவருகின்றதுடன் பாரம்பரிய விவசாய ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரமும் மேலோங்கியிருக்கின்றது. இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தின் தரவுகளுக்கு இணங்க (Sri Lanka Government, 2007) இத்துறையானது தேறிய உள்நாட்டு உற்பத்திக்கு ஆகக்கூடிய பங்களிப்பினை வழங்குகின்ற துறையாக இருந்துவருகின்றது. இது 2012 இல் 51% பங்களிப்பாகக் கணக்கிடப்பட்டது.

Esping-Andersen (1993a: 236) என்பவர் "சேவைப் பொருளாதாரமானது அனைத்து இடங்களிலும் இரண்டு பாலினத்தவர்களினதும் உழைப்புச் சந்தையின் மலர்ச்சியுடன் ஒன்றிணைந்தது. நாளாந்த பரிபாலனம் மற்றும் விற்பனைப் பணிகள் தவிர்ந்த பாரம்பரிய முறைசார் பொருளாதாரமானது ஆண்களின் மேலாதிக்கத்தில் தங்கியிருக்கின்றது. மலர்ச்சியுறுகின்ற சேவைகள் பெண்களினுடைய உழைப்புச்சந்தையாக உருவாகிக் கொண்டிருக்கின்றது" என சுட்டிக் காட்டுகின்றார்.

Esping-Andersen என்பவர் சுட்டிக் காட்டியதற்கு இணங்க பெண்களின் இக் குறிப்பிட்ட அக்கறையான நடத்தைப் போக்கு காரணமாக பிற இடங்களைப் போன்று ஓரளவிற்கு இலங்கையிலும் முறைசார் உழைப்புச் சந்தையினுள் பெண்களின் நுழைவுக்கு மேலும் சாதகமான நிலை உருவாகியிருக்கின்றது. அதன் விளைவாக இந்த அபிவிருத்தியானது, பெண்கள் தொழிலாளர்களாக கலாசார ரீதியில்

மிகவும் வலுவூட்டப்பட்டவர்களாக உருவாகியுள்ள மற்றும் குறிப்பிட்ட பணியில் மிகவும் உறுதியாக உள்ள இடங்களில் அவர்களின் கலாசார முறைமையினுள் பிரதிபலித்திருப் பதாக தோன்றுகின்றது. அனைத் திற்கும் மேலாக தன்னுள் பல் வேறுபட்ட சமய நெறிமுறைகளுட னும் சட்ட பாரம்பரியங்களுடனும் பல்லினப்படுத்தப்பட்ட சமூகமாக இருக்கின்ற இலங்கையானது தாய் மைப்பொறுப்பு மற்றும் வேலை வாய்ப்பு இரண்டினதும் ஒன்றித்த பார்வை மீது தாய்மார்களின் மாறுபட்ட தன்மையுள்ள புரிந்து ணர்வுகள் மற்றும் மனோநிலை போன்றவற்றினை ஆய்வு செய் வதற்காக ஆராய்ச்சிப்பணியில் கரிசனை காட்டுகின்றது.

முதலாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை ஊதியம் வழங்கப் படுகின்ற வேலைகளில் பெண்களின் மேம்பட்ட பங்கேற்பு தொடர்பான கோட்பாட்டு ரீதியிலான விவாதங் கள் தொடர்பாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மதிப்பாய்வினை மேற்கொள் வதனை நோக்கமாகக் கொண்டு பாலின சமத்துவ போக்கு சார்பான திட்டவட்டமான நிலை தொடர்பான சிறப்பான ஆய்வினை மேற் கொள்வதன் நிமித்தம் முதன்முதலில் இங்கு கவனத்திற்கொள்ளப் படுகின்றது. குறைந்தபட்சம் பொருளாதார ரீதியில் பார்க்கும் பொழுது, பாலின சமத்துவமின்மை யானது இலங்கை மற்றும் முதலாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை அவற்றுக்கு இடையே ஒப்பீட்ட ளவில் ஒரேமாதிரியானதாக காணப்படுகின்ற பொழுதிலும் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலையானது மாறுபட்டதாக காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கை அரசாங் கமானது பொதுத்துறையில் வேலை வாய்ப்பிற்காக அதிகளவிலான பெண் பணியாளர்களை ஊக்கு வித்து ஆட்சேர்ப்பு செய்கின்ற பொழுதிலும் அபிவிருத்தி அடைந்த மேற்கு நாடுகளைப் போல் 'பெண்கள் நட்புறவு' சூழ்நிலை யினை கொண்டிருக்கவில்லை. மேலும் சமமாக பங்கெடுப்பதில் கரிசனை காட்டுகின்ற தாய்மார்கள், வேலை வாய்ப்புடன் ஒன்றிணைத்து தாய்மைப் பொறுப்பினை எவ்வாறு ஒழுங்குமுறைப்படுத்துகின்றார்கள் என்பதனை புரிந்து கொள்வதற்கு இலங்கையில் அனுபவரீதியிலான ஆராய்ச்சியானது பற்றாக்குறையா கவே காணப்படுகின்றது.

ஆகையினால், இந்த கட்டுரையில், இலங்கையில் முகாமைத்துவத்திற் குரிய தாய்மார்கள் வேலைத்தளத் தில் சமூகரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் எவ்வாறு கட்டுப்படுத்தப் படுகின்றனர் அத்துடன் அவர்கள் தங்களுடைய தாய்மைப் பொறுப்பு மற்றும் வேலைவாய்ப்பு இரண்டி னையும் எவ்வாறு ஒன்றிணைத்து தீர்மானமெடுக்கின்றனர் போன்ற விடயங்களினை ஆராய்ச்சியாளர் அவருடைய விடய ஆய்விற்கு பயன்படுத்துகின்றார். இந்த விடய ஆய்வானது தெளிவுபடுத்துகின்ற கொள்கைகளின் அனுபவரீதியிலான எல்லையினை விரிவுபடுத்துவத னால் பகுதி 2 ஆனது தாய்மைப் பொறுப்பிலும் வேலைவாய்ப்பிலும் சமூக மற்றும் கலாசார தடைகள் மற்றும் வாய்ப்புக்களின் பல்வேறு பட்ட கோட்பாட்டு ரீதியிலான எண்ணக்கருக்களின் மீது கவனம் செலுத்துகின்றது. மேலும் இக் கட்டுரையின் பகுதி 3 இல் விடய ஆய்வினையும் ஆய்வு முறையி னையும் விபரிக்கின்றது. பகுதி 4 ஆனது ஆராய்ச்சி வினாக்களினை ஆராய்வதற்காக பதிலளிப்பவர்க ளில் முக்கியமானவர்களின் வாழ்க் கைக்கதைகள் முன்வைக்கப்படுகின் றன. கட்டுரையானது பகுதி 5 இல் முடிவுறுத்தப்படுகின்றது.

**விடய ஆய்வு நூல்கள்**

நவீன சமுதாயங்களில் பெண்கள் வெளி வேலைகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற அதிக சுதந்திரம் கொண்டவர் களாக இருக்கின்ற அதேவேளை இரண்டு துறைகளிலும் ஆண்க ளுக்கு கீழ் பணியாளர்களாக அமர்த் தப்படுகின்றனர். பெண்களின் வாழ்க் கைப்போக்கு வேலைத்தளங்கள் மற்றும் அதேபோல் வீட்டுத்துறை ஆகிய இரண்டிலும் அனுகூலமற்ற நிலைகளில் இருப்பதாக சில ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். உதாரணமாக பெண்கள் ஊதியம் வழங்கப்படுகின்ற அவர்க ளின் வேலைகளில் ஈடுபடுகின்ற அதேவேளை உணவு தயாரிப்பு மற்றும் துப்பரவாக்கல் போன்ற வீட்டுத்துறை வேலைகளையும் செய்யவேண்டியிருக்கின்றது. அதே போல் பெண்களின் இடம் வீடு என்று பல சமூகங்கள் தற்பொழுதும் நம்புகின்றது (Burke மற்றும் Fiksenbaum, 2008). அதற்கு சம னாக, பெண்கள் தொழில் முறிவு கள், காலம் தாமதித்த பதவி உயர் வுகள் மற்றும் கண்ணுக்குப் புலப்படாத தடைகள் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின் றனர்.

பல அரசாங்கங்கள் பெண்களினை வேலைவாய்ப்பிற்காக ஊக்குவிக் கின்ற பொழுதிலும் உயர் முகா மைத்துவ பதவிகளில் பெண்களின் பங்கேற்பு மிகவும் குறைவாக இருப் பதுடன் அவர்கள் குறைவான ஊதி யம் வழங்கப்படுகின்ற வேலைக ளினைக் கொண்டுள்ளார்கள். தொழி லாளர் சந்தைகளில் பெண்களின் உயர் வீதத்தினர் தற்காலிக அத்து டன் பகுதிநேர துறைகளிலேயே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் (Casey மற்றும் Alach, 2004). சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (1998) *'உலகில் வேலை'* என்ற அறிக்கைக்கு இணங்க சிறு பிள் ளைகளுடன் வேலைக்கு செல்கின்ற தாய்மார்கள் (15 வயதுக்கு உட்

பட்ட) வளர்ந்த பிள்ளைகளைக் கொண்ட பிள்ளைகளைக் காட்டிலும் (15 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள்) வேலையில் அதிகளவு இடர்களுக்கு முகம்கொடுக்கின்றனர். ஆகையினால் குழந்தை பராமரிப்பு மற்றும் குடும்ப பொறுப்புக்கள் போன்றவை பெண்களின் தொழில் முன்னேற்றத்தினை மாற்றியமைப்பதுடன் அவர்களின் தொழிலினையும் வரையறுக்கின்றது. அதற்கமைவாக அவர்கள் தங்களுடைய வாழ்க்கைமுறை மற்றும் ஈடுபாடுகளினையும் மாற்றியமைப்பதுடன் தொழிலினையும் வரையறுக்கின்றனர். உயர்பதவிகளைக் கொண்ட வேலைகளில் ஈடுபடுகின்ற பெண்கள் தொழிலினையும் குடும்ப கடமைகளினையும் ஒன்றிணைக்கின்ற பொழுது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்று பல ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகள் வலியுறுத்துகின்றன. (Crompton, 2006 பார்க்கவும்). ஆகையினால் அவர்களை மற்றவர்களிலும் பார்க்க அதிகளவு வேலை - குடும்ப முரண்பாட்டின் உருவாக்கத்திற்கு இட்டுச்செல்கின்றது. ஆகையினால் இது நிரந்தரமாக இருப்பதுடன் வீட்டுத்துறைக்கு வெளியேயும் உள்ளேயும் வேறுபட்ட நாடுகளில் வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட வடிவங்களில் பாலின சமத்துவமின்மைக்கு இட்டுச்செல்கின்றது.

பெண்கள் உயர் தகைமைகளினைப் பெறுகின்ற பொழுதிலும் அவர்கள் ஆண்களுக்கு கீழ் நிலையில் பணியாளர்களாகவே பங்காற்றுகின்றனர். உதாரணமாக துருக்கிய வங்கியில் முகாமைத்துவ மற்றும் தொழில்சார் பெண்கள் தொடர்பான ஆராய்ச்சியில், வங்கியானது ஆண்களின் மேலாதிக்க சூழலில் காணப்பட்டமையினால் ஆட்சேர்ப்பு, தெரிவு மற்றும் செயல்திறன் நிறைமதிப்பீடு போன்றவற்றில் பெண்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாக வெளிப்பட்டது (Burke மற்றும் Fiksenbaum, 2008). அதேபோல் அவர்கள் பதவி உயர்வினை பெறுவதில் மந்தப்போக்கு காணப்பட்டமையினால் கெட்ட பெயர் போன்ற இடர்களுக்கு முகம் கொடுத்தார்கள் (Cockburn, 1991; Watts, 2009). மேலும் சில பெண்கள் வேலையில் சுய திறமையினையும் ஆர்வத்தினையும் குறைப்பதற்கு இட்டுச் செல்கின்ற, ஊக்கமிழக்கச் செய்கின்ற அனுபவங்களின் மூலமாக மிகவும் மன உளைச்சலுக்கு உட்பட்டார்கள் என Michie மற்றும் Nelson (2006) ஆகியோர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

Jackson மற்றும் Hayday (1997) ஆகியோர் அவர்களுடைய ஆராய்ச்சியில், பழைய ஆண்களின் வலையமைப்பானது ஆண்கள் தொழில் தெரிவுகளினை மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றதுடன் அவர்களைப் போன்றவர்களையே தேடுகின்றது என்று பெண் கணக்காளர்கள் நம்புகின்றார்கள் என வெளிப்பட்டது. ஆட்சேர்ப்புத் திட்டங்களில் சமவாய்ப்புக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் இணைந்திருக்கின்ற பொழுதிலும் பெண்கள் தீர்மானமெடுக்கின்ற அதிகாரமானது குறைந்த மட்டத்திலேயே தற்பொழுதும் காணப்படுகின்றது (Davidson மற்றும் Burke, 2000; watts, 2009). Forster (2000) என்பவர் தலைமைத்துவம், செயல்பாடு மற்றும் பதவி உயர்வுகள் போன்றவற்றில் ஆண்களின் பார்வையில் ஆழமாக வேரூன்றியிருக்கின்ற கலாசாரத்தின் காரணமாக எந்தவொரு ஆணினாலும் இயக்கப்படுகின்ற சூழலிலும் இந்த நிலைமையானது தவிர்க்கப்பட முடியாது என தெரிவித்தார். ஆண்கள் பெண்களிலும் பார்க்க பாலின பாரம்பரிய மனப்போக்கினை அதிகளவு கொண்டுள்ளனர். ஆகையினால் ஆண்களினால் இயக்கப்படுகின்ற கலாசாரங்களில் குடும்ப நட்புறவான முன்னெடுப்புக்கள் அமுல்படுத்துவது கடினமாக இருக்கின்றது. ஏனெனில் மேலாதிக்கமுள்ள அமைப்பு ரீதியிலான கலாசாரம் மற்றும் பாரம்பரிய புரிந்துணர்வுகள் சமகால மாற்றங்களுடன் இசைவதற்கு எப்பொழுதும் தடுக்கின்றது என ஆராய்ச்சியின் மூலமாக பெறப்பட்டது (Lewis மற்றும் Lewis, 1996; Lewis et al., 2009).

ஆகையினால், (Morrison, 1987; Forster, 2000; Burke, 2008; Pesonen மற்றும் Vanhala, 2009 போன்றவர்களின்) தொடரான ஆராய்ச்சிகளில், ஆண்களின் வழக்கத்திலுள்ள பாலின ரீதியிலான கருத்துப் போக்கு காரணமாக பெண்களுக்கு உயர்மட்டத்திலிருந்து அதிகளவு ஆதரவு அவசியப்படுகின்றது. ஆனால் பெண்கள் உயர் பதவிகளில் குறைவான பிரதிநிதித்துவத்தினையே கொண்டிருப்பதுடன் ஆக்கபூர்வமான முன்மாதிரியானவர்களாக இருப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது எனக் கூறினார். அதற்கு மேலும் அவர்கள் சாதனைகளுக்கான தடத்தின் பதிவுகள் வெற்றிகரமாக இருப்பதற்கான ஆர்வம், வெற்றிகரமாக கையாளுவதற்கான இயலுமை, தொழில் பொறுப்புக்களினை ஏற்றுக்கொள்வதற்கான விருப்பம் மற்றும் உறுதியான, தீர்க்கமான மற்றும் உரிமையினை வற்புறுத்துகின்ற இயலுமையாக இருத்தல் போன்றவற்றினை வெளிப்படுத்துவது அவசியமாகின்றது. Burke மற்றும் Fiksenbaum (2008) போன்றவர்களின் சுட்டிக்காட்டலுக்கு இணங்க, வெற்றிகரமான வாழ்க்கைத் தொழிலினை அடைவதற்கு பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிக பயனுள்ள திறமைகளினை கொண்டிருக்க வேண்டியது அவசியமாக இருப்பதுடன் இது பெண்களின் எதிர்மறையான பாலின ஓரினத்தன்மையினை தோற்கடிப்பதற்கு அவசிய தேவைப்பாடகவும்

இருக்கின்றது. உதாரணமாக ஆபத்தினை எதிர்கொள்வதில் தயக்கம், பயம், கீழ்ப்பணிவான நடத்தை போன்றனவாகும். Sanders (2005) என்பவர் சில தொழில்களுக்கான தேர்வு செயல்முறையில் பெண்களின் வசீகரமான தோற்றப்பாடு முக்கிய குறிகாட்டியாக காணப்படுகின்றது என வெளிப்படுத்தினார்.

Aycan (2004) குடும்ப மற்றும் கட்டமைப்பு ரீதியிலான ஆதரவிற்கு அப்பால் பெண் வல்லுநர்கள் தொழில் தெரிவுகளினை மேற்கொள்வதற்கு சுயநம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு போன்றவற்றினைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது என தெரிவித்தார். மேலும் Guerrier மற்றும் Wilson (2009) என்பவர்கள் பெண்கள் வேலைக் கலாசாரம் தொடர்பான அவர்களின் வாழ்க்கை முறையினை மாற்ற வேண்டியிருக்கின்றது என கூறினார். சக பெண் ஊழியர்கள் தொடர்பான ஆண்களின் மனோநிலைகள் பாகுபாடுகள், எண்ணங்கள் மற்றும் இயல்புகள் காரணமாக இது பிரதானமானது ( Morrison, 1992; Ragins, 1998; Schein, 2007). ஆகையினால் பெண்கள் உயர் பதவிகளுக்கு செல்வதற்கு வீட்டுத்துறைக்குரிய பொறுப்புக்கள் மட்டும் தடைகளாக இருப்பதில்லை (Crompton மற்றும் Lyonette, 2008). முகாமைத்துவ பதவி தொடர்பாக "முகாமையாளர் என்ற எண்ணம் - ஆண் என்ற எண்ணம்" (Schein, 2007) உடைய ஆண்களின் மனோநிலையானது அநேகமான சிரேஷ்ட மட்டங்களுக்கு பெண்களின் அடைவினை கடுமையாக வரையறுக்கின்றது. Kanter என்பவர் அதிகாரப்படிநிலை அமைப்பானது ஆண்பாலுக்குரிய கடமை சார்ந்ததாக அமைந்திருக்கின்றது என அடையாளப்படுத்தினார். "மேலும் நிறுவனங்கள் பாலின நடுநிலையான இயந்திரங்களாக காணப்படுகின்ற பொழுதிலும் அதன் அதிகார கட்டமைப்பில் ஆண்பாலுக்குரிய கொள்கைகள் மேலாதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன" (1977:46). மேலதிகமாக, ஆராய்ச்சியாளர்கள் நீண்ட வேலை நேரம், வேலையின் நெகிழ்வுத் தன்மையில் சாதகமான போக்கின் பற்றாக்குறை மற்றும் ஆண்களின் மேலாதிக்கம் உள்ள சூழலில் பிரபல்யமான கலாசாரமாக காணப்படுகின்ற தொழில் வழங்குநரின் அவசியப்பாட்டுக்காக கடுமையாக வேலைசெய்வதாக காட்டுவதற்காக வழமைக்கு மாறாக நீண்டநேரம் கடமையாற்றுதல் போன்ற பிரச்சினைகளினை ஏற்றுக் கொண்டார்(Watts, 2007).மேலும் பெண்கள், தொழிலாளர் சந்தையில் போட்டியிடுவதற்கு குறைந்தளவிலான இயலுமையைக் கொண்டிருப்பதனால் வேலை நேரம் தொடர்பான கொள்கையானது எப்பொழுதும் பாலின சமத்துவ மின்மைக்கு இட்டுச்செல்கின்றது என ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டியிருந்தார்கள் (Armstrong மற்றும் Walby, 2009).

## ஆராய்ச்சி வடிவமைப்பும் ஆராய்ச்சி முறையும்

அனைத்து வேலைவாய்ப்புக்களினையும் பார்க்கின்ற பொழுது 16% ஆக பெரும் எண்ணிக்கையான பெண்கள் இலங்கையில் பொதுத் துறையில் வேலைவாய்ப்புடையவராக இருப்பதனால் பெண்களுக்கான பிரதான வேலை வழங்குநராக பொதுத்துறை காணப்படுகின்ற அதேவேளை ஆண்கள் 12% மாக காணப்படுகின்றனர் (இலங்கை அரசாங்கம், 2006). மேற்கு ஐரோப்பா்வினைப் போன்று இலங்கையில் மருத்துவர், தாதி மற்றும் ஆசிரியர்கள் போன்ற தொழில்கள் பெண்களுக்கு பொருத்தமான, பாதுகாப்பான, அவர்கள் நாட்டங்கொள்கின்ற பாத்திரங்களாக தென்படுகின்ற அதேவேளை வங்கியியல் தொழிலானது ஆண்களுக்கு அதிகளவு ஏற்பாடுகளுள்ள பாத்திரமாக விரிவுபடுத்தப்பட்டிருப்பது தென்படுகின்றது. வங்கியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைகள் போன்றவை இலங்கையில் வளர்ந்துவருகின்ற பொருளாதார முக்கியத்துவமானதாக இருக்கின்றன. அநேகமாக இவ் அனைத்து துறைகளும் முகாமைத்துவ மட்டங்களில் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்கள் மூலமாக உண்மையில் ஆண்கள் சார்ந்த தொழில்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையினால், ஆண்கள் மேலாதிக்கம் செலுத்துகின்ற உயர் மட்ட தொழில்கள் இருக்கின்ற இடங்களில் உயர்மட்டத்திலான நிலைக்குத்துப் போக்கான பாலினம் சார் பாகுபாடு காணப்படுகின்றது. உதாரணமாக, வங்கியில், 2005 அளவில் உயர் நிறுவன முகாமைத்துவ ஊழியர் மட்டத்தில் சுமார் 1.2% மட்டுமே பெண்கள் பிரதி நிதித்துவப் படுத்தினர். ஆனால் கனிஷ்ட நிறைவேற்று மட்டத்தில் 81.5% பெண்கள் ஆவார்கள். இலங்கையானது பாலின சமத்துவ வழிமுறைகளினை பகுதியளவில் அமுல்படுத்துவதாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. உதாரணமாக இலங்கையானது 134 நாடுகளில் 39வது இடத்தினைப் பிடித்துள்ள போதிலும் உலக பொருளாதார பொதுமன்றம், 2014 (World Economic Forum, 2014) பல ஐரோப்பிய நாடுகளில் உள்ளதைப் போல் தாய்மார்களின் ஊதியத்துடனான பணிக்காக ஆதரவு வழங்குகின்ற சமூகக் கொள்கை, குடும்ப நேயமுள்ள கொள்கைகள் மற்றும் பொது நிதியளிப்புடனான குழந்தை பராமரிப்பு வசதிகள் போன்றன தற்பொழுதும் போதியளவு விருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது கடுமையாக குறிப்பாக தாய்மார்களின் வாழ்க்கை முறையினை மட்டுமல்ல சமூகத்தினையும் பொதுவாக பாதிக்கின்றது.

ஆகையினால், இந்த கட்டுரையானது இலங்கையில் முகாமைத்துவ நிலையில் உள்ள தாய்மார்கள் வேலைத்தளத்தில் சமூகரீதியாகவும் அமைப்புரீதியாகவும் எவ்வாறு வரையறுக்கப்படுகின்றார்கள் எனவும் அத்துடன் அவர்கள் தாய்மைப் பொறுப்பினையும் தொழிலினையும் ஒன்றிணைத்து எவ்வாறு தீர்மானங்களினை மேற்கொள்கின்றார்கள் எனவும் ஆராய்கின்றது.

மாதிரியெடுத்தலின் ஆரம்பக் கட்டத்தில் துறைரீதியாகவும் மற்றும் தொழில் நிலைகள் ரீதியாகவும் விடய ஆய்வின் மூலமாக நேர்காணலுக்கு உள்ளடக்கப்படுபவர்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இந்த ஆராய்ச்சியானது முன் தீர்மானிக்கப்பட்ட நோக்கத்திற்குரியதான மாதிரிகளினை பயன்படுத்தியது. இறுதி மாதிரியினுள் பொது வங்கித்துறையில் 15 பெண் முகாமையாளர்கள் உள்ளடக்கப்பட்டனர். அனைவரும் திருமணமானவர்களாகவும் அவர்களுடைய கணவருடன் இணைந்து வாழ்பவர்களாகவும் இருந்தனர். இந்த ஆராய்ச்சிக்காக மிகவும் பொருத்தமான வடிவமைப்பானது ஊதியத்துடனான மற்றும் ஊதியமற்ற தொழில் இரண்டினையும் ஒன்றிணைத்தலில் தாய்மார்களின் வாழ்க்கைப் போக்குடன் தொடர்புபட்ட செயல்முறையின் ஆழமான புரிந்துணர்வுகளினை உருவாக்கக்கூடிய வலுவானதும் பண்பு ரீதியிலானதுமான அடிப்படையில் இருக்கின்றது. முற்றுமுழுதாக, முக்கிய பதிலளிப்பவர்களுடன் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் முக்கிய ஆராய்ச்சி உபாயமாக பிரயோகிக்கப்பட்டது. இறுதியாக குறிப்பிட்ட ஆய்வுப்பொருள் சார்ந்த பகுப்பாய்வானது குடும்ப மற்றும் தொழில் வாழ்க்கை தொடர்பான தாய்மார்களின் கதைகள் பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்பட்டது.

**சமூக பிரச்சினைகள் மற்றும் வேலைத்தள கலாசாரம் தொடர்பாக வங்கிக்கிளை முகாமையாளர்களின் அனுபவங்கள்**

வேலைத் தளங்களில் ஆண்களின் மேலாதிக்கத்தினையும் அதேபோல் பெண்களுக்காக கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற தெரிவுகள் போன்றவற்றினையும் ஆராய்வதன் மூலமாக சமூகத் தடைகள் மற்றும் வாய்ப்புக்கள் போன்றவற்றினை புரிந்து கொள்ளப்பட முடியும். கலாசாரம் மற்றும் சமூக நடைமுறைகள் போன்றவை பெண்களின் தெரிவுகள் குறிப்பாக அவர்களின் பதவி நிலை, தொழிலாளர் மற்றும் தொழில் என்ற நிலையிலும் பார்க்க மனைவி மற்றும் தாய் என்ற நிலையில் இருத்தல் போன்றவற்றில் செல்வாக்கு செலுத்துகின்ற மிக முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன. அதேவேளை இவ்வாறு ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கின்ற நெறிமுறைகள் மற்றும் விழுமியங்கள் போன்றவை அரச நிறுவனங்களின் ஊடாக பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. உண்மையில், இந்த நிறுவனங்கள் இலங்கையில் வங்கியியல் துறையில் ஆண்களினால் இயக்கப்படுகின்ற நடத்தைப் போக்கின் நடைமுறைகள் பாலின நடத்தையினை ஊக்குவிப்பதற்கு உதவியளிக்கின்றன.

வங்கியியல் துறையில் பெண் முகாமையாளர்கள் அவர்களின் நிறுவனங்களில் மனிதவள முகாமைத்துவ நடைமுறைகள் காரணமாக வேலைத்தளம் மற்றும் வீட்டுக்குரிய செயற்பாடு இரண்டிலும் சமத்துவமற்ற நிலையினால் இன்னலுக்கு உட்பட்டார்கள் என சேகரிக்கப்பட்ட நேர்காணல் தரவுகள் வெளிப்படுத்தியது. இந்த நிலைமையினை ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் செயல்திறன் மதிப்பீடு முழுவதிலும் முகாமைத்துவ நடைமுறைகளினை ஆய்வு செய்வதன் மூலமாக புரிந்துகொள்ளப்பட முடியும். கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்றவை பாலின ரீதியாக சமத்துவமாக கிடைப்பதன் அடிப்படை உரிமையினை இலங்கை அரசியல் யாப்பானது உறுதிப்படுத்துகின்றது. அதேவேளை பாலின நடுநிலைமை மற்றும் சமத்துவம் போன்றன சொல்லாட்சி ரீதியாக ஊக்குவிக்கப்படுகின்றது. அதேவேளை ஸ்தாபிக்கப்பட்டுள்ள மனித வளங்களின் நடைமுறைகளின் ஊடாக பெண்கள் தற்பொழுதும் பாகுபாட்டிற்கு உட்படுகின்றார்கள் (Kodagoda, 2014 Kodagoda மற்றும் Samaratunge ஆகியவர்களின் மீளாய்வின் கீழ்).

அதன் விளைவாக, பெண்கள் உயர் கல்வியில் சிறப்பான அடைவினையும் வெற்றியினையும் கொண்டுள்ள இலங்கையின் கல்வியில் பாலின சமத்துவமின்மையானது முக்கிய பரிமாணமாக இல்லை. மாறாக பெண்களின் தொழில் விருத்தி மற்றும் முன்னேற்ற வாய்ப்புக்களில் குறிப்பாக இளம் பிள்ளைகளைக் கொண்டுள்ள தாய்மார்கள் விடயத்தில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால், குறிப்பாக பெண் வங்கி முகாமையாளர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மூலமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது இது குறிப்பாக போட்டித்தன்மையான வேலை வாய்ப்புத்துறையாக காணப்படுகின்றமையினால் குறிப்பாக தாய்மார்கள் முகாமைத்துவ பதவிநிலைகளுக்கு விண்ணப்பிக்கின்ற பொழுது அவர்களுடைய வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடன் ஒத்த ஆண்களிலும் பார்க்க அதிக நெகிழ்ச்சிப் போக்குகளையும் காட்ட வேண்டியுள்ளது.

இவ் வழியில், முகாமைத்துவ மட்டங்களுக்கு பெண்களின் ஆட்சேர்ப்பு உயர்மட்ட நபர்களினால் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ குறைக்கப்படுகின்றது. இது 2007 ஆம் ஆண்டு வங்கி

முகாமைத்துவ பயிற்சியாளர்களின் புதிய ஆட்சேர்ப்பு தொடர்பாக கருத்துரைக்கையில் மனித வளங்களுக்கான ஆண் பணிப்பாளரினால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. பெண்கள் நகரத்திலிருந்து தொலை தூரத்திற்கு செல்வதற்கும் நீண்ட நேரம் வேலைசெய்வதற்கும் விரும்பாமையினாலும் மேலும் நீண்ட மகப்பேறுகால விடுமுறை போன்ற பிரச்சினையினாலும் இளம் பெண்களின் ஆட்சேர்ப்பினை குறைப்பதற்கு முயற்சிப்பதாக அவர் கூறினார் (Kodagoda, 2014).

பெண்களின் வேலைவாய்ப்பிற்கான கலாசார தடைகளின் தணிவுடன் தொழிற்சந்தையில் பாலின பாகுபாடு குறைந்து கொண்டு செல்லுகின்ற பொழுதிலும் தாய்மை நிலை தொடர்பான சமூக நெறிமுறைகள் இத்துறையில் தற்பொழுதும் உயர்ந்த அளவில் கண்ணுக்குப் புலப்படுகின்றது. ஆண்களின் மேலாதிக்கச் சூழலில் குறிப்பாக தாய்மார்கள் குழந்தை பிரசவிப்பு மற்றும் குழந்தை வளர்ப்பு கால கட்டத்தில் தொழில் முன்னேற்றப் படியில் பெண்கள் பிரகாசிப்பது கடினமாக இருக்கின்றது. ஏனெனில் சராசரித் தாய்மார்கள் அவர்களின் தொழில் முன்னேற்றத்திலும் பார்க்க அவர்களின் பிள்ளைகளின் தேவைப்பாடுகளில் பிரதான கவனத்தினை செலுத்துகின்றார்கள். பெற்றோருக்கான எண்ணக்கருத்தினை கொண்டிருக்காமை மற்றும் தந்தையர்களின் கைவிட்ட நிலை போன்றன ஊதியம் வழங்கப்படுகின்ற வேலை சூழ்நிலைகளில் பெண்கள் குறைவான வினைத்திறனாக இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தினை வலுவூட்டுகின்றது. அநேகமாக ஆய்வுக்குரிய மாதிரிகளில் அனைத்து வங்கி முகாமையாளர்களும் வங்கியியல் துறையானது ஆண் மேலாதிக்கம் செலுத்தப்படுகின்ற நிறுவனமாக ஏற்றுக்கொண்டார்கள். உதாரணமாக, வங்கித்துறையிலும் தாய்மைப் பொறுப்பிலும் இருபத்தைந்து வருடங்கள் அனுபவமுள்ள ரிதா (வங்கி முகாமையாளர்/52) என்பவர், இந்த கலாசார ரீதியில் வரையறுக்கப்பட்ட சூழலில் பதவி உயர்வினைப் பெறுவது எவ்வளவு கடினமானது என்பதனை தெளிவுபடுத்தினார்.

"நான் முற்றுமுழுதாக உடன்படுகின்றேன். வங்கியியலானது ஆண் மேலாதிக்கமுள்ள நிறுவனமாக இருக்கின்றது. நான் சனிக்கிழமை உட்பட ஒவ்வொருநாளும் எட்டு தொடக்கம் ஆறு மணி வரை கடமையாற்றுகின்றேன். நான் ஏற்கனவே வங்கியியல் பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளேன். அடுத்த பதவி உயர்வுக்காக நான் ஐந்து தடவைகள் விண்ணப்பித்தேன். ஆனால் தற்பொழுதும் நான் ஒரு வங்கி முகாமையாளராகவே இருக்கின்றேன்".

மேலும், ஆண்கள் அவரிலும் பார்க்க விரைவாக பதவி உயர்வினை எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என்பதனையும் கூறினார்.

"நாங்கள் பல்கலைக்கழகத்தில் ஒரே தொகுதியினைச் சேர்ந்தவர்களாகவும் ஒரே காலப்பகுதியில் முகாமைத்துவ பயிலுநர்களாக இணைந்தோம். ஆனால் பெரும்பாலான ஆண்கள் சரியான நேரத்தில் அவர்களுடைய பதவி உயர்வினை பெற்றுக்கொண்டார்கள். தற்பொழுது அவர்கள் சிரேஷ்ட முகாமையாளர் நிலைகளில் உள்ளனர். அவர்கள் தங்களுடைய வங்கியியல் பரீட்சைகளினை நிறைவு செய்யவில்லை. இது நான் பெண்ணாகவும் தாயாகவும் இருப்பதனால்தான், இவ்வாறு கூறுவது அநீதியானது!"

அதற்கு மேலும், இந்த தொழில்சார் தாய்மார்கள் அவர்களுடைய வீடுகளில் அதிகளவு ஏற்றுக்கொண்டிருக்கின்ற அனைவருக்கும் சமத்துவமான தத்துவத்தில் பாலின சமத்துவப் பங்குகள் தொடர்பாக வெளிப்படையாக பேசுகின்ற அதேவேளை குறிப்பாக விவகாரங்கள் தொடர்பாக தீர்மான மெடுக்கின்ற செயல்முறையில் கணவரினால் மறைமுகமாக ஆண் அதிகாரமானது செல்வாக்கு செலுத்துகின்றது. குடும்ப பாங்குகள் மற்றும் தொழிலாளர் சந்தை நடத்தைப் போக்குகள் மாறிக்கொண்டு இருக்கின்ற பொழுதிலும் குறிப்பாக பாரா மரிப்பாளராகவும் வீட்டுக்குரிய தொழிலாளர்களாகவும் தாய்மார்களின் நிலை செயல்முறை ரீதியில் பெண்கள் மிகவும் வரையறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதற்கு இது நல்லதொரு சான்றாக காணப்படுகின்றது. இதே கதையானது மீனா என்பவரினாலும் விபரிக்கப்பட்டது (வங்கி முகாமையாளர்/54).

"என்னுடைய கணவர் ஒரு வங்கியாளர், நாங்கள் ஒரே தொகுதியில் இருந்தோம் ஆனால் அவர் என்னிலும் பார்க்க முன்கூட்டியே பதவி உயர்வினைப் பெற்றார் அவர் தடங்கலில்லாமல் அவருடைய தொழிலினை தொடர்ந்தார்".

அவர் தொடர்ந்து கூறுகையில்:

"வங்கி விதிகள் ஆண்களுக்கு சாதகமாக இருப்பதுடன் அது அவர்களினால் இயக்கப்படுகின்றது. அவர்கள் எம்மைப்பற்றி கவலைப்படுவதில்லை மேலும் எம்மை வேறொரு வேலையாளாகவே நடாத்துகின்றனர். ஆகையினால், எமக்கென்று ஒரு இடமில்லை. பதவி உயர்வானது இரகசியம் நிறைந்ததாகையினால் நாங்கள் பிரதிபலனினை பெறுவதில்லை".

ஆண்கள் மேலாதிக்கமுள்ள அதிகாரப்படி நிலையுள்ள நிறுவனத்தின் பொதுவான மற்றொரு நிலையாக

பெண்கள் மிக முக்கிய வேலைத் தள வலையமைப்புக்களில் இருந்து ஒதுக்கப்படுகின்றனர். இந்த வலையமைப்புக்கள் பதவி உயர்வுகள் போன்ற மேல்மட்ட தீர்மானமெடுத்தலில் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. அதற்கு மேலும், வங்கியில் பதவி உயர்வு நிபந்தனையானது ஆண்களினால் வழிநடத்தப்படுவதுடன் ஆண்களுக்குரிய தேவைப்பாடுகள் தொடர்பாகவே பரீட்சார்த்திகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றனர். உதாரணமாக விண்ணப்பதாரிகள் முற்றுமுழுதாக நெகிழ்வுப் போக்கினைக் கொண்டிருக்க வேண்டியதுடன் மிகை வேலையான சூழலில் நீண்ட நேரம் கடமையாற்றுவதற்கு இயலுமாக இருக்க வேண்டும். இந்த வரையறைகள் காரணமாக பெண்கள் - குறிப்பாக தாய்மார்கள் - தாய்மார்களுடன் கடமையாற்றுகின்ற ஆண்கள் தந்தைமார்களாக இருந்த போதிலும் கூட ஆண்களிலும் பார்க்க மிகவும் தவிர்க்கமுடியாத இடர்களுக்கு முகம் கொடுத்தார்கள். அதற்கு மேலும், இந்த அதிகாரத்துவ நிறுவனமானது பல தொடரான பதவி நிலைகளினைக் கொண்டுள்ள போதிலும் பெண்களை உள்வாங்குவது கடினமாகவே இருக்கின்றது.

மேலதிகமாக, பெண்கள் வங்கி முகாமையாளர்களாக இருக்கின்ற இந்த மாதிரி எடுப்பில் குறிப்பாக தாய்மார்கள், வருடாந்த செயல்திறன் நிறை மதிப்பீட்டில் எப்பொழுதும் துன்பப்படுகின்றனர். அது உயர் அளவிலும் பாலின ரீதியிலான இலக்குகளின் தொகுப்பினைக் கொண்டுள்ளது. ரிதா என்பவரின் கூற்றுக்கு இணங்க (வங்கி முகாமையாளர்/52)...

"இலக்குகள் ஆண்களை சார்ந்ததாகவே இருந்தன. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் (பெண் முகாமையாளர்கள்) இலக்குகளினை அடைவதற்கு ஊதியமற்று தொண்டு அடிப்படையில் கடமையாற்றுகின்றோம்".

"தீர்மானமெடுத்தல் மட்டங்களில் பெண்களின் பங்கேற்பின் பற்றாக்குறை காரணமாக அநேகமாக அனைத்து செயல்திறன் மதிப்பீடும் ஆண்களினால் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் தொடர்ந்து கூறினார்". அதன் விளைவாக பெண் வங்கி முகாமையாளர்கள் ஆண் செயல்திறன் மதிப்பீட்டாளர்களினால் பாரபட்சமான முறையிலான கையாளுகைக்கு முகம் கொடுக்கின்றார்கள். மாயா என்பவரின் கருத்துக் கூறலுக்கு இணங்க (முகாமையாளர்/52)....

"செயல்திறன் மதிப்பாய்விலும் கூட இந்த ஆண் மதிப்பிட்டாளர்கள் எங்களை செவிமடுப்பதற்கான நேரத்தினை ஒதுக்கிக்கொள்வதில்லை - வஞ்சகமான மதிப்பீடுகள்".

வேலைத்தளத்திற்குரிய வசதிகளான குழந்தை பராமரிப்பு, மழலையர் பள்ளி மற்றும் ஆலோசனை ஏற்பாடு போன்றவற்றினை உள்வாங்கிக் கொள்ள முடியும். அவை அனைத்தும் தொழிலாளர்களினால் குறிப்பாக குடும்ப பொறுப்புக்களினால் பின்னிப் பிணைந்தவர்கள் அனுபவிக்கின்ற இடர்களினை குறைத்து சிறப்பான வேலைச் சூழலினை வழங்குவதன் நோக்கமாக இருக்கும். எவ்வாறாயினும், விடுமுறைத்திட்டங்களுக்கு அப்பால், எந்தவொரு தொழில் துறையினரும் பணிவாழ்க்கையினை சமநிலைப்படுத்துவதற்கான நடைமுறைகளுக்கு ஆதரவளிக்கின்ற செயற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதில்லை. உண்மையில் இவ்வகை நிறுவனங்களின் பிரதான எண்ணமானது குடும்ப பொறுப்புக்கள் ஊதியமளிக்கப்படுகின்ற தொழிலுடன் பெருமளவில் தலையீட்டினை மேற்கொள்ளக் கூடாது என்பதாக இருந்தது. குழந்தை பராமரிப்பானது பெண்களின் (அல்லது குடும்ப) பிரச்சினையாக இருப்பதுடன் நிறுவனங்களினால் எதனையும் செய்ய முடியாது. ஆகையினால் பராமரிப்பு பணியானது தாய்மார்களினால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என உயர் மட்ட முகாமைத்துவத்தினால் கருதப்படுகின்றது என வங்கித்துறையில் பதிலளிப்பவர்கள் பலர் கூறினார்கள்.

அதேபோல், சீதா (வங்கி முகாமையாளர்/46) இவ்வாறு பரிந்துரைத்தார்.

"பிள்ளைப் பராமரிப்பு நிலையமானது அற்புதமான எண்ணமாகும். ஆனால் வங்கிக்கு மிக அருகாமையில் குழந்தை பராமரிப்பு நிலையத்தினை நிறுவுதல் சிறப்பான எண்ணமாக இருக்குமென நான் கருதவில்லை. ஆனால் வங்கிக்கு அருகில் எங்கேயாவது ஒரு இடத்தில் அமையவேண்டும்".

நிறுவன கட்டமைப்புக்கள் மற்றும் கலாசாரங்கள் குறிப்பாக பெண்களின் விடயத்தில் வேலைத்தள வசதிகளின் முக்கியத்துவத்தினை குறைவாக மதிப்பிடுகின்றது. அரச அதிகாரத்துவத்தின் காரணமாக தாய்மார்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பணிவாழ்க்கை சமநிலைக்காக போரிடுகின்றனர். அதேவேளை அவர்களுடைய தற்போதைய பதவி நிலைகளிலும் தடங்கலுற்று இருக்கின்றனர். ஏனெனில் இது பெண்கள் தொழில் சந்தையினுள் நுழைவதற்கு அல்லது மீள் நுழைவதற்கு (பிரசவகால இடைவெளிக்குப் பின்னர்) உந்தப்படுகின்ற பொழுது பெண்கள் மற்றும் தாய்மார்களுக்காக உருவாக்கப்பட்ட தொழில்களில் தற்பொழுது ஆண்களை தொழிலாளர்களாக மாற்றப்பட்டு இந்த பணி இடங்கள் ஆண்களுக்கான நியமங்களை பேணுகின்றது.

## முடிவுரை

இந்த கட்டுரையானது இலங்கையில் முகாமைத்துவத்தில் உள்ள தாய்மார்களினால் அனுபவித்த கட்டமைப்பு ரீதியிலான தடைகள் மற்றும் வாய்ப்புக்களினை கலந்துரையாடியது. வங்கியியல் துறையில் உள்ள தாய்மார்களின் வாழ்க்கை தொடர்பான கதைகளில் இருந்து வேறுபட்ட மட்டங்களில் வேறுபட்ட வகையிலான கட்டமைப்பு ரீதியிலான வாய்ப்புக்கள் மற்றும் தடைகள் போன்றவை அடையாளப்படுத்தப்பட்டன. இலங்கையின் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்ற பொழுதிலும் இவ் அனைத்து தாய்மார்களும் வீடுகளிலும் குறிப்பாக தொழிற்துறைகளிலும் ஆண்களுக்கு கீழ் நிலையில் பணியாளர்களாகவே தற்பொழுதும் பணிக்கமர்த்தப்பட்டிருக்கின்றனர். ஆகையினால், அவர்களுடைய தெரிவுகள் சமூகத்தில் நிலவுகின்ற பாரம்பரிய பண்புகள் மற்றும் பாரபட்சங்கள் மூலமாக தடுக்கப்படுகின்றன. உதாரணமாக, பெண்களுக்கு மற்றவர்களிடம் இருந்து உதவி அவசியப்படுகின்ற அதேவேளை அவை தயக்கத்தினை காட்டுகின்ற அளவிற்கு ஆபத்தானதாகக் காணப்படுகின்றது. உண்மையில் இத்துறையில் பெண்கள் கீழ்மட்ட மற்றும் நடுத்தரமட்ட முகாமைத்துவ பதவி நிலைகளுக்கு மட்டுமே பெருமளவு தனிமைப்படுத்தப்படுகின்றதுடன் அநேகமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே கொடுப்பனவு ரீதியிலான இடைவெளிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பெண்களின் கல்வியினுடைய பரந்துபட்ட விரிவாக்கலானது தொழிற்சந்தையில் அவர்களின் நுழைவுக்கு செல்வாக்கு செலுத்துகின்ற காரணியாக இருந்த பொழுதிலும் கைத்தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளைப் போல் ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் ரீதியிலான மேம்பாடு ஆனது வரையறுக்கப்படுகின்றதுடன் உயர் தொழில்கள் எப்பொழுதும் ஆண்களினாலேயே கையடக்கப்படுகின்றன (Blackburn மற்றும் Jarman, 2002). பெண்களுக்கே உரித்தான பாலின ரீதியிலான அடையாளப்படுத்தல்கள் மற்றும் அமைப்பு ரீதியிலானதும் சமூக கலாசார ரீதியிலானதுமான வாய்ப்புக்களினதும் தடைகளினதும் ஊடாக தாய்மைப் பொறுப்பு மற்றும் தொழில் ஆகிய இரண்டினையும் ஒன்றிணைத்து தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது என இவ் அனைத்து முக்கிய விடயங்களிலும் இருந்தும் தெளிவாக தெரிகின்றது.

இவ் தொழில் வல்லுநர்கள் பொறுப்பு வாய்ந்த பதவி நிலைகளில் ஈடுபட்டிருக்கின்றமையினால் நடைமுறையில் உள்ள அரச கொள்கைகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட அனுகூலங்களின் மூலமான நன்மைகளினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது தொடர்பாக இளம் தாயான மாலா (30) என்பவர் சிறந்த உதாரணமாக காணப்படுகின்றார். போதுமான மகப்பேறு கால விடுமுறையினைக் (252) கொண்டிருந்த போதிலும் எதிர்கால தொழில் ரீதியிலான நன்மைகளினை அடைவதற்கு எதிர்பார்த்தமையினால் அதனைப் பயன்படுத்துவதற்கு விரும்பவில்லை. மேலும், தாய்மார்களின் தொழில் அபிலாசைகள் ஆண்களினால் முன்னெடுக்கப்படுகின்ற நிறுவன நடைமுறைகளின் மூலமாக கடுமையாக வரையறுக்கப்படுகின்றன. அரசாங்கமானது அனைத்து மட்டங்களிலும் பாலின ரீதியிலான சமத்துவத்தினை ஊக்குவிக்கின்ற பொழுதிலும் இத்தாய்மார்கள் இவ் வகையிலான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் இருந்து கணிசமான ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இவ்விடயம் தொடர்பாக தொழிலில் ஈடுபடுகின்ற குடும்பங்களின் நல்லிணக்கம் தொடர்பான ஐரோப்பிய ஆணைக்குழுவின் சிபார்சுகள் இலங்கைக்கான சிறப்பான ஏற்பிசைவினை வழங்குகின்றது. இந்த சிபார்சுகள் குழந்தைப் பராமரிப்பின் அவசியப்பாடுகளினை உள்ளடக்கியிருப்பதோடு ஆண்களை தந்தையர்களாக குறிப்பிட்டுள்ளது (Lewis, 2009). ஐரோப்பிய ஆணைக்குழு நான்கு முக்கிய விடயங்களினை முன்மொழிந்தது. குழந்தைப் பராமரிப்பு சேவைகள், தொழில்பார்க்கின்ற பெற்றோர்களுக்கான விடுமுறைகள், வேலைத்தளங்களில் குடும்ப நட்புறவான கொள்கைகள் மற்றும் பிள்ளைகளின் பராமரிப்பும் அவர்களின் வளர்ப்பில் ஆண்களின் மூலமான அதிகரித்த பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் போன்றவையாகும் (CEU, 1992).

மாதிரியெடுப்பில் பதிலளித்தவர்கள் அனைவரும், இலங்கையில் அனைத்து பெரிய நகரங்களிலும் உயர் தரத்திலான கட்டுப்படியான கட்டணத்தில் பொது குழந்தைப் பராமரிப்பு நிலையங்களினை அமைப்பதற்கான கருத்திற்கு பலமாக ஆதரவளித்தனர். மேலும் குழந்தைப் பராமரிப்பில் பெற்றோர்களில் இருவரும் பொறுப்பானவர்களாக இருப்பதனால் இதற்கு தீர்வாக பெற்றோருக்குரிய விடுமுறையினையும் அதேபோல் தந்தைக்குரிய விடுமுறையினையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இது இரு பெற்றோர்களினாலும் பகிர்ந்து பங்கெடுக்க முடிகின்ற புதிய பெற்றோருக்குரிய கொள்கையினை அறிமுகப்படுத்துதல் மூலமாக ஆரம்பிக்கப்பட முடியும். இந்த நெகிழ்ச்சிப் போக்கானது பெற்றோர்கள் அவர்களுடைய விடுமுறையினை தங்களுக்கு இடையே சமனாக பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது. மேலும், பெற்றோர்கள் அவர்களுடைய தொழில் வாழ்க்கையினை கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்கான வாய்ப்பினையும் கொண்டுள்ளதுடன் அதற்

கிணங்க பெற்றோர்களில் குறைந்த சம்பளத்தினை உடையவர் அவருடைய விடுமுறைக்காக விண்ணப்பிக்க முடியும். இதன் மூலமாக குழந்தை பராமரிப்பின் செலவினைக் குறைக்க முடியும். அநேகமான அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இளம் பிள்ளைகளுடன் தாய்மார்களுக்கான தொழில் சந்தை பங்கேற்பின் பொது வடிவமானது பகுதிநேர தொழில் வடிவமாக காணப்படுகின்றது. தற்பொழுது பல ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வீட்டு வேலை, தாய்மார்களின் தொழில் வாய்ப்பினை மேம்படுத்துவதற்கு நெகிழ்ச்சிப் போக்கான வேலை ஒழுங்குபடுத்தல்கள், தொழில் மற்றும் குடும்பத்திற்கான சிறப்பான நல்லிணக்கத்தினை வழங்குதல் போன்ற அடிப்படையில் குடும்ப நட்புறவான தந்திரோபாயங்களினை அமுல்படுத்துகின்றார்கள். முழு வேலை நேரத் தொழிலாக அதேவகையான வேலை நிலைமைகளினை பின்பற்றுகின்ற 'நீண்ட - பகுதி நேர சுவீடன் மாதிரியுரு' இனை இலங்கைக்கு அறிமுகப்படுத்துதல் நல்லதொரு கொள்கை சிபார்சாக இருக்கும். இவ்வழியில், தாய்மார்கள் ஏனைய சக உத்தியோகத்தர்களைக் காட்டிலும் 2 மணித்தியாலங்கள் முன்கூட்டியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன் வாரமொன்றுக்கு சராசரி வேலை 30 மணித்தியாலங்களுக்கு மேலாக காணப்படுகின்றது (Bjornberg, 2002). இந்த கொள்கையானது குழந்தைகளுக்கு பாலூட்டுகின்ற மணித்தியாலத்துடன் இணைந்ததாக அமுல்படுத்தப்பட முடிவதுடன் குழந்தையானது ஒரு வயதினை அடையும் வரை நீடிக்கப்படலாம்.

அதற்கு மேலும், நிறுவனரீதியிலான வினைத்திறனானது பிரதானமாக மனித மூலதனத்துடன் தங்கியுள்ளது. ஆகையினால் திருப்திகரமான வாழ்க்கையினைக் கொண்டிருப்பதற்கு அவர்களுடைய தொழிலாளர்களுக்காக குடும்ப நட்புறவான முன்னெடுப்புக்கள் போன்ற சிறப்பான மனித வளங்களின் நடைமுறைகள் மற்றும் நவீன ரீதியிலான கலாசாரங்களினை விருத்தி செய்வதும் பராமரிப்பதும் நிறுவனத்தினுடைய பொறுப்பாக இருக்கின்றது. அல்லாவிட்டால் பலர் அல்லது அநேகமாக குறிப்பாக பெண்களின் அதிகரித்த வேலைவாய்ப்பு மட்டங்களை அடைவதில் பாதகமான அனுபவங்களினைக் கொண்டிருப்பார்கள்.

**இந்தக் கட்டுரையானது வெளியீட்டுக்காக மாசி 2015 இல் பெறப்பட்டது.**

**உசாத்துணை நூல்கள்**


Burke, R. J., Koyuncu, M. and Fiksenbaum, L. (2008) Still a man's world: implications for managerial and professional women in a Turkish bank, *Gender in Management*, Vol.23, No.4, pp.278-290.

Crompton, R. (2006) *Employment and the Family: The Configuration of Work and Family Life in Contemporary Societies*, Cambridge: Cambridge University Press.

Esping-Andersen, G. (2009) *The Incomplete Revolution, Adapting to Women's New Roles,* Cambridge: Polity Press.

Government of Sri Lanka, Sri Lanka Department of Census and Statistics Survey 2007, 2008 and 2012. [Online] Available at: www.statistics.gov.lk/home.asp [accessed 05/05/2008].

International Labour Organisation (ILO), (1998), Women in management: it's still lonely at the top, *World of Work Report*, No.3, pp.6-9 Geneva: ILO

Kodagoda, T. (2014) 'Working mothers' gender ideologies on childcare and perception on existing childcare centres: Life stories from Sri Lanka' *Gender in Management,* Vol. 29 (7), pp.402-418.

Kodagoda, T. (2013) 'Work-Family Stress Exploring Motherhood Roles: A Case Study', *in Personal and Public Lives and Relationships in a Changing Social World*, edited by Sharon Wray and Rosemary Rae. Cambridge Scholars Publishing: London

Kodagoda, T. (2013) A Theoretical Debate: Women, Employment, Labour Market and Society. Stamford Lake Publishers: Colombo

Kodagoda, T. and Duncan, S. (2010) 'Combining Motherhood and Employment in Sri Lanka: Preferences, Structures and Moral Rationalities' *International Journal of Interdisciplinary Social Science*, Vol. 5 (3) pp.491-502.

Leon, M. (2009) 'Gender equality and the European employment strategy: the work/family balance debate', *Social Policy and Society*, Vol.8, No.2, pp.197-209.

Watts, J.H. (2009) Allowed into a man's world, meanings of work-life balance: perspectives of women civil engineers as 'monitory' workers in construction, *Gender, Work and Organization,* Vol.16, No.1, pp.37-57. ■

# அரசதுறையில் ஊழலினை எதிர்த்துப் போரிடுவதில் இலத்திரனியல் ஆளுகையின் பங்கு

மாசி - 2015

பேராசிரியர் லலிதா எஸ். பெர்னாண்டோ

சிரேஷ்ட விரிவுரையாளர்
பொது நிர்வாகத்துறை
முகாமைத்துவக் கற்கைகள்
மற்றும் வர்த்தக பீடம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

### அறிமுகம்

தற்பொழுது பொதுத்துறையில் ஊழலானது உலகத்தில் பல அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளினாலும் முகம் கொடுக்கப்படுகின்ற தீவிரமான பிரச்சினைகளாக இருந்து வருகின்றது. அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகள் அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளாகவே தொடர்ந்து காணப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. இந்த சூழ்நிலையில், இந்த கட்டுரையானது ஊழலுக்கு எதிராக போரிடுவதற்கு தந்திரோபாய அணுகுமுறையாக பொதுத்துறைக்கு இலத்திரனியல் ஆட்சியின் அறிமுகத்தின் முக்கியத்துவத்தினை விவாதிக்கின்றது. இந்த கட்டுரையானது அவ்வாறானதொரு இந்தியாவின் இலத்திரனியல் ஆட்சி கருத்திட்டத்தின் நெருங்கிய மேற்கோள்களுடன் பொதுத்துறையில் ஊழலின் குறைப்பு மற்றும் ஒழிப்பிற்காக அவசியமான பல பரிந்துரைகளினை தெளிவுபடுத்துகின்றது.

### அரசாங்கமும் நல்லாட்சியும்

அரசாங்கமானது அரசியல் நிறுவனமாகும். இது அரசாங்கத்தினால் முறைப்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற மக்களின் ஒன்று திரண்ட விருப்பமாகும். அரசானது அரசாங்க இயந்திரத்தின் ஊடாக தொழிற்படுகின்றது. ஆகையினால், அரசாங்கத்தினூடாக பொதுக்கொள்கைகள் மற்றும் விவகாரங்கள் தீர்மானிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுவதுடன் பொது அக்கறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

அரசாங்கமென்ற பதமானது புதிய நடைமுறை ஆட்சி அல்லது ஆளப்படுகின்ற சமுதாயத்தின் மூலமாக மாற்றியமைக்கப்பட்ட முறைகளைக் குறிக்கின்றது. உலக வங்கியானது ஆட்சியினை "அபிவிருத்திக்காக நாட்டினுடைய பொருளாதார மற்றும் சமூக வளங்களின் முகாமைத்துவத்தில் கையாளப்படுகின்ற அதிகாரத்தின் தன்மையாக" வரையறுக்கின்றது. UNDP இன் கூற்றுக்கு இணங்க (1977), ஆட்சியானது அரசாங்கத்தினை உள்ளடக்குகின்றது. ஆனால் நிலைபேறான மனித அபிவிருத்திக்காக முக்கியமாக இருக்கின்ற தனியார் மற்றும் குடியியல் சமூக தொழிற்பாடுகளினை உள்வாங்குவதன் மூலமாக இடர்பாடுகளை கடந்து செல்கின்றது. ஆகையினால் அரசாங்கமென்ற பதமானது தேசிய மற்றும் உள்ளூர் விவகாரங்களில் மக்களின் ஆர்வத்திற்கும் முகாமைத்துவத்தின் பிரதிநிதித்துவப்படுத்தலுக்கும் பங்களிப்பு செய்கின்ற அரசாங்கம், தனியார்துறை மற்றும் குடியியல் சமூகத்தின் தொழிற்பாடுகளை ஒன்றிணைக்கப்படுவதாக குறிக்கின்றது. இந்த நோக்கத்தில் ஒவ்வொரு துறையும் வகிக்க வேண்டிய விசேட பங்கினை கொண்டுள்ளது. ஆகையினால், அரசாங்கமானது உகந்த அரசியல் மற்றும் சட்ட சூழலினை உருவாக்குகின்றது, தனியார்துறையானது தொழில் வாய்ப்பினையும் வருமானத்தினையும் உருவாக்குகின்றது, குடியியல் சமூகமானது அரசியல் மற்றும் சமுதாய இடைத்தொடர்பிற்கு அனுசரணையளிக்கின்றது - பொருளாதார மற்றும் சமூக அரசியல் தொழிற்பாடுகளில் பங்கெடுப்பதற்கு கூட்டத்தினரை வலுவூட்டுகின்றது.

நல்லாட்சியினை ஏற்படுத்துவதில் மேற்கொள்ள வேண்டிய பொது அறிவுரைகளாவன:

- நியாயமான சட்ட கட்டமைப்பு
- பொது விவகாரங்களில் வெளிப்படைத்தன்மை
- பிரசைகளின் பங்கேற்பு
- பகிரங்க பொறுப்புக்கூறல்

போன்றவைகளாகும்.

நியாயமான சட்ட கட்டமைப்பின் கீழ் பிரசைகள் பாரபட்சம் அல்லது பாகுபாடு இல்லாமலும் அவர்களின் சமூக நிலை, இனம் மற்றும் மதம் போன்றவற்றினை கருத்திற் கொள்ளப்படாமலும் சமமாக நடாத்தப்பட வேண்டும். அவ்வாறான சூழ்நிலையானது பிரசைகளின் சமனான பொருளாதார வாய்ப்புக்களுக்கு அனுசரணையளிக்கின்றது. ஆகையினால், பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் சமனான வகையில் பிரசைகளுக்கு பங்கிடப்படுவது அவசியப்படுகின்றது.

வெளிப்படைத்தன்மையானது (திறந்த தன்மை) அரசாங்க செயற்பாடுகளின் தகவல்களினை பிரசைகளுக்கு வெளிப்படுத்தலை குறிக்கின்றது. அரசாங்கமானது பிரசை

களுக்கு சரியான தகவலினை வழங்குமாயின் அத்துடன் அவ்வாறான தகவலினை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்குமாயின் இது பொதுத்துறையின் ஊழலினை பெருமளவிற்கு தடுக்கும். அல்லாவிட்டால் பொதுவளங்களினை தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்த முடியுமாக இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கின்றது.

பொறுப்புக்கூறல் என்ற பதத்தின் அடிப்படை கருத்தானது அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பிரசைகளின் சார்பாக செயற்படவேண்டும் என்பதாகும். விளைவுகளுக்கான பொறுப்புக்கூறலானது அடைவதற்கு ஏதுவான விளைவினை காட்டுவதற்கு பாதீட்டில் அளவிடக் கூடிய வடிவத்தில் கூறப்பட்ட தெளிவான நோக்கங்களின் மீது தங்கியிருக்கின்றது.

நல்லாட்சியானது மனித உரிமைகள் மற்றும் சுற்றாடலின் பாதுகாப்பு தொடர்பான கரிசனையின் மீதும் கவனத்தினை செலுத்துகின்றது. நல்லாட்சியினை நிறுவுவதற்கான ஏனைய அத்தியாவசிய நிபந்தனைகளாக முனைப்பான சிவில் சமூகம், சட்ட ஆளுகை, வினைத்திறனான பொறுப்பு வாய்ந்த பொதுச்சேவை மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை காணப்படுகின்றன. இந்நிலைமைகள் விரும்பத்தக்க மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றது. இது நல்லாட்சியின் நடைமுறைகளுக்கு அனுசரணையளிக்கக்கூடியதாக இருக்கும்.

நல்லாட்சி அற்ற நிலையில் இரகசிய பரிமாற்றங்கள் மற்றும் வெளிப்படையற்ற நடைமுறைகள் காரணமாக பொது சேவையில் ஊழல், அரசியலமைப்பின் புறக்கணிப்பு மற்றும் சட்ட ஆளுகையின் அவமதிப்பு, பல்வேறுபட்ட வடிவங்களினாலான பாகுபாடுகள் மற்றும் மோசமான மனித உரிமைப் பதிவுகள் போன்றவற்றின் காரணமாக நீதித்துறை புறக்கணிப்பு போன்ற பல பிரச்சினைகளுக்கு பிரசைகள் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

அவ்வாறான சூழ்நிலைகளின் கீழ் நல்லாட்சியின் நெறிமுறைகள் புறக்கணிக்கப்படுவதனால் பிரசைகள் அவர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பிரச்சினைகளினை சந்திக்கின்றார்கள். இந்த சூழ்நிலையில் பெரும்பாலான பிரசைகள் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நன்மைகளினை அனுபவிப்பதில் இருந்து ஒதுக்கப்படுகின்றார்கள்.

ஆகையினால், அரசின் பங்கு மற்றும் வளர்ச்சியினதும் அபிவிருத்தியினதும் இயந்திரமாக இருக்கின்ற சிவில் சமூகத்தினதும் தனியார் துறையினரதும் விரிவாக்கல் போன்றவை ஆளுகையின் மறுசீரமைப்பினுள் உள்ளடக்கப்படுகின்றது. நல்லாட்சியின் உருவாக்கத்தின் இறுதி நோக்கம் சேவைகளினை வழங்குவதற்கு வினைத்திறனான முறைமையினை விருத்தி செய்வதன் மூலமாக பிரசைகளினை திருப்திப்படுத்துவதாக இருக்கின்றது. இந்த செயல்முறைகளில் உலக வங்கியானது பொது நிறுவனங்கள், பிரசைகள் மற்றும் தனியார் துறையினருக்கு இடையே ஒத்துழைப்பினை கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. ஆகையினால், நல்லாட்சிக்காக அவர்களுடைய பிரசைகளின் மனித உரிமைகள் மற்றும் சிறப்புரிமை போன்றவற்றினை அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்ற பல்வேறுபட்ட நிறுவன முறைமைகள், பொறிமுறைகள், மற்றும் நடைமுறைகள் அவசியமாகின்றது.

## இலத்திரனியல் அரசாங்கமும் இலத்திரனியல் ஆட்சியும்

இலத்திரனியல் அரசாங்கமானது (இ - அரசாங்கம்) பொது நிர்வாகத்தில் அண்மையில் பிரபலமடைந்திருக்கின்ற பதமாக இருக்கின்றதுடன் இது வழமையாக அரசாங்கத்தின் தொழிற்பாடுகளினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் (ICTs) பிரயோகமாக கூறப்படுகின்றது. இ - அரசாங்கமானது அவர்களின் பிரசைகளுக்காக அரசாங்கத்தின் தகவல் மற்றும் சேவைகளினை வழங்குவதற்காக இணையதளம் மற்றும் உலகளாவிய வலைத்தளங்களின் பயன்பாடாக இருக்கின்றது (பொது நிர்வாகத்திற்கான அமெரிக்க சமூகம் (ASPA) மற்றும் ஐக்கிய நாடுகள், 2002). இ - ஆளுகையினுடைய எண்ணக்கருவானது, எளிமையாகவும் நன்னெறி சார்ந்ததாகவும், பொறுப்புக்கூறத்தக்கதாகவும், பதிலளிக்கத்தக்கதாகவும் மற்றும் வெளிப்படையானதாகவும் உள்ள ஆட்சியினை கொண்டுவருவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் (ICT) பிரயோகமாக வரையறுக்கின்றது (Budhiraja, 2003; Heeks, 2001; Harris, 2004 cited in Pathak, 2005). மற்றொரு வகையில் கூறுவோமாயின் இ - ஆளுகையானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் பயன்படுத்தலில் ஆளுகையின் நடைமுறைகளின் முகாமைத்துவமாக இருக்கின்றதுடன் அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில், அரசாங்கத்திற்கும் பிரசைகளுக்கும் இடையில், பிரசைகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில், அரசாங்கத்திற்கும் தனியார் துறையினருக்கும் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்பினை மேம்படுத்துவதில் தொடர்புபடுகின்றது. ஆகையினால், இது இணையதளம் மற்றும் தொடர்புபட்ட தொழில்நுட்பங்களினைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் செயல்திறனினையும் அமுலாக்கத்தினையும் மேம்படுத்துவது தொடர்பானது மட்டுமல்ல இது அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில், அரசாங்கத்திற்கும்

பிரசைகளுக்கும் இடையில், பிரசைகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில், அரசாங்கத்திற்கும் தனியார் துறையினருக்கும் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்புகளினை மேம்படுத்துவதன் விளைவினையும் கொண்டுள்ளது.

**ஆளுகை நடைமுறைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் (ICT) பங்கு**

இலத்திரனியல் ஆளுகையின் பிரதான நோக்கமாக அரசாங்கத்தின் உற்பத்தித்திறனினை அதிகரிப்பதற்காக பொது நிர்வாகிகளின் முகாமைத்துவ வினைத்திறனினை மேம்படுத்துவதாக இருக்கின்றது. ஆகையினால், இது சிறப்பானதும் அதிகளவான வினைத்திறனான சேவைகளினையும் தொழிற்பாடுகளினையும் ஊக்குவிக்கின்றது, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துகின்றது, வரி செலுத்துபவர்கள் கணிசமான செலவினை சேமிப்பதற்கு பாதுகாப்பளிக்கின்றது. மக்களுக்கு அருகில் அரசாங்கத்தின் சேவைகளினை கொண்டுவருவதுடன் வாடிக்கையாளர்களின் அவசியப்பாடுகளினையும் உறுதிப்படுத்துவதை தெளிவுபடுத்துகின்றது. மேற்கூறப்பட்ட நன்மைகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கும் இயலுமையளிக்கின்றது. இது பிரசைகளினதும் சிறு தொழிற்பாடுகளினதும் விசேட தேவைகளினையும் அவசியப்பாடுகளினையும் மையப்படுத்தி அவர்களுடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் மீள்வடிவமைப்புக்கான அற்புதமான சந்தர்ப்பமாக சந்தேகத்திற்கு இடமின்றி காணப்படுகின்றது.

மேலும், அரச நிறுவனங்கள் பிரசைகளுக்கு அறிவினையும் சேவைகளினையும் பரப்புவதற்காக இணையதளங்களில் பல்வேறுபட்ட அரசாங்க தகவலினை வெளிப்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை ஊக்குவிக்கின்றன. உதாரணமாக அரசாங்கத்தினுடைய விதிகள் சட்டவாக்கங்கள், பயனுள்ள தீர்மானங்களும் தகவல்களும், உள்ளூர் , பிராந்திய, தேசிய, சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் போன்றவற்றின் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்கள் போன்றவையாகும்.

இது, அரசாங்கமானது அமைச்சுக்களின் அதிகாரிகளின் ஊழல், முறைகேடுகள், ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் பணியாளர்களினால் அரசதுறையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தரவினை வெளியிடுவதற்கு இயலுமையளிக்கின்றது. இது அரசாங்கங்களின் அக்கறைகளின் பலவீனங்கள் மற்றும் பலம் தொடர்பான பரந்துபட்ட ஆய்வினை கொண்டிருக்கின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளின் அடிப்படையில் தேர்தல்களில் தீர்மானங்களினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்ற பிரசைகளாக, பிரசைகளின் உரிமைகளின் மீதும் விளைவினை ஏற்படுத்துகின்றது.

அத்றகு மேலதிகமாக இணையத்தின் பாவனையானது ஆளுகையுடன் தொடர்புபட்ட விடயங்களில் ஆர்வமுள்ள ஏனைய தரப்பினர்களுடன் இடைத்தொடர்பிற்கு பிரசைகளுக்கு வாய்ப்புக்களினை உருவாக்குகின்றது. மேலும் அரசாங்கமானது கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கல் தொடர்பாக பொது விவாதங்களினை நடாத்துவதற்கு இயலுமையளிப்பதற்காக நேர்முக இடைத்தொடர்பாடல் அலைவழியினையும் (On- line Channels) திறக்கின்றது. இவ்வழியில், ஜனநாயக ஆட்சியின் உண்மையான அர்த்தத்தில் இருப்பதற்கு எதிர்பார்க்கின்றபடியினால் பிரசைகள் அரசாங்கத்தின் தீர்மானமெடுக்கின்ற செயல்முறைகளில் முனைப்பான பங்கு வகிப்பவர்களாக இருக்கின்றனர்.

நல்லாட்சியில், தகவல்கள் கையகப்படுத்தப்படுவதுடன் ஆக்கபூர்வமான பொது நோக்கங்களுக்கான தந்திரோபாயமாக பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் ஆட்சியானது தனிப்பட்ட ஆதாயங்களாக இருப்பதுடன் பிரசைகள் நசுக்கப்படுகின்றார்கள்.

**பொதுத்துறையில் ஊழல்**

'பொதுப் பணித்துறையினை தனிப்பட்ட ஆதாயங்களுக்காக பயன்படுத்துதல்' பொதுத்துறையில் ஊழலாக வரையறுக்கப்படுகின்றது (Bardhan, 1997 cited by Pathak R.D.. *2005*). பொதுத்துறையில் ஊழலின் பதத்தினை பின்வரும் சமன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலமாக விபரிக்கின்றார்.

ஊழல் = ஏகபோக உரிமை+ தன் விருப்புரிமை - வெளிப்படைத் தன்மை (ஆட்சியில்)

மேற்கூறப்பட்ட சமன்பாட்டுக்கு இணங்க, பொதுத்துறை ஊழலானது ஏகபோக உரிமை சூழ்நிலையின் கீழ் மலர்ச்சியுறும். இது பொதுப் பணியாளர்களின் தன் விருப்பு அதிகாரத்தின் அதிகரிப்பிற்கு இட்டுச்செல்கின்றது. இச்சூழ்நிலையின் கீழ் அரசினுடைய வெளிப்படைத்தன்மையானது குறைக்கப்படும்.

அரசியல் மற்றும் அதிகாரத்துவம் போன்றன ஊழலின் வகைப்படுத்தலில் இரண்டு வகைகளாக இருக்கின்றன. இரண்டு வகையான ஊழல்களும் பல நாடுகளில் தென்படுகின்றதுடன் அபிவிருத்தியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஊழலானது பல வடிவங்களில் தோன்றக்கூடும். மிகவும் பொதுவான நடைமுறையாக இலஞ்

சம் வழங்கப்படுகின்ற வரை சேவையினை தாமதப்படுத்தல் அல்லது மறுத்தலுடன் தொடர்புபடுகின்றது. கூட்டுச்சதியானது மற்றொரு செயற்பாடாக காணப்படுகின்றது. சலுகைகள், வரிகளின் குறை மதிப்பீடு, தண்டங்களினை அறவிடாதிருத்தல், மற்றும் அரச பதிவுகளின் சட்டவிரோதமான மாற்றங்கள் போன்றன ஊழலின் ஏனைய வடிவங்களாக உள்ளடக்கப்படுகின்றன. அச்சுறுத்திப் பணம் பறித்தலானது சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடன் அல்லது வரி சேகரிப்பாளர்கள் இலஞ்சத்தினை வற்புறுத்தி வாங்குவதற்காக நியாயமற்ற வற்புறுத்தல்களை மேற்கொள்வதுடன் தொடர்புபடுகின்றது. ஏனைய ஊழல் செயற்பாடுகளாக உறவினர்களுக்கு தகாதமுறையில் சலுகையளித்தல், அலுவலகத்தினை தவறான முறையில் பயன்படுத்துதல், பொதுமக்களின் பணத்தினை தவறான முறையில் பயன்படுத்துதல், பொது கொள்வனவில் நியாயமற்ற தீர்மானங்கள், தனிப்பட்ட ஆதாயங்களுக்காக அநீதியான மற்றும் நியாயமற்ற முறையில் வழங்குநருக்கு ஒதுக்கி கொடுத்தல் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.

## அபிவிருத்தியின் மீது ஊழலின் விளைவுகள்

ஊழலானது பொது முதலீட்டினை அதிக பெறுமதியானதாகவும் குறைவான போட்டித்தன்மை உடையதாகவும் உருவாக்குகின்றது, அரசாங்கத்தினுடைய வருமானத்தினையும் முதலீட்டுக்கான அதன் திறனினையும் குறைக்கின்றது, நாட்டினுடைய வளர்ச்சி ஆற்றலினையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியினையும் தடுக்கின்றது, மோசமான பொது உட்கட்டமைப்பினை ஏற்படுத்துகின்றது, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி கருத்திட்டங்கள் போன்ற (சமூக . ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த துறைகள்) முன்னுரிமைத் துறைகளில் இருந்து முதலீட்டினை முக்கியத்துவம் குறைந்த துறைகளுக்கு இடம் மாறுகின்றது என பல ஆராய்ச்சி கற்கைகள் குறிப்பிட்டிருந்தது. ஊழலானது நேரடியான வெளிநாட்டு முதலீட்டினையும் வெளிநாட்டு உதவியினையும் பாதிக்கின்றது. அரசியல்வாதிகளினாலும் பொதுத்துறை அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான ஊழல்களின் காரணமாக சர்வதேச நன்கொடையளிக்கின்ற முகவர்களினால் பல அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் வெளிநாட்டு உதவிகள் மற்றும் வசதிகள் இடைநிறுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன (Guardian Global Development 2012 மற்றும் 2013). இலவசமாக கருதக்கூடிய பொதுச்சேவைகளினை பிரசைகள் நாடுவதனையும் ஊழல் தடுக்கின்றது. இது மேலும் ஊழலாக மாறுகின்ற அதேவேளை கறுப்பு பணத்தினையும் உருவாக்குகின்றது.

எந்தவொரு நாடும் ஊழலுக்காக உயர்செலவினை கொடுக்க வேண்டியுள்ளது. இது தனிநபர் இழப்புக்கள், நேர இழப்பு, அபிவிருத்தி செலவு, அரசியல் செலவு மற்றும் பணிநெறிமுறைகளில் வீழ்ச்சியும் தேசிய பொருளாதாரத்தின் பெறுமதியினதும் செலவினதும் சிதைவு போன்றவற்றினை உள்ளடக்குகின்றது. (Pathak: 2005) அரசியல் ரீதியாக ஊழலானது சட்ட ஆளுகையில் அநீதியினையும் புறக்கணிப்பினையும் அதிகரிக்கின்றது. ஊழலானது மிகவும் கணிசமான பங்களிப்பு செய்கின்ற காரணியாக இருக்கின்றது. இது தேசத்தினதும், சமூகத்தினதும், அரசாங்கத்தினதும் மற்றும் பொருளாதாரத்தினதும் வறுமைக்கும் குறை அபிவிருத்திக்கும் தொடர்ந்து இட்டுச் செல்லுகின்றது. ஊழலின் காரணமாக ஒவ்வொரு நபரும் துன்பப்படுகின்றனர். ஆனால் அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் வறியவர்களும் மிகவும் வறியவர்களும் மிக மோசமாக இருக்கின்றனர். இவ் அனைத்து காரணிகளும் கீழ்நிலை அபிவிருத்திக்கும், சமூக நெருக்கடிகளுக்கும் மற்றும் சமூகத்தில் அமைதியின்மைக்கும் இட்டுச் செல்கின்றது.

ஊழலானது அதேபோல் மேலும் பல பிரச்சினைகளினை உருவாக்குகின்றது. இது அபிவிருத்திக்காக மிகவும் அவசியப்படுகின்ற வருவாயினதும் மனிதத் திறமையினதும் இழப்பிற்கும், பொதுக் கொள்கைகளுக்கான முன்னுரிமைகள் திரிபுபடுத்தப்படுதலுக்கும், பொது மக்களின் அக்கறைகளுக்கு அப்பால் அரிய வளங்களின் அப்புறப்படுத்தலுக்கும் மற்றும் வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே இடைவெளியினை அதிகரிப்பதற்கும் இட்டுச்செல்கின்றது. இறுதி விளைவானது அபிவிருத்தி செயல்முறைகளின் ஒட்டுமொத்த சிதைவுறுத்தலுக்கு மேலதிகமாக அரசியல் உறுதியற்ற நிலை காணப்படுகின்றது. ஆகையினால், சந்தேகத்திற்கு இடமின்றி, ஊழலானது அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் அபிவிருத்திப் பாதையின் மீது தீவிரமான தடையாக இருப்பதாக நிரூபித்திருக்கின்றது.

## இலத்திரனியல் ஆளுமையுடன் ஊழலுக்கு எதிராக போரிடுதல்

பல ஆராய்ச்சிகளின் மூலமாக வெளிவந்ததற்கு இணங்க சமூகத்தில் வினைத்திறனான இலத்திரனியல் ஆட்சி மற்றும் ஊழலில் கீழ் நோக்கிய போக்கு ஆகியவற்றிற்கு இடையிலான இயற்கையாக அமைந்த தொடர்பு காணப்படுகின்றது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானது பாரம்பரிய தகவல் முகாமைத்துவ முறைமைகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது பல நன்மைகளினை வழங்குகின்றது. "இலத்திரனியல் அரசாங்கமானது அரசாங்கத்தின் செயற்பாடுகளினை

யும் தகவல்களினையும் பொது மக்கள் இலகுவாக அடைவதற்கான வழியினை வழங்குகின்றதுடன் விலைமனு கோரல் மற்றும் பாதீடிடல் போன்ற பொதுத்துறைகளின் அனைத்து அரசாங்க பரிமாற்றங்களும் வெளிப்படைத் தன்மையாக இருக்கும். அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற எந்தவொரு சட்ட விரோதமான செயற்பாடுகளினையும் பொதுமக்கள் இலகுவாக கண்டுபிடிக்கக் கூடியதாக இருப்பதனால் இது ஊழலினை குறைப்பதற்கு இட்டுச் செல்லும்", http://www.stonecps.org/2009/07/e-governance-and-corruption-e.html.

இலத்திரனியல் ஆட்சியினது அதிகளவு அடையக்கூடிய தன்மை, பரந்தளவிலான அணுகுமுறை, உடனடி தொடர்பாடல் வசதி மற்றும் தகவல்களில் பரப்புகை, தன்னியக்க பதிவு பேணல், முறைப்படியான வகைப்படுத்தல்களும் தரவு மீட்பும், சிறப்பான அறிவு முகாமைத்துவம் மற்றும் தகவல் பகிர்தல் போன்றவற்றினையும் அனுமதிக்கின்றது (Pathak, 2005). இந்த சிறப்புகள் அரசாங்கத்திற்கும் பிரசைகளுக்கும் இடையிலான உறவின் ஊடாக நடாத்தப்படுகின்ற பொது நிர்வாகத்தின் முறையினை மாற்றுவதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளது. இந்த புதிய சாத்தியப்பாடுகள் ஊழலுடன் போரிடுவதற்கு சக்திவாய்ந்த கருவியினை பொது நிர்வாகத்திற்கு வழங்குவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக வழங்கப்பட்டது. குறிப்பிட்ட தீர்மானம் அல்லது செயற்பாடுகளுக்கான அவ்வாறான பொறுப்புக்கள் இடர்பாடின்றி அடையாளப்படுத்தப்பட முடியும். அப்பொழுது நிர்வாக செயற்பாடுகள் மிகவும் வெளிப்படைத்தன்மையானதாக காணப்படும்.

இலத்திரனியல் ஆட்சியானது ஊழலுக்கு எதிராக போரிடுவதற்கான ஆற்றலினை கொண்டுள்ளமைக்கு இது சான்றாக இருக்கின்றது. இந்தியாவானது பல இலத்திரனியல் கருத்திட்டங்களினை அமுல்படுத்தியதன் ஊடாக ஊழலினை குறைப்பதில் வெற்றியடைந்திருந்தது. முதன்மையான விழிப்பு நிலை ஆணைக்குழுவின் இணையதளமானது (Chief Vigilance Commission-CVC) அரசாங்கத்தில் ஊழலினை கட்டுப்படுத்துவதற்கு பொறுப்புக்களுடன் ஒப்படைக்கப்பட்ட அரச திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் ஆளுகையின் மிகவும் புத்தாக்கமுள்ள பரிசோதனைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. அவ் இணையதளத்துடன் தொடர்புபட்ட விபரங்கள் பின்வருமாறு...

*"இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலினைத் தொடர்ந்து CVC ஆனது ஓர் அரச சேவையினை உருவாக்கியதுடன் பொது மக்களுடன் ஊழல் தொடர்பான தகவலினை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு இணையதளத்தினை ஆரம்பித்தது. இணையதளத்தின் சிறப்புக்களாக அதன் பங்கு, பொறுப்புக்கள் மற்றும் ஊழலுடன் போரிடுவதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பான தகவல் உள்ளடக்கப்படுகின்றது. அந்த இணையதளமானது பழிவாங்கல் அச்சுறுத்தலற்ற முறைப்பாடுகளினை பதிவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக பிரசைகளுக்கு வழிகாட்டுகின்றது. இணையதளத்திலுள்ள ஏனைய தகவல்களாக முறைப்பாடுகளினை எடுத்துக்கொள்வதற்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்ற பல்வேறுபட்ட திணைக்களங்களின் நியமிக்கப்பட்ட அலுவலகளின் பட்டியலினையும் மற்றும் வெளியிடப்படுகின்ற ஊழல் புள்ளிவிபரங்களினையும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. மிகவும் முக்கிய அம்சமாக இணையமானது ஊழலின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டிருக்கின்ற இந்திய நிர்வாக சேவை மற்றும் வருவாய் சேவை அலுவலர்களின் ஊழல் பட்டியல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஊழல் செய்கின்ற அரச சேவையாளர்களுக்கு எதிராக முறைப்பாடுகளினை மேற்கொள்வதற்கான இவ் இலகு நடைமுறை மற்றும் இணையத்தில் பெயரின் வெளியீடு தோன்றக்கூடிய நிலையானது மற்றவர்களுக்கு மிகவும் எச்சரிக்கையாக தொழிற்பட்டது. இந்த முன்னெடுப்பானது சிரேஷ்ட அலுவலர்கள் மத்தியில் பெருமளவு சீற்றத்தினை உருவாக்கியிருந்த போதிலும் பொது மக்களினால் நன்கு வரவேற்பளிக்கப்பட்டது" (Pathak: 2005).*

ஆராய்ச்சியாளரின் கூற்றுக்கு இணங்க, குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயரிடலானது எச்சரிக்கக் கூடிய விளைவினை ஏற்படுத்துமென பதில் அளித்தவர்களில் 83% மானவர்கள் நம்பினார்கள். அத்துடன் இந்துஸ்தானிய டைம்ஸ் பத்திரிகைகளின் ஆய்வில் பதிலளித்தவர்களில் 90% மானவர்கள் இதனை வரவேற்றார்கள்.

*"ஊழலினால் களங்கப்படுத்தப்பட்டுள்ள சில அலுவலர்கள் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கக்கூடாத முக்கியமான பதவிகளில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டனர் என ஒரு முக்கிய உண்மையினை இது வெளிப்படுத்தியது. இந்த இணையதளத்தின் மற்றொரு நன்மையாக வெகுசன ஊடகங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பொதுமக்களுக்கு கூடுதலான முக்கிய தகவல்களினை கடத்துவதற்கு இயலுமாக இருந்து கொண்டுவருகின்றது. இது குறைந்தளவில் கணனிகளினையும் இணையத்தினையும் கொண்டுள்ள இந்தியாவின் இப்பிரச்சினையினை ஈடுசெய்*

*திருக்கின்றது. இது பொது மக்களுக்கு தகவலினை கிடைக்கக் கூடியதாக செய்வதற்கான ஒரு துணிச்சலான முயற்சியாக சந்தேகத்திற்கு இடமின்றி காணப்படுகின்றதுடன் மேலும் பெரும் எண்ணிக்கையிலான அதிகாரிகளினை மனம்போன போக்கில் போகவிடுவதில் இருந்து இது எச்சரிக்கை செய்கின்றது (Ibid: 2005)".*

மேலுள்ள விடயமானது பொதுத்துறையில் ஊழலிற்கு எதிராக போரிடுவதற்கான ஒரு பலனளிக்கத்தக்க தீர்வாக வழங்கப்படுகின்றது. இது மேலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வினைத்திறனான பாவனையானது ஒழுங்குகளினையும் நடைமுறைகளினையும் எளிமைப்படுத்துகின்றது, அதிகளவு வெளிப்படைத்தன்மையினை உருவாக்குகின்றது, பொதுமக்களுக்கு அதிகாரமளிப்பதுடன் பொதுத்துறை பணியாளர்களுக்கு வினைத்திறனான முறையில் தண்டனையினை வழக்குவதற்கு ஏதுவாகின்றது என்பது இங்கு சான்றாக காணப்படுகின்றது.

## முடிவுரை

இந்தியாவில் காணப்படுகின்ற மேலுள்ள உதாரணமானது ஊழலினை குறைப்பதில் இலத்திரனியல் ஆட்சியானது மிகவும் பலனளிக்கத்தக்க கருவியாக காணப்படுகின்றது என நிரூபிக்கின்றது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மை இல்லாத பொழுது ஊழலானது மலர்ச்சியுறுகின்றது. ஆட்சி தொடர்பான தரமான தகவல்களின் கிடைப்பனவானது வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்கின்றது. இலத்திரனியல் ஆட்சி கருத்திட்டங்கள் அரசாங்கத்தின் தொழிற்பாடுகள் தொடர்பாக தகவலின் கிடைப்பனவினை உருவாக்குவதன் மூலமாக வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்கின்றது. வாய்ப்புக்கள் குறைவடைகின்ற பொழுது ஊழலானது உருவாக்கப்படுகின்றது. அரசாங்கமானது ஏகபோக உரிமையினை கொண்டிருந்தால், பிரசைகளினால் எதிர்பாக்கப்படுகின்ற சேவைகளினை அதிகாரிகள் தாமதப்படுத்த அல்லது தடுக்க முடியும். இது ஊழல் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களினை உருவாக்குகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊழலின் குறைப்பு பிரசைகளுக்கு சேவைகளின் வழங்கலின் வேகத்தினை அதிகரிக்கின்றது. ஊழலினை ஒழித்தல் நல்லாட்சிக்கு விளைவாகின்றது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு அப்பால், பலமான அரசியல் ஆதரவும் ஊழலின் குறைப்பிற்கு அவசியப்படுகின்றது. அரசியலில் வெளிப்படைத்தன்மை, தேர்தல் முறைமையில் மாற்றமானது அரசியல் தலைவர்களாக நேர்மையான தலைவர்களை நியமிப்பதற்கு ஊக்குவிக்கின்றது. அரசியல்வாதிகளுக்கும் பொதுத்துறை பணியாளர்களுக்கும் உயர்மட்டத்திலான ஊதியமானது பொதுத்துறையில் அரசியலிலும் நிர்வாகத்துறையிலும் ஊழலின் குறைப்பு தொடர்பான தாக்கத்தினை கொண்டிருக்கக்கூடிய மற்றைய சில பரிந்துரைகளாக இருக்கின்றன.

## உசாத்துணை நூல்கள்


1. American Society for Public Administration (ASPA) and United Nations, 2002. http://unpan1.un.org/intradoc/groups/public/documents/un/unpan021547.pdfretrived date on 2nd February 2015.
2. http://www.stonecps.org/2009/07/e-governance-and-corruption-e.html, retrieved on October 27, 2009.
3. Pathak R. D. (2005) "Role of E Governance in Tackling Corruption and Achieving Societal Harmony: Indian Experience", a paper was presented at the Conference of the Network of Asia Pacific Schools and Institutes of Public Administration and Governance held in 2005.
4. United Nations Development Program (1997), Governance & Sustainable Human Development. A UNDP Policy Document
5. Daniel Kaufmann, AartKraay and Massimo Mastruzzi (2010), The World wide Governance Indicators: Methodology and Analytical Issues, World Bank, September, 2010 http://info.worldbank.org/governance/wgi/pdf/WGI.pdf retrieved on 5th February 2015.
6. World Bank. 1992. Governance and development. Washington, DC : The World Bank. http://documents. worldbank.org/curated/en/1992/04/440582/governance-development retrieved on 02nd January 2015
7. Guardian Global Development (2013) http://www.theguardian.com/global-development/2014/oct/13/uk-and-international-donors-suspend-tanzania-aid-after-corruption-claims retrieved on 2nd January 2015
8. Guardian Global Development (2012), http://www.theguardian.com/global-development/2012/oct/31/uk-aid-ugandan-prime-minister-fraudretrieved on 2nd January 2015


■

# சிறுவர் உரிமை மீறல்கள்: இலங்கைக்கான விசேட மேற்கோள்களுடன் தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள்

மாசி - 2015

பேராசிரியர்
டிக்கிரி நிமால் ஹேரத் *

பொருளியல் துறை
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

*பொழிப்பு*

*2007 இல் உலகளாவிய ரீதியில் பதிவு செய்யப்படாத குழந்தைப் பிறப்புக்களில் கிட்டத்தட்ட அரைப் பகுதியானது தென்னாசியாவில் பதிவாகியது. உலகத்தில் 18 வயதிற்கு முன்னர் திருமணமாகிய அனைத்து இளம் பெண்களில் அரைப்பகுதியினர் தென்னாசியாவில் வசிக்கின்றனர். தென்னாசியாவின் அனைத்து பிள்ளைகளிலும் 13 வீதத்தினர் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். கடத்தல், பாலியல் சுரண்டல் மற்றும் துஷ் பிரயோகம் போன்றன இந்த பிராந்தியத்தில் ஏனைய பிரதான பிரச்சினைகளாக இருக்கின்றன. சிறுவர் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தது. இந்த ஆய்வானது (அ) தெரிவுசெய்யப்பட்ட சிறுவர் பிரச்சினைகளுக்கான இடைத் தொடர்பினையும் (ஆ) தெரிவு செய்யப்பட்ட சிறுவர் உரிமை மீறல்களினையும் தென்னாசியாவில் சிறுவர் பிரச்சினைகளினை தவிர்ப்பதற்கான சட்ட வழிமுறைகளினையும் ஆராய்கின்றது. ஆய்வானது தென்னாசியா மற்றும் ஏனைய அபிவிருத்தி அடைந்துவருகின்ற பொருளாதாரங்களுடன் தொடர்பு பட்ட துணைநிலை தரவுகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.*

*பதிவுசெய்யப்படாத பிறப்புக்களானது சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் தொழிலாளர் பிரச்சினைகளினை மோசமாக்குகின்றது என ஆய்வில் இருந்து வெளிவருகின்றது. வறுமையானது உரிய காலத்திற்கு முன்னரான திருமணம் மற்றும் சிறுவர் தொழிலாளர் போன்றவைகளின் தாக்கத்திற்கான மற்றொரு காரணமாக இருக்கின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிறுவர் உரிமை மீறல்கள், பதிவு செய்யப்படாத குழந்தைகளின் பிறப்பு, சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் தொழிலாளர் போன்ற சந்தர்ப்பங்கள் குறைந்த வீதத்திலேயே காணப்படுகின்றது. இலங்கையானது அவ்வப்போது சிறுவர் உரிமை தொடர்பாக விசேட சட்டவாக்கத்தினை கொண்டுள்ளது. சில பிரச்சினைகள் தொடர்பாக சில குறிப்பிட்ட நாடுகள் சட்டங்களினை கொண்டிருக்கவில்லை என ஆய்வானது அடையாளப்படுத்துகின்றது. பங்களாதேஷில் திருமண பாலியல் வல்லுறவு, பூட்டானில் பிறப்புக்களின் பதிவு போன்றவற்றினை சில உதாரணங்களாக கூற முடியும். சில நாடுகள் அவ்வாறான சட்டங்களினை கொண்டுள்ள போதிலும் கலாசார, பாரம்பரிய அபிப்பிராயங்கள் மற்றும் சமய ரீதியிலான கண்ணோட்டங்கள் பொதுச்சட்டங்களினை அமுலாக்குவதற்கு அனுமதிப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில், போதிய பாதுகாப்பினை வழங்குவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு சட்டமானது போதியதாக இல்லை. இந்தியாவில் குடும்பத்தில் மற்றும் பாடசாலையில் தண்டிக்கப்படுதல் அத்துடன் மாலைதீவில் பாடசாலைகளில் தண்டிக்கப்படுதல் போன்றவற்றினை உதாரணமாக கூறலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒன்று கூடலுக்கான பொதுமன்றத்தினை உருவாக்குவதும் தனிப்பட்ட அனுபவங்களினையும் பிரச்சினைகளினையும் மீளாய்வு செய்வதும் ஆரோக்கியமானது.*

*முக்கிய பதங்கள்:* சிறுவர் உரிமைகள், சிறுவர் தொழிலாளர், உரிய காலத்திற்கு முன்னரான திருமணம், பிறப்புக்களின் பதிவு மற்றும் அரசின் பங்கு.

## 1. அறிமுகம்

சிறுவர் உரிமை மீறல்களானது உலகத்தின் எல்லா பகுதிகளிலும் நடக்கின்றது என ஆய்வுகள் காட்டுகின்றன. இப்பிரச்சினையினை கலந்துரையாடுவதற்கு அநேகமாக அனைத்து அரசுகளும் அக்கறை செலுத்துவது கவனிக்கத்தக்கது. சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைக்கு தென்னாசியா உட்பட 192 நாடுகள் அதிகாரபூர்வமாக ஒப்புதல் அளித்திருந்தன. இருந்தபோதிலும் பிரச்சினையானது பன்முகத்தன்மை அடையப்பட்டிருப்பதுடன் இது அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அடைந்து

* பேராசிரியர் டிக்கிரி நிமால் ஹேரத் அவர்கள் தற்பொழுது ஓய்வு விடுமுறையில் பியுஜி பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையின் தலைவராக கடமையாற்றுகின்றார்

வருகின்ற நாடுகளிலும் மேற் கொள்ளப்பட்ட பல ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டது. Pintheiro (2006) அவர்களினால் சுட்டிக்காட் டப்பட்டதற்கு இணங்க சிறுவர்க ளுக்கு எதிரான வன்முறைகள் நியாயப்படுத்தப்படக் கூடியதல்ல. அத்துடன் சிறுவர்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளும் தடுக் கப்படக்கூடியது. சிறுவர் தொழிலா ளர்கள் குறைந்து கொண்டு செல் கின்ற அதேவேளை ஆரவாரமற்ற முறையில் மட்டுமே காணப்படுகின் றது என சர்வதேச தொழிலாளர் அமைப்பு - ILO (2010) ஆனது கூறுகின்றது. 2004-2008 வரையான காலப்பகுதியில் மூன்று வீதத்தி னால் குறைக்கப்பட்ட அதேவேளை 2000-2004 காலப்பகுதியில் குறைவு வீதமானது பத்து வீதமாக காணப் பட்டது. 15-17 வயதிற்கு இடைப் பட்ட கூட்டத்தினரிடையே 20 வீதமாக (52 மில்லியனில் இருந்து 62 மில்லியனாக) சிறுவர் தொழிலாளரி னது அதிகரிப்பானது எச்சரிக்கை விடுப்பதாக இருந்தது என அதே அறிக்கையானது சுட்டிக்காட்டுகின் றது. தென்னாசிய நிலைமையினை கருத்தில் எடுக்கையில் 2007 இல் உலகளாவிய ரீதியில் 51 மில்லியன் பதியப்படாத குழந்தை பிறப்புக்க ளில் கிட்டத்தட்ட அரைப் பகுதியினர் தென்னாசியாவில் இருந்து பதிவா கியது. உலகளாவிய ரீதியில், 18 வயதிற்கு முன்னர் திருமணமான 64 மில்லியன் இளம் பெண்களில் அரைப்பகுதியினர் தென்னாசியாவில் வசிக்கின்றனர். உலக சிறுவர்களில் (கிட்டத்தட்ட 44 மில்லியன்) பதின் மூன்று வீதத்தினர் தென்னாசியாவில் சிறுவர் தொழிலாளர்களாக ஈடுபடுத் தப்படுகின்றனர். கடத்தல், பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் போன்றன இப்பிராந்தியத்தில் பிரதான சிறுவர் பிரச்சினைகளாக இருக்கின்றன (UNICEF 2009).

ஆகையினால், சிறுவர் உரிமை மீறல்களானது தற்பொழுதும் முனைப்புடன் காணப்படுகின்றது. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் வலுவூட்டுவதற்குமான பரிகார வழிமுறைகள் மிகவும் போதியதற்ற தாக காணப்படுவது இதற்கு காரண மாக இருக்கக்கூடும். முக்கியமாக வன்முறையினை தடுப்பதற்கு அரசினால் உருவாக்கப்பட்டுள்ள சட்ட கட்டமைப்பானது போதியதற் றதாக இருக்கக்கூடும் அல்லது சட்ட வாக்கங்கள் முறைப்படியாக அமுலாக்கப்படாமல் புத்தகங்களில் மட்டுமே இடப்பட்டதாக இருக்கக் கூடும். எல்லாவற்றுக்கும் மேலாக, சிறுவர் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததாக காணப்படுகின்றன. இந்தப் பின்ன

**அட்டவணை 1**
**தென்னாசிய நாடுகளின் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை அபிவிருத்தி குறிகாட்டிகள்**

| நாடு | 2013 இல் ஆளுக்குரிய மொத்த தேசிய வருவாய் (2011 இல் கொள்வனவுச் சமவலு டொலரில் நிலையாக) | வயது வந்தோர் படிப்பறிவு வீதம்(15வயதும் அதற்கு மேற்பட்டோரும்) 2005-12[1] | மனித அபிவிருத்தி சுட்டி (2013) | கினியின் சுட்டி (%), 2003-12[1] | வறியவர்கள் % நாளொன்றுக்கு $ 1.25 [a] இற்கு குறைவு 2002-12[1] | 5-14 வயதிற்கு இடைப்பட்ட வேலை செய்கின்ற பிள்ளைகள்(%), 1999-2007[2] |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 5,150 | 62.8 | 0.586 | 33.9 | 32.7 | 12.0 |
| பாகிஸ்தான் | 4,652 | 54.9 | 0.537 | 30.0 | 21.0 | 8.2 |
| பங்களாதேஷ் | 2,713 | 53.7 | 0.558 | 32.1 | 43.3 | 13.0 |
| பூட்டான் | 6,775 | 52.8 | 0.584 | 38.1 | 1.7 | 19.0 |
| நேபாளம் | 2,194 | 57.4 | 0.540 | 32.8 | 24.8 | 31.0 |
| இலங்கை | 9,250 | 91.2 | 0.750 | 36.4[b] | 7.0[a] | 8.0 |
| மாலைதீவு | 10,074 | 98.4 | 0.698 | 37.4 | 1.5 | கி. இல்லை |
| தென்னாசியா | 5,195 | 62.9 | 0.588 | - | 32.9[a] | 13.0 |
| உலகம் | 13,723 | 81.2 | 0.702 | - | - | - |

குறிப்பு : a - 2002-2011 காலப்பகுதியுடன் தொடர்புடையது.

b - இலங்கையின் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளுக்கு இணங்க, 2005 இல் கினியின் குணகத்தின் பெறுமதி 47 வீதமாகவும், 2012/2013 இல் 48 வீதமாகவும், 2009/2010 இல் 49 வீதமாக இருக்கின்றது (http://www.statistics.gov.lk/HIES/).

*ஆதாரம்: [1]- UNDP (2014); a -UNDP (2013); [2]- UNICEF (2009)*

அட்டவணை 2

தென்னாசிய நாடுகளின் தெரிவுசெய்யப்பட்ட சனத்தொகை குறிகாட்டிகள்

| நாடு | பங்களாதேஷ் | இந்தியா | நேபாளம் | பாகிஸ்தான் | இலங்கை | மாலைதீவு | பூட்டான் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சனத்தொகை (மில்லியன்) (2013)[1] | 156.6 | 1252.1 | 27.8 | 182.1 | 21.3 | 0.3 | 0.8 |
| 14 வயதிற்கு கீழ்ப்பட்ட சனத்தொகை (மொத்தத்தின் வீதமாக), 2010-14[b] | 30 | 29 | 35 | 34 | 25 | 29 | 28 |
| மொத்த இடைநிலை பதிவு வீதம் 2003-2012 (%) | 51.0 | 69.0 | 66.0 | 37.0 | 99.0 | 72.0 | 74.0 |

*குறிப்பு : a- 2005 இல்*

*b– http://data.worldbank.org/indicator/SP.POP.0014.TO.ZS*

*ஆதாரம்: UNDP (2011); [1.] UNDP (2014)*

ணியில் (அ) கிடைக்கக்கூடிய தரவுகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் பிரச்சினைகளின் இடைத்தொடர்புகளினை ஆய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் (ஆ) தென்னாசியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் உரிமை மீறல்களினையும் சிறுவர் பிரச்சினைகளினையும் தவிர்ப்பதற்கு அமுல்படுத்தப்படுகின்ற சட்ட வழிமுறைகள் போன்றவை தொடர்பாகவும் ஆய்வினை மேற்கொள்ள முனைகின்றது (பல மக்கள் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்ற ஆப்கானிஸ்தான் தவிர). இது தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் பிரச்சினையுடன் தொடர்புபட்டவற்றினையும் ஒவ்வொரு அரசாங்கமும் சிறுவர் பிரச்சினையினை வெற்றி கொள்வதற்கு அவர்களினது பங்களிப்புக்களினையும் புரிந்துகொள்வதற்கு இயலுமானதாக இருக்கின்றது. இந்த ஆய்வானது துணை நிலைத் தரவுகளின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன் தரவினைப் பகுப்பாய்வு செய்வதில் பொது ஏகபரிமாணப் பிற்செலவு மாதிரியுருக்கள் மதிப்பிடப்பட்டன.

## 2. தென்னாசிய நாடுகளில் நிலைமை

மொத்த சனத்தொகையினைப் பொறுத்தவரையில் தென்னாசிய நாடுகளில் உயரளவில் சமச்சீரற்றதாக காணப்படுகின்றது. தற்பொழுது, தென்னாசிய மக்கள் வறுமை, படிப்பறிவு, வேலைவாய்ப்பின்மை, வருவாயின் பரம்பலில் சமச்சீரின்மை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சுற்றாடல் மாசு, சிறுவர் உழைப்பின் சுரண்டல் ஏனைய சிறுவர் பிரச்சினைகள் போன்ற பல சமூக பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளினை கொண்டுள்ளார்கள். இந்த நாடுகளில் சில அபிவிருத்தி குறிகாட்டிகள் அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற சில நாடுகள் படிப்பறிவு, மனித அபிவிருத்தி, மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவற்றில் ஓரளவு முன்னேற்றகரமாக (எவ்வாறாயினும் அந்த இரண்டு நாடுகளிலும் வருவாயின் சமச்சீரின்மை மிக உயர்வாக காணப்படுகின்றது) காணப்படுகின்ற பொழுதிலும் வறுமையும் படிப்பறிவும் இப்பிராந்தியங்களில் மிக உயர்வாக காணப்படுகின்றது. மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினரிடையே காணப்படுகின்ற (அட்டவணை 2) குறைவான கல்வி மட்டமானது பொருளாதார அவல நிலைக்கு முக்கிய காரணியாக காணப்படுகின்றதுடன் இது உயர் பிறப்பு வீதத்தினதும் வறுமைக்கும் பின்னணியாக அமைந்த காரணியாக காணப்படுகின்றது. சிறுவர் உரிமை மீறல்களானது அவ்வகையிலான கட்டமைப்பினுள்ளும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

## 3. மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பிரச்சினைகள்

பல மனித உரிமை கருவிகளினுள் ஐந்து முக்கிய மனித உரிமை கருவிகள் காணப்படுகின்றன (UNDP 2000). அவற்றில் உரிமைகளுக்கான சர்வதேச சட்ட மூலமானது மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனம் (UDHT), குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR),

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR), ஏனையவை உள்ளடங்களாக இன பாகுபாட்டின் அனைத்து வடிவங்களினையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை, பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களினாலான பாகுபாட்டினையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை (CEDAW), துன்புறுத்தல் மற்றும் ஏனைய கொடுமைகள், மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுபடுத்துகின்ற கையாளுகை அல்லது தண்டனைக்கு எதிரான உடன்படிக்கை (CAT) மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை (CRC) போன்றவற்றினை உள்ளடக்குகின்றது. ஆகையினால், சிறுவர் உரிமைகள் தொடர்பான கருவியானது முக்கியமானதாக இருக்கின்றது.

உலகத்தில் பல வகையான உயிரினங்கள், ஊர்வன, பறவைகள், பூச்சியினங்கள், மீன் போன்றன அவற்றில் சிலவாகும். நாம் மனிதனல்லாத உயிரினங்களினை எடுக்கின்ற பொழுது, மனிதனுடன் ஒப்பிடுகின்ற பொழுது அவை சில குறிப்பிட்ட பண்புகளினை கொண்டுள்ளன. மனிதனல்லாத உயிரினங்கள் பிறந்தவுடன் சுயாதீனமாக வாழ்வதற்கு மனிதர்களிலும் பார்க்க குறைந்த காலத்தினை எடுக்கின்றன. அவை நடப்பதற்கு, பறப்பதற்கு, இரை தேடித் திரிவதற்கு மற்றும் ஏனையவற்றின் உதவியில்லாமல் சுயாதீனமாக வாழ்வதற்கு இயலுமாக இருக்கின்றன. ஆனால் மனிதன் அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஒரு குழந்தை, ஏன் ஐந்து வயது நிரம்பிய பிள்ளை கூட சுயாதீனமாக வாழ முடியாது. அவள்/அவன் உணவு தயாரித்தல், உடை அணிதல் போன்வற்றினை செய்ய முடியாது. அதுவே சிறுவர் உரிமையினை பாதுகாப்பதற்கான ஒரு காரணமாக இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டளவில், உலகத்தில் 18 வயதுக்கு குறைந்த 2,219 மில்லியன் பிள்ளைகள் இருந்தனர். அவற்றில் தென்னாசிய நாடுகளில் வாழ்ந்த 621 மில்லியன் பிள்ளைகள் (ஆப்கானிஸ்தான் உட்பட) 28 வீதத்தினை உள்ளடக்கினர் (UNICEF 2011). தற்பொழுது உலகத்திலுள்ள பிள்ளைகள் ஏராளமான பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் பிறப்புக்களில் பல பதியப்படுவதில்லை. அவர்கள் உடல், உள ரீதியாக துன்புறுத்தல்களினை அனுபவிக்கின்றதுடன் வன்முறைகள், சுரண்டல், மற்றும் துஷ்பிரயோகங்களினையும் அனுபவிக்கின்றனர். அவர்கள் போராட்டங்களுடன் எதிர்த்து நிற்பதற்கு, அவர்களின் தொழிலினை விற்பதற்கு, பாலியல்ரீதியில் துஷ்பிரயோகங்களுக்கு அல்லது வலுக்கட்டாயமான தண்டனைக்கு பழக்கப்படுகின்றார்கள். அவர்கள் திருமண பந்தத்தில் சிக்குவதற்கு வற்புறுத்தப்படுகின்

**அட்டவணை 3**

**சிறுவர் பாதுகாப்புக் குறிகாட்டிகள் (%)**

| நாடு | 2011 இல் மொத்த பிறப்பு பதிவு | சிறுவர் திருமணம் 2005-2013 | | சிறுவர் தொழிலாளர் (5-14 வயதிற்கு இடைப்பட்டவர்கள்) |
|---|---|---|---|---|
| | | (15வயதளவில் திருமணம்) | (18 வயதளவில் திருமணம்) | |
| பங்களாதேஷ் | 31 | 29 (2011) | 65 (2011) | 13 (2006) |
| பூட்டான் | 100 (2010) | 6 (2010) | 26 (2010) | 3 (2010) |
| இந்தியா | 84 | 18 (2005-6) | 47 (2005-6) | 12 (2005-6) |
| மாலைதீவு | 93 (2009) | 0 (2009) | 4 (2009) | n.a |
| நேபாளம் | 42 | 10 (2011) | 41 (2011) | 34 (2008) |
| பாகிஸ்தான் | 34 (2012-13) | 3 (2012-13) | 21 (2012-13) | n.a |
| இலங்கை | 97 (2006-7) | 2 (2006-7) | 12 (2006-7) | 8 (1999-2007) |
| தென்னாசியா | 71 | 17 | 45 | 12 |

*ஆதாரம் : UNICEF இன் உலகளாவிய தரவுத்தளம், http://www.childino. org/labour_countrydata. இணைய முகவரியில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது*

றனர் அல்லது வேலைகளுக்கு பயன்படுத்தும் சூழ்நிலைகளுக்காக கடத்தப்படுகின்றதுடன் அவர்கள் அவசியமற்ற முறையில் சிறைவைக் கப்படுகின்றனர் அல்லது தடுத்து வைக்கப்படுகின்றனர். அவ்வாறான சூழ்நிலையில் சிறுவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன (UNICEF 2009).

*3.1 தென்னாசியாவில் சிறுவர் உரிமைகளின் மீறல் :* பதியப்படாத பிள்ளை பிறப்புக்கள், சிறுவர் திரு மணம் மற்றும் சிறுவர் தொழிலாளர்

**பிறப்புக்களின் பதிவு**

பிறப்புக்கள் பதியப்படாமை, வேலை யில் ஈடுபடுத்துதல், உரிய காலத் திற்கு முன்னரான திருமணம் போன்றன சிறுவர் உரிமைகளினை மீறுவதாகும். (1990 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக் கிய நாடுகள் உடன்படிக்கையின் பிரிவு 7.1 மற்றும் 32.1 இற்கு இணங்கவும் மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலு மான பாகுபாட்டினை நீக்குவது தொடர்பாக உடன்படிக்கையின் உறுப்புரை 16.2 இற்கு இணங்க வும்). பிறப்புப் பதிவானது இலவச மானதாக இருக்க வேண்டியதுடன் பிள்ளையின் வயதிற்கான சான் றினை வழங்குகின்றது. பிள்ளைக்கு இது உதவியாக இருப்பதுடன் பாட சாலையில் அனுமதிக்கப்படுவதற்கு, ஆள் அடையாள அட்டையினையும் கடவுச்சீட்டினையும் பெற்றுக்கொள்வ தற்கு, வாக்காளர் பதிவேட்டில் பதி வினை இடுவதற்கு, திருமணம் செய்துகொள்வதற்கு, தேசியத்தினை நிரூபிப்பதற்கு, பெற்றோர்வழிக் குரிய சொத்தினை உரிமை கோரு வதற்கு (மற்றொரு மனித உரிமை), வங்கிக் கணக்குகளினை திறப்ப தற்கு, முறைப்படியான தடுப்பு மருந்தேற்றலுக்கு அவசியமானது. ஆகையினால், பிறப்பின் பதிவா னது பிள்ளையின் நிலைத்திருப்பிற் கும் பிரசை என்ற வகையில் அவன் அல்லது அவளின் உரிமைகளினை பயன்படுத்துவதற்கும் அவசியமா கின்றது. எவ்வாறாயினும், 2007 இல் பிறப்புக்களில் 51 மில்லியன் பிள்ளைகள் பதியப்படவில்லை. அநேகமாக அவர்களில் அரைப் பகுதியினர் தென்னாசியாவில் இருந்தனர். கிடைக்ககூடிய தரவு களுக்கு இணங்க, நான்கில் ஒரு பங்கு அபிவிருத்தி அடைந்துவரு கின்ற நாடுகளில் பிறப்புக்களின் பதிவானது 50 வீதத்திலும் குறை வாக இருந்தது. மிகவும் வறிய குடும்பங்களில் பிறப்புக்களின் பதி வானது செல்வந்த குடும்பங்களிலும் பார்க்க அரைவாசியாக இருக்கின் றது (UNICEF 2009). தென்னாசிய பிராந்தியத்திலே உள்ள நாடுகளில் உயர் வீதத்திலான குழந்தை பிறப் புக்களின் பதிவானது இலங்கையில் பதிவாகியிருப்பதுடன் ஆகக்குறைந்த அளவாக பங்களாதேஷ் காணப்பட் டது (அட்டவணை 3). இது உலகத் தில் ஆகக்குறைந்ததாகும் (UNICEF, 2009). பாகிஸ்தானிலும் நேபாளத் திலும் பிறப்பு பதிவுகள் கணிசமான அளவு குறைவாகும்.

**உரிய காலத்திற்கு முன்னரான திருமணம்**

சிறுவர் திருமணமானது குடும்பங் களிலும் சமுதாயங்களிலும் எதிர் மறையான பாதிப்புக்களினை கொண் டுள்ளன. இது நாட்டினது ஆரோக் கியம் மற்றும் கல்வித்துறைகளை மோசமான முறையில் பாதிக்கின் றது. அநேகமாக இத் திருமணங் களின் கீழ் பெண் பிள்ளைகள் மனைவியாக இருப்பதற்குரிய பொறுப்புக்கள் தொடர்பாக குறைந் தளவிலான அறிவினையே கொண் டுள்ளதுடன் பாலியல் மற்றும் குழந் தைப் பிறப்பு தொடர்பாக நன்கு தெரிந்தவர்களாக இல்லை[1]. உரிய காலத்திற்கு முன்னரான திருமண மானது இளம் பெண்களையும் அவர்களுடைய சந்ததிகளையும் பல மோசமான சமூக மற்றும் உடலியல் வெளிப்பாடுகளுக்கு இட்டுச் செல் கின்றது[2]. அவர்களுடைய கல்வி மற்றும் சமூக நிலை மட்டங்கள் குறைவடைகின்றது, அவர்கள் குறைவான இனவிருத்தி கட்டுப் பாட்டினைக் கொண்டுள்ளதுடன் உயர் வீதத்திலான பிரசவகால உயி ரிழப்புகளினாலும் குடும்ப வன் முறைகளினாலும் துன்பப்படுகின்ற னர். மிகக்குறைந்த வயதில் பெண் பிள்ளைகள் திருமணம் செய்கின்ற பொழுது அவர்கள் குழந்தை பெறு வதற்கு சாத்தியமாக இருப்பதற் கான அதிகளவு வருடங்களினையும் குழந்தை இறப்பு வீதத்திற்கான உயர் ஆபத்தினையும், குறைபோ சாக்கு நிலையினையும், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஆபத்தினை யும், மலட்டுத்தன்மை, மற்றும் பிரசவகால இறப்புநிலை போன்ற வற்றினையும் கொண்டுள்ளார்கள் (Aghi, திகதியிடப்படாதது).

அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் 20-24 வயதிற்கு இடைப் பட்ட 64 மில்லியனுக்கும் (30 வீதம்) அதிகமான இளம் பெண்கள் 18 வயதளவில் திருமணம் செய்துள் ளார்கள் அல்லது ஒன்று சேர்ந்துள் ளார்கள் என பதிவாகியுள்ளது. உயரளவான 46 வீதமானது (மொத் தத்தில் கிட்டத்தட்ட அரைப்பகுதி யினர்) தென்னாசியாவில் பதிவாகி யுள்ளதுடன் இரண்டாவது இடமாக (39 வீதம்) துணைச் சஹாரன் ஆபிரிக்காவில் பதிவாகியுள்ளது. உரிய காலத்திற்கு முன்னரான திருமணத்திற்கு பின்னணியாக அமைந்த பிரதான காரணமானது வறுமையாகும் (UNICEF 2009). உரிய காலத்திற்கு முன்னரான திருமணத்தின் உயர் அளவானது பங்களாதேஷில் பதிவாகியுள்ளது டன் ஆகக்குறைந்த வீதமாக மாலை தீவு இருக்கின்றது (அட்டவணை 3). சிறுவர் திருமண வீதத்தின் இறங்கு வரிசைக்கு இணங்க உலகத்தில் பங்களாதேஷ் ஆனது நான்காவது இடத்தினை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது (UNICEF 2009).

**சிறுவர் தொழிலாளர்**

சிறுவர் உரிமை மீறல்கள் என்ற வகையில் சிறுவர்களை முற்று முழுதாக வயது வந்தவர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. சிறுவர் உழைப்பானது அவர்களை கல்வி மற்றும் திறன்களில் விருத்தி அடையவிடாது தடுக்கின்றது. இது மனித மூலதன திரட்சியின் வளர்ச்சியினை குறைப்பதற்கு துணை போகின்றது. இது பொருளாதார முன்னேற்றத்திற்கு பிரதான தடையாகும் (Basu மற்றும் Tzannatos 2003:145). சிறுவர் உழைப்பானது பிள்ளையின் நிகழ்கால மற்றும் எதிர்கால ஆரோக்கியத்திற்கு தீங்காகக் கூடும். (Rosati மற்றும் Rossi 2003:283). சிறுவர் ஊழியத்திற்கான பிரதான காரணமாக வறுமையானது அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது (UNICEF 2009).

UNICEF இனால் மதிப்பிடப்பட்ட 102 நாடுகளின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் 5-14 வயதிற்கு இடைப்பட்ட 150 மில்லியன் பிள்ளைகள் சிறுவர் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்படுகின்றனர். துணைச் சஹாரன் ஆபிரிக்காவில் சிறுவர் தொழிலானது மிகவும் சாதாரணமாக காணப்படுவதுடன் சிறுவர் தொழிலில் ஈடுபடுபவர்கள் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்டவர்களாக காணப்படுகின்றனர். பெரிய அளவில் இருக்கின்ற பிரேசில், இந்தியா மற்றும் மெக்சிக்கோ போன்ற பெரும்பாலான நாடுகளில் பொருளாதார செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தல் குறைவாக இருப்பதனை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றது. ஏனைய சில நாடுகளில் இப்போக்கானது மாறாமல் காணப்படுகின்றது அல்லது அதிகரிக்கின்றது (UNICEF 2009). தென்னாசிய பிராந்தியத்தில் சிறுவர் உழைப்பானது விகிதாசாரத்தில் நேபாளத்தில் ஆகக்கூடியதாகவும் இலங்கையில் ஆகக்குறைந்ததாகவும் இருப்பதாக பதிவாகியது (அட்டவணை 3). உத்தியோகபூர்வமாக கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 5-14 வயதிற்கு இடைப்பட்ட 337 மில்லியன் மொத்த சிறுவர்களுள் 22 மில்லியன் தென்னாசியாவில் வேலைபார்ப்பதாக மதிப்பிடப்படுகின்றது (அட்டவணை 4).

அவ்வழியில் செல்வதுடன் அவனது உரிய வயதினை அடைவதற்கு முன்னர் திருமணம் செய்கின்றான். ஆகையினால், அவனுடைய பிறப்பின் பதிவினை பெறுவதற்கான சிறுவர் உரிமை மீறலானது சிறுவர் தொழிலாளர், மற்றும் சிறுவர் திருமணம் போன்ற ஏனைய உரிமைகளின் மீறலுடன் இடைத்தொடர்பாகின்றது.

**அட்டவணை 4**

**பின்னடைவு விளைவுகள்**

| சுயாதீன மாறிலி | சார்பு மாறிலி | |
|---|---|---|
| | சிறுவர் தொழிலாளர் | சிறுவர் திருமணம் |
| மாறிலி | 22.8 (3.8) | 54.1 (9.0) |
| வறுமை | 0.27 (3.7) | 0.15 (2.0) |
| பிறப்புகள் பதிவு | -0.14 (-2.2) | -0.43 (-6.9) |
| வரக்கித்த - R | 0.42 | 0.63 |
| டேர்பின் - வட்சன் புள்ளிவிபரம் | 2.1 | 2.0 |
| மாதிரியின் அளவு | 65 (நாடுகள்) | 63 (நாடுகள்) |

*குறிப்பு: t - இடைப்பிறவரலினுள் புள்ளிவிபரம்*

*ஆதாரம்: அடிப்படைத் தரவு* - UNICEF (2009); UNICEF (2011); UNICEF இன் உலகளாவிய தரவுத்தளம்

### 3.2 மாறிலிகளுக்கு இடையிலான இடைத்தொடர்பினை பகுப்பாய்வு செய்தல்

பிள்ளையின் பிறப்பானது பதிவு செய்யப்பட்டிருக்காத பொழுது பிள்ளையானது தன்னுடைய பிறந்த திகதியினை தானே அறியாதவனாக இருப்பதுடன் அவனுடைய பெற்றோரும் அறிந்திருப்பதில்லை. அதன் விளைவாக அவன் தன்னுடைய வயது தொடர்பாக சான்றினை வழங்க முடியாது. அவன் பாடசாலையில் சேருதல், திருமணம் செய்துகொள்ளுதல் போன்ற ஏனைய உரிமைகளினை அனுபவிப்பதற்கு பிறப்பின் பதிவு அவனுக்கு அவசியமாகின்றது. பிள்ளையானது பாடசாலைக்கு போகவில்லையாயின் அவன் தொழிலாளராக மாறி

முன்னர் விபரிக்கப்பட்ட கூற்றுக்கு இணங்க சிறுவர் ஊழியம் மற்றும் சிறுவர் திருமணங்கள் போன்றன வறுமையின் வெளிப்பாடுகளாக கருதப்படுகின்றன. தென்னாசியாவில் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நாளொன்றுக்கு ஒரு டொலரிலும் குறைவான தொகையில் வாழ்கின்றனர். வறுமையானது மாலைதீவு, பூட்டான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளைத் தவிர அநேகமாக அனைத்து தென்னாசிய நாடுகளிலும் நிச்சயமாக மிகவும் உயர்வாக காணப்படுகின்றது (அட்டவணை 1). சிறுவர் உழைப்பு மற்றும் சிறுவர் திருமணங்கள் தொடர்பாக வறுமை மற்றும் பதியப்படாத பிறப்புக்கள் (அல்லது பதிவுசெய்யப்பட்ட பிறப்புக்கள்)

ஆகிய இரண்டினதும் அளவறி ரீதியில் தொடர்புபட்ட செல்வாக்கினை பரிசீலிப்பதற்கு சிறுவர் பிரச்சினைகள் காணப்படுகின்ற 65 நாடுகளின் துணைநிலைத் தரவுகளினை கருத்திற்கொண்டு ஏக பரிமாண இழிவு வர்க்கத்தினை பயன்படுத்தி பொது ஏகபரிமாண மாதிரியுருக்கள் மதிப்பிடப்பட்டன. மதிப்பிடப்பட்ட பண்பளவுகள் எதிர் பார்க்கப்பட்ட வெளிப்பாடுகளுடன் உயரளவில் முக்கியத்துவமானதாக (95 வீதத்திலும் அதற்கு மேற்பட்டதாகவும்) காணப்படுகின்றன (அட்டவணை 4). பிறப்புக்களின் பதிவு வறுமைக்கு காரணமாக இருக்கின்ற சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் உழைப்பு போன்ற பிரச்சினைகளின் தீவிரத்தன்மையினை குறைப்பதாக முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

## 4. மனித உரிமைகள், சட்டச் சூழலும் சிறுவர் பிரச்சினைகளும்

மனித உரிமைகள் பாதுகாப்பானது உற்பத்தி, அதாவது உழைப்பும் மூலதனமும், பொருளாதார அலகுகளுக்கு இடையில் போட்டித்தன்மை, சந்தைக்கு சாதகமான சூழ்நிலையினை வழங்குதல் போன்றவற்றிற்கு வளமூட்டுவதுடன் நாட்டில் சட்ட கட்டமைப்பில் அவசிய தூண்களுக்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. இது அரசாங்கத்தின் வினைத்திறனினை அதிகரிப்பதற்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. சில சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் சந்தைச் செயலிழப்பின் சீர்படுத்தல் வழிமுறையாகவும் தொழிற்படுகின்றது (Herath 2008).

ஆகையினால், சிறுவர் உரிமைகள் விதிவிலக்கானவையல்ல. எவ்வாறாயினும், மனித உரிமைகளின் பாதுகாப்பு பல அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் ஓரளவு மோசமான நிலையில் காணப்படுகின்றது. நாட்டில் மனித உரிமைகள் பாதுகாப்பின் அளவினை அளவிடுவதற்கு சில சுட்டிகள் விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் திருப்திகரமான முறையில் பாதுகாக்கப்படவில்லை. அனைத்து நாடுகளும் மனித உரிமைகள் சுட்டிகளின் மூலமாக அளவிடப்பட்ட உலக சராசரி அளவிற்கு கீழ்ப்பட்டதாகவே காணப்படுகின்றது (அட்டவணை 6).

**அட்டவணை 6**

**தென்னாசியா: சட்ட ஆளுகையின் பெறுமதியும் மனித உரிமைக் குறிகாட்டிகளும்**
**(இறங்கு வரிசையில் தரப்படுத்தப்படுகின்றது) - 2011**

| நாடு | சட்ட ஆளுகை குறிகாட்டி | மனித உரிமைகள் குறிகாட்டி |
|---|---|---|
| இந்தியா | 0.442 | 0.493 |
| பாகிஸ்தான் | 0.365 | 0.340 |
| பங்களாதேஷ் | 0.359 | 0.482 |
| நேபாளம் | 0.438 | 0.530 |
| மாலைதீவு | 0.452 | 0.468 |
| இலங்கை | 0.443 | 0.444 |
| பூட்டான் | 0.528 | 0.557 |
| சராசரி | 0.530 | 0.571 |

*ஆதாரம்:* World Governance Index 2011, Version Two. Report 2011, Available at, http://www.world-governance.org/IMG/pdf_WGI_short_version_ EN_web-4.pdf

மனித உரிமைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்டத்தின் மூலமாகவே பாதுகாக்கப்படுகின்றன. ஆகையினால், பொருத்தமான போதிய சட்டவாக்கங்கள் சமூகத்தில் அல்லது பொருளாதாரத்தில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக அமுல்படுத்தப்படுவது அவசியமாக இருக்கின்றது. சட்டத்தின் வினைத்திறனானது இவ்வகை சுட்டிகள் மூலமாகவும் அளவிடப்படுகின்றது. தென்னாசிய நாடுகள் சட்ட ஆளுகையின் மட்டத்தினை திருப்திகரமான முறையில் அடைந்திருக்கவில்லை (அட்டவணை 6). அனைத்து நாடுகளிலும் கூறப்பட்ட சுட்டிகளின் பெறுமதியானது உலக சராசரியிலும் பார்க்க குறைந்த மட்டத்திலேயே அமைந்திருக்கின்றது.

சிறுவர் உரிமைகளினை உறுதிப்படுத்துவதற்கும் அதேபோல் சிறுவர்களை வன்முறைகளில் இருந்து பாதுகாப்பதற்கும் சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் (UN), சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), SAARC (என்ற பெயரின் மூலமாக தனியொரு அமைப்பினை கொண்டுள்ள தென்னாசிய நாடுகள்) போன்ற சர்வதேச அமைப்புக்கள் உடன்படிக்கைகளினை நிறைவேற்றியிருக்கின்றன. நாடுகள் சர்வதேச உடன்படிக்கைகளுடன் உடன்பட்டிருந்தாலும் இவ் நாடுகள் சில சந்தர்ப்பங்களில் உள்நாட்டு சட்டங்களில் இதனை அமுல்படுத்துவதில்லை. ஆகையினால், உள்

அட்டவணை 7

**தென்னாசியாவில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக உள்நாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பாக அடிப்படைத் தகவல்**

| நாடு | பிறப்புக்களின் பதிவு | சிறுவர் திருமணம் | சிறுவர் தொழிலாளர் | பாலியல் தொந்தரவுகள் அல்லது பாலியல் வல்லுறவு | கடத்தல் | ஆபாசம்/ உடலியல் ரீதியான அல்லது உள ரீதியான தொந்தரவுகள் |
|---|---|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 2004 | 1929 ஆம் ஆண்டு சிறுவர் திருமண கட்டுப்பாட்டுச் சட்டமானது ஆகக் குறைந்த வயது 18 ஆக வரையறுக்கின்ற பொழுதிலும் சமய சட்டங்கள் உரிய காலத்திற்கு முந்திய திருமணமாக இருக்கின்றன. | 1938, 1961 | 1974,1976, 1993 | 2000 | தண்டனை சட்டக்கோவை 1860, சிறுவர் சட்டம் 1974 |
| பூட்டான் | | 1980, 1996 | 1994 | 1996 (பாலியல் வல்லுறவு) | | 1997 (பாடசாலைகளில்) |
| இந்தியா | | 1929 | 1986 | 1860 (தண்டனை சட்டக்கோவை | 1956 | 1995, 1956, 2000 |
| மாலைதீவு | 1976 | 1991, 2000 | 1991 | 1991 | வழக்குகள் அறிக்கையிடப்படவில்லை | 1991 |
| நேபாளம் | | பொதுச் சட்டத் தொகுப்பில் திருத்தம் 1999 | 1999 | பொதுச் சட்டத் தொகுப்பு | 1986 | 1992 |
| பாகிஸ்தான் | | 1992 | 1991, 1992, 2000 | ஆண்களுக்கு இல்லை | 2002 | 1860 (ஆபாசம்), 1983 |
| இலங்கை | | 1956, 1995 (திருமண பதிவுச் சட்டத்தில் திருத்தம்) | 1995 (தண்டனை சட்டக் கோவையில் திருத்தம்) | | 1995 (தண்டனை சட்டக் கோவையில் திருத்தம்) | 1939, 1998 (தண்டனை சட்டக் கோவையில் திருத்தம்) |

*ஆதாரம்:* தென்னாசியாவில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பிராந்திய கலந்தாய்வின் அடிப்படையிலானது, 2005

நாட்டுக்குரிய சட்டங்களினை கவனத்திற்கொள்கையில் அவை சர்வதேச சட்டங்களிலும் பார்க்க மிகவும் முக்கியமானது. ஆகையினால், தென்னாசிய நாடுகளில் உள்நாட்டுக்குரிய சட்ட ஏற்பாடுகள் வன்முறைகளுக்கு எதிராக சிறுவர்களுக்காக வழங்கப்படுகின்ற சட்ட பாதுகாப்பினை பரிசீலிப்பதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது. பிறப்புக்களின் பதிவு, உரிய காலத்திற்கு முன்னரான திருமணம், சிறுவர் உழைப்பு போன்றவற்றிற்கு மேலதிகமாக பாலியல் துன்புறுத்தல், பாலியல் பலாத்காரம், உடல் ரீதியாக அல்லது உள ரீதியான துன்புறுத்தல்கள், மற்றும் ஆபாசங்களின் பிரயோகம் போன்றனவும் தென்னாசியாவில் ஏனைய தற்பொழுதுள்ள சிறுவர் பிரச்சினைகளாக உள்ளன. ஒவ்வொரு நாட்டினாலும் எடுக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் அட்டவணை 7 இல் கொடுக்கப்படுகின்றது.

அட்டவணை 7 ஆனது சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளினை எதிர்த்துப் போரிடுவதற்கு ஒவ்

வொரு நாட்டினாலும் அமுல்படுத்தப்படுகின்ற சட்ட வழிமுறைகளின் சுருக்கத்தினை வழங்குகின்றது. சட்ட ஏற்பாடுகளினை பரிசீலிக்கின்ற பொழுது, தென்னாசிய நாடுகளில் அனைத்து அரசாங்கங்களும் உள் நாட்டு சட்டங்களினை அமுல்படுத்துவதன் மூலம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளினை முடிவிற்கு கொண்டுவருவதற்கு அர்ப்பணிப்பினை மேற்கொண்டிருக்கின்றன என்பது தெளிவாகின்றது. சில நாடுகளில் பிறப்புக்களின் பதிவுகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் மட்டும் சில இடைவெளிகளினை அவதானிக்கப்பட முடியும். பல நாடுகள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுடன் போராடுவதனை நோக்கமாகக் கொண்டு அவர்களுடைய தண்டனைச் சட்டக் கோவையினை திருத்தியிருக்கின்றன. எவ்வாறாயினும், சில நாடுகளின் சட்டங்களில் சில இடைவெளிகளினையும் குறைபாடுகளினையும் அவதானிக்கப்பட முடியும்.

கல்வி நிறுவனங்களில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளினை தடுப்பதற்கான போதிய சட்டவாக்கங்களினை சில நாடுகள் கொண்டிருக்கவில்லை. பிராந்தியத்தில் இலங்கை மட்டுமே பாடசாலையில் சரீரத் தண்டனையினை தடை செய்கின்ற சட்டங்களினை கொண்டுள்ளது. பாகிஸ்தானில் 40 வீதத்திற்கு மேற்பட்ட அரச பாடசாலைகளிலும் கிட்டத்தட்ட 35 வீதமான தனியார் பாடசாலைகளிலும் சரீரத் தண்டனைகள் நடைமுறையிலுள்ளன. பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் ஓதப்பள்ளி போன்ற சமய கல்வி நிறுவனங்கள், பூட்டானில் துறவி மடங்கள் அத்துடன் தனிப்பட்ட பாடம் கற்பிக்கின்றவர்கள் போன்ற இடங்களில் பிள்ளைகள் இதே வகையான நடத்துகைக்கு உட்படுகின்றனர். பாலியல் துஷ்பிரயோகங்கள் பல்கலைக்கழகங்கள் அல்லது கல்லூரி வளாகங்களில் இருந்தும் பதிவாகியுள்ளன. இந்தியாவில், 13.5 வீதமான பெண் மாணவர்கள் பாலியல் பலாத்காரம், மானபங்கம் மற்றும் தகாத பேச்சினால் துன்புறுத்தல்கள் போன்றவற்றினை ஆண் மாணவர்களிடம் இருந்தும் 4.8 வீதமான பெண்கள் பல்கலைக்கழக பணியாளர்களிடமிருந்தும் அனுபவித்தனர் (UN, 2005). பங்களாதேஷ் ஆனது திருமண பாலியல் பலாத்காரம் மற்றும் பாடசாலைகளில் வன்முறை போன்றவை தொடர்பாக சட்ட வாக்கங்களினை கொண்டிருக்கவில்லை (தென்னாசியாவில் சிறுவர்களுக்கு எதிராக வன்முறை தொடர்பான பிராந்திய கலந்தாய்வு, 2005).

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் தண்டனை சட்டக் கோவையில் பாலியல் பலாத்கார சட்டங்கள் ஆண்களினை பாதுகாப்பதில்லை (UN, 2005). பூட்டானில் கடத்தல்கள் மற்றும் குடும்பங்களில் தண்டனைகளினை தடுக்கின்ற சட்டவாக்கங்கள் இல்லை. பூட்டானில், திருமண சான்றிதழ் வழங்கப்படுகின்ற வரை உரிய காலத்திற்கு முன்னரான திருமணங்கள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாத பொழுதிலும் எழுதப்பட்ட திருமணச் சட்டமான பொதுச் சட்டத்தின் கீழ் ஆண்களும் பெண்களும் 15 வயதின் தொடக்கத்திலேயே திருமணத்தில் ஈடுபடுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளினை நல்ல முறையில் உருவாக்குவதற்காக பாடசாலைகளில் பெற்றோர்கள் தண்டனையினை ஊக்குவிக்கின்றனர். வேலைத்தளங்களில் தொழில் வழங்குநரினாலும் பெற்றோர்களினாலும் உடலியல் ரீதியிலான தண்டனையானது முறைசாராத் துறைகளில் பரந்துபட்டதாக காணப்படுகின்றதுடன் நடத்தையினை சரிப்படுத்துவதற்கு அவசியப்படுவதாக கருதப்படுகின்றது. மேலும், பூட்டானில் பிறப்புக்களின் பதிவு தொடர்பான சட்டவாக்கங்கள் இல்லை. இந்தியாவில் தீவிரத் தன்மையான உடலியல் ரீதியிலான வன்முறை வடிவங்கள் தவிர குடும்பங்களில், சமுதாயத்தில் மற்றும் வேலைத்தளங்களில் தண்டனைகளினை தடுப்பதற்கான போதியளவு ஏற்பாடுகள் இல்லை. தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம் போன்ற பல மாநிலங்களில் பாடசாலைகளில் தண்டிக்கப்படுதலினை தடுப்பதற்கான கல்வி விதிமுறைகள் திருத்தப்பட்டிருக்கின்றன (தென்னாசியாவில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான பிராந்திய கலந்தாய்வு, 2005).

மாலைதீவில் பாடசாலைகளில் தண்டனையினை தடுப்பதற்கு பலமான சட்டவாக்கங்கள் இல்லை (1991 ஆம் ஆண்டு பிள்ளையின் உரிமையின் பாதுகாப்பு தொடர்பான உடலியல் மற்றும் உளவியல் தண்டனைச் சட்டம் -அத்தியாயம் 1-10). இது பின்வருமாறு கூறுகின்றது. அரசின் கடமையாக பிள்ளைப் பருவத்தில் பாடசாலைகளில் தண்டனை வழங்கப்படுதல் பொருத்தமானதாக காணப்பட வேண்டும். அத்துடன் இது பிள்ளைக்கு உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தீங்கு பயப்பதாக இருக்கக்கூடாது. பெண்கள் 16 வயதினை அடைதல் அல்லது பூப்படைதல் இதில் எது முன்னராக நடைபெறுகின்றதோ அப்பொழுது அவள் வயது வந்தவள் ஆகின்றாள் என பாகிஸ்தானில் திருமண கட்டளைச் சட்டமானது வரையறுக்கின்றது. அதேவேளை ஆண் 18 வயதில் வயதுவந்தவராக கருதப்படுகின்றார். ஆகையினால், 11 அல்லது 12 வயதினையுடைய பெண் வயது வந்தவராக கருதப்படுகின்றார் (தென்னாசியாவில் சிறுவர்களுக்கு எதிராக வன்முறை தொடர்பான பிராந்திய கலந்தாய்வு, 2005).

சில சந்தர்ப்பங்களில், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுடன் எதிர்த்து போரிடுவதற்கு விரிவுபடுத்தப்பட்ட சட்ட கட்டமைப்பு காணப்படுகின்ற பொழுதிலும் உரிய காலத்திற்கு முன்னரான திருமணம்,

சிறுவர் ஊழியம், பாலியல் துஷ்பிரயோகம், மற்றும் சரீரத் தண்டனைகள் போன்றன தற்பொழுதும் நிலைத்திருக்கின்றன. பாகிஸ்தான் இதற்கு உதாரணமாக காணப்படுகின்றது. சிறுவர்களுக்கு எதிரான சில தீங்குகளினை தவிர்ப்பதற்கு சட்டம் போதுமானதல்ல. இந்தியாவில் பெண் கருச்சிதைவானது தடைசெய்யப்படுகின்றது. ஆனால் 3 தொடக்கம் 5 மில்லியனுக்கும் இடைப்பட்ட பெண் சிசுக்கள் ஒவ்வொரு வருடமும் கருவிலேயே கலைக்கப்படுகின்றன. பங்களாதேஷில் சீதனமானது தடைசெய்யப்படுகின்ற பொழுதிலும் கணக்கிடப்படுகின்ற மொத்த கொலைகளில் 50 வீதமானவை அவர்களுடைய கணவரினால் கொல்லப்பட்டனர். இவற்றில் அநேகமானவை கணவனுக்கு செலுத்தப்பட்ட சீதனத்தின் மீதான சர்ச்சைகளுடன் தொடர்புபட்டது. இலங்கை பல்கலைக்கழகங்களில் பெண் மாணவர்களுக்கு பாலியல் வடிவத்தினாலான பகிடிவதை மேற்கொள்ளப்பட்டது பதிவாகியது. பாகிஸ்தானில் தரைவிரிப்பு மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைசெய்கின்ற சிறுவர்கள் பாலியல் வன்முறைக்கு முகம் கொடுக்கின்றனர். 2004 இல் மாலைதீவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வேலைத்தளங்கள் உட்பட பல்வேறுபட்ட அமைப்புக்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமானது சிறுவர்களினாலும் இளையவர்களினாலும் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினையாக உள்ளது என அடையாளப்படுத்தப்பட்டது (UN, 2005).

வழமையாக தென்னாசிய நாடுகளில் உள்ள சட்ட அமுலாக்கல் அலுவலர்கள் நியம கண்காணிப்பு நடைமுறைகளாக வன்முறைகளினை பயன்படுத்துகின்றனர். இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் சான்றுகளினை பெறுவதற்கும் குற்றத்தினை ஒப்புக்கொள்ள வைப்பதற்கும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளினை பொலிஸார் பயன்படுத்துகின்றனர் என அறிக்கைகள் காணப்படுகின்றன. நம்பத்தகுந்த பிறப்பு பதிவிடல் முறைமையின்மையானது சிறுவர்களினை சட்டபூர்வமான ஆகக் குறைந்த வயதிலும் பார்க்க வயது கூடியவர்கள் என வலியுறுத்துவதன் மூலமாக பொலிஸார் அவர்களை தடுத்துவைப்பதனை நியாயப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது. அப்பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது இலங்கையின் நிலைமையானது ஓரளவு திருப்திகரமானதாக இருக்கின்றது. சிறுவர் பாதுகாப்புடன் இணைந்ததாக தொடர்புபட்ட பத்து அமைச்சுக்களின் கடமைகளினை ஒருமுகப்படுத்தி ஒருங்கிணைப்பதற்கு குடையுருவான அமைப்பாக 1998 இல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டது. அதன் முதன்மைப் பணியாக தடுப்பதற்கும் பாதுகாப்பதற்குமான கொள்கைகளினை உருவாக்குவதும் ஏனைய சேவை வழங்குநருக்கு வழிகாட்டுவதும் ஆதரவளிப்பதுமாகும்.

## 4. முடிவுரை

பதிவுசெய்யப்படாத பிறப்புக்கள் சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் ஊழியம் போன்ற பிரச்சினைகளினை மேலும் மோசமாக்குவதாக ஆய்வு தொடர்பான போக்கின் பகுப்பாய்வு விளைவுகள் வெளிக்காட்டுகின்றது. வறுமையானது உரிய காலத்திற்கு முன்னரான திருமணம் மற்றும் சிறுவர் ஊழியம் போன்றவற்றுக்கான மற்றைய காரணமாக இருக்கின்றது. வறுமையினை குறைப்பதன் மூலமாக (அல்லது குடும்ப வருமானத்தினை அதிகரித்தல்) சிறுவர் ஊழியம் மற்றும் உரிய காலத்திற்கு முன்னரான திருமணம் போன்றவை குறைக்கப்பட முடியும். மேலும் தடைகளினை நீக்குவதன் மூலமும் பிறப்புக்களின் பதிவுகளினை அதிகரிப்பதற்கு ஒழுங்குகளினை மேற்கொள்வதன் மூலமும் சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் ஊழியம் போன்றவை குறைக்கப்பட முடியும். அவ்வாறு செய்வதன் மூலமாக சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலமாக பிள்ளைகள் கணிசமான அளவிற்கு வலுவூட்டப்பட முடியும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிறுவர் உரிமைகள் மீறலானது பதியப்படாத பிள்ளையின் பிறப்புக்கள், சிறுவர் திருமணம் மற்றும் சிறுவர் ஊழியம் போன்றவற்றினைப் பொறுத்தவரை ஆகக்குறைவாக காணப்படுகின்றது. இலங்கையானது பிள்ளைகள் தொடர்பான சிற்சில விசேட சட்டங்களினை கொண்டுள்ளது.

உள்நாட்டுச் சட்டங்களினைப் பொறுத்தவரையில் சட்ட ஆளுகை மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு போன்றன தென்னாசிய நாடுகளில் மிக மோசமாக இருப்பதாக ஆரம்பத்தில் ஆய்வுகள் வெளிக்காட்டியது. அதேபோல் சிறுவர் உரிமைகள் மூலமான உள்நாட்டுச் சட்டங்கள் பாதுகாக்கப்படுகின்றன, சில பிரச்சினைகள் தொடர்பாக சில நாடுகள் சட்டவாக்கங்களினை கொண்டிருக்கவில்லை என ஆய்வு அடையாளப்படுத்துகின்றது. பங்களாதேஷில் திருமண பாலியல் வல்லுறவு, பூட்டானில் பிறப்புக்களின் பதிவு போன்றன உதாரணங்களாக குறிப்பிடப்பட முடிந்தது. சில நாடுகள் அவ்வாறான சட்டங்களினை கொண்டுள்ள போதிலும் கலாசாரமும் பாரம்பரிய அபிப்பிராயங்களும் மற்றும் சமயம் சார்ந்த கண்ணோட்டங்கள் பொதுச் சட்டங்களினை அமுல்படுத்துவதற்கு அனுமதிப்பதில்லை. பூட்டானில் பாடசாலைகளில் தண்டனையானது அவசியமானது என பெற்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் வயது வந்தோராக பூப்படைதலினை முஸ்லீம் மக்களால் ஏற்றுக்கொள்ளல் போன்றன உதாரணமாக

உள்ளடக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் போதியளவு பாதுகாப்பினை வழங்குவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லை. இந்தியாவில் குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் தண்டனை மற்றும் மாலைதீவில் பாடசாலைகளில் தண்டனை போன்றவற்றை உதாரணமாக தெரிவிக்கப்பட முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர் பிரச்சினைகள் தொடர்பாக ஒன்று கூடுவதற்கும் அவர்களின் தனிப்பட்ட அனுபவங்களினையும் பிரச்சினைகளினையும் மீளாய்வு செய்வதற்கும் ஒரு பொதுமன்றத்தினை உருவாக்குவது தென்னாசிய நாடுகளுக்கு ஆரோக்கியமாக இருக்கின்றது.

1920 மற்றும் 1980 களில் இருந்து பிள்ளைகளுக்கு எதிரான சில வன்முறைகளுக்கு எதிரான சட்டங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் வன்முறையில் கணிசமான அளவு குறைவினை அவதானிக்கப்பட முடியவில்லை. உதாரணமாக இந்தியா மற்றும் பங்களாதேஷில் பாலியல் வன்முறைக்கு எதிரான மற்றும் இந்தியாவில் சிறுவர் திருமணம், பாகிஸ்தானில் உடல் ரீதியிலானதும் உள ரீதியிலானதுமான சட்டம் போன்றன. ஆகையினால் சில சந்தர்ப்பங்களில் சட்டம் மட்டும் போதுமானதாக இல்லை. சில மற்றைய சந்தர்ப்பங்களில் சட்டங்கள் செயல்முறை ரீதியிலான அமுலாக்கமற்ற வகையில் ஆவணங்களில் மட்டும் வரையறுக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் கலாசார தோற்றப்பாடுகள் சட்டத்தினை மழுங்கடிக்கின்றது. தீர்வுகளினை கண்டறிவதற்கும் சரியான முறையில் இப்பிரச்சினைகளினை புரிந்து கொள்வதற்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகின்றது.

## உசாத்துணை நூல்கள்


Aghi, Mira B. (undated). Early Marriage in South Asia: A Discussion Paper, Compiled from a study undertaken by Mira, B. Aghi, downloadable at www.unicef.org/rosa/earlymarriage (lastversion).doc, accessed on 07.02.2015.

Basu, Kaushik, and ZafirisTzannatos, (2003). "Child Labour and Development: An Introduction", The World Bank Economic Review, 17(2): 145-146.

Field, Erica (2004). Consequences of Early Marriage for Women in Bangladesh, Erica Field Harvard University, Monograph, downloadable at http://www.researchgate.net/publication/228353780_Consequences_of_Early_Marriage_for_women_in_Bangladesh, accessed on 10.02.2015.

Francois, Renaud (2009) World Governance Indicators, Available at, http://www.world-governance.org.

Herath, Tikiri Nimal (2008). "Economics of human rights in market economies: are they growth- and development friendly according to the empirical evidence?", Sri Lanka Journal of International Law, 20(2):181-207.

ILO, (2010). Facts on Child Labour 2010, International Labour Office, Geneva.

Mission Statement of the Forum on marriage and the Rights of Women and Girls, Early Marriage: Whose Right to choose, May 2000.

UNICEF (2000). Mission Statement of the Forum on marriage and the Rights of Women and Girls, Early Marriage: Whose Right to choose, May 2000.

Pinheiro, Paulo Sérgio (2006). World Report on Violence against Children, United Nations, Geneva.

Regional Consultation on Violence against Children in South Asia, 2005, Regional Study on Violence against Children in South Asia, Islamabad, 19-21 May.

Rosati, Furio Camillo, and Mariacristina Rossi, (2003). "Children's Working Hours and School Enrollment: Evidence from Pakistan and Nikaragua", The World Bank Economic Review, 17(2): 283-295.

UNICEF Global Databases, Child Protection: Child Labour, available at http://www.childino. org/labour_countrydata.

UNICEF, (2009). Progress for Children: A Report Card on Child Protection, Number 8, UNICEF, New York.

NICEF, (2011).The State of the World's Children 2011: Adolescence An Age of Opportunity, UNICEF, New York.

United Nations Development Program, (2000). Human Development Report 2000, UNDP, New York.

UNDP (2011). Human Development Report 2011, Sustainability and Equity: A Better Future for All, UNDP, New York

UNDP (2013) Human Development Report 2013, The Rise of the South: Human Progress in a Diverse World, New York.

UNDP (2014) Human Development Report 2014, Sustaining Human Progress: Reducing Vulnerabilities and Building Resilience, New York.

UN (2005). Violence against Children in the Countries of South Asia: The problem, actions taken and challenges outstanding, United Nations Secretary-General's Study on Violence Against Children, downloadable at www.unicef.org/india/United_Nations_Secretary.doc.

World Bank (2010). World Development Report: Development and Climate Change, World Bank Washington D.C.


**Footnotes**

[1] Early Marriage: "Whose Right to choose" Mission Statement of the Forum on marriage and the Rights of Women and Girls, May 2000.

[2] Consequences of Early Marriage forWomen in Bangladesh, Erica Field Harvard University, September 2004.

# கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தகவல்: கொள்கை வகுப்பாளர்களுக்கான சிக்கல்கள்

மாசி - 2015

குணாத்ம குணவர்தன

விரிவுரையாளர்,
வணிக மற்றும்
தொழில்நுட்பத்திற்கான
சர்வதேச கல்லூரி

*பொழிப்பு*

*இந்த கட்டுரையானது இலங்கையில் கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தகவல் உருமாதிரியினை மதிப்பாய்வு செய்கின்றது. இது நாட்டின் நிதிச்சந்தைகளில் நிலவுகின்ற எண்ணக்கருக்களினையும் முறைசார் மற்றும் முறைசாரா சந்தைகளில் தொழிற்பாட்டு ரீதியிலான வேறுபாடுகளினையும் மதிப்பாய்வு செய்கின்றது. கட்டுரையானது உள்ளூர் அனுபவங்களில் இருந்தும் பல விடய நூல்களில் இருந்தும் தகவல்களினை பெறுவதுடன் கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தன்மையினை வெற்றிகொள்வதற்கு பயன்படுத்துவதற்கான நேரடி மற்றும் மறைமுக பொறிமுறைகளினையும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய தலையீடுகளையும் நாட்டின் கொள்கை உருவாக்கத்தில் கொண்டிருக்கக்கூடிய சந்தைப் பொறிமுறை சிக்கல்களினையும் பரிந்துரைக்கின்றது.*

***முக்கிய பதங்கள்: கிராமிய கடன் சந்தைகள், நிறைவில் தகவல், கொள்கைச் சிக்கல்கள்***

## 1. அறிமுகம்

பொதுவாக குறைந்தளவிலான கொள்ளளவு இயல்பினை உடைய கிராமிய கடன் சந்தைகள் பல நாடுகளில் குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் கொள்கைத் தலையீடுகளின் மையப்பகுதியாக இருந்துவருகின்றது. பல்தேசிய மற்றும் இருதரப்பு அமைப்புக்களினால் உதவியளிக்கப்படுகின்ற பல அரசாங்கங்கள் எண்ணிறைந்த நிறுவன அமைப்புக்களில் விவசாயம் அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்திற்கு எளிதாகக் கிடைக்கின்ற நிதி உதவியினை வழங்குவதில் குறிப்பிடத்தக்க கவனத்தினை செலுத்தியுள்ளன. ஆசிய நாடுகள் பலவற்றில் உயரளவிலான மானியங்கள் வழங்கப்படுகின்ற பொழுதிலும் அரசாங்கங்களின் தலையீடுகளின் விளைவு எதிர்பார்க்கப்பட்டதற்கு இணங்க வெற்றிகரமானதாக இருக்கவில்லை. அத்துடன் கணிசமான அளவிற்கு கிராமிய சந்தைகள் மிக உயர் வீதத்தினை உருவாக்குகின்ற முறைசாரா துறையின் வழங்கலின் மீது தங்கியிருப்பதனை தொடர்ந்தன.

அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளுக்கு எடுத்துக்காட்டான இலங்கையில் இரட்டைத்தன்மை கொண்ட கிராமிய கடன் சந்தை காணப்படுகின்றது. முறைசார் துறையானது கடன் பெறுபவர்களுக்கு நிதியியல் மத்தியஸ்தம் வழங்குகின்ற நிறுவனங்களினை கொண்டிருக்கின்ற (சில சந்தர்ப்பங்களில் பணம் கடன் வழங்குகின்ற மத்தியஸ்தரின் ஊடாக) அதேவேளை முறைசாரா துறையினர் தங்களின் தனிப்பட்ட பெறுமதிக்கு அப்பால் கடன் பெற்றுக்கொள்பவர்களுக்கு மத்தியஸ்தத்தினை வழங்குகின்றனர். இலங்கையினால் தெளிவுபடுத்தப்படுகின்ற அண்மைய அபிவிருத்தி பண்பளவுகளினுள் மூலதன திரட்சியின் முக்கியத்துவமானது நிதியியல் நிறுவனங்களுக்கு பாரிய பங்கினை வழங்குவதன் மூலமாக அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும், நிதியியல் சந்தைகளில் முறைசார் மற்றும் முறைசாராத்துறை இரண்டினதும் அபிவிருத்தி செயற்பாடுகள் வளர்ச்சியடைவது அவசியமாகின்றது.

ஆசிய நாடுகளில் கிராமிய கடன்களுக்கான மானியங்களின் உயர் மட்டங்களுக்கு மாறாக பல தொழில் முயற்சியாளர்கள், கடனுக்காக (குறிப்பாக சிறிய விவசாயிகள்) வட்டிவீதங்கள் தொடர்ந்தும் மிக உயர்வாக இருக்கின்ற பண கடன் வழங்குநர்களின் மீது தற்பொழுதும் தங்கியிருக்கின்றனர். பாரம்பரிய பண கடன் வழங்குநர்களை வெளியேற்றுவதற்கு அல்லது அவர்களின் வட்டி வீதங்களின் கட்டணங்களினை குறைப்பதற்கு அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிறுவனங்கள் தோல்வியடைந்துள்ளமைக்கு ஒரு காரணமாக கிராமிய கடன் சந்தைகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக புரிந்துணர்வு போதாமையாக இருப்பது அடிப்படை பொது விளக்கக்கோட்பாடாக காணப்படக்கூடும். இந்த கட்டுரையானது இப் பொது விளக்க கோட்பாட்டினை ஆராய்கின்றது.

## 2. பாரம்பரிய கண்ணோட்டங்களும் சிக்கல்களும்

கிராமிய கடன் சந்தைகள் தொடர்பாக ஆரம்பகால கண்ணோட்டங்கள் இரண்டு காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் பொதுவாக முறை

சாராத்துறையில் உயர் வட்டி வீதங் களுக்கான வேறுபட்ட விளக்கங்க ளினை வழங்குகின்றன.

*i. ஏகபோக தனியுரிமையுடைய பண கடன் வழங்குநர்*

இக் கண்ணோட்டத்தில், எந்தவொரு போட்டியும் அற்ற நிலையில் சுயமாகவே ஏகபோக தனியுரிமை யாளராக இருக்கக்கூடிய ஒவ் வொரு கிராம கடன் வழங்குநரும் கடும் வட்டி வீதத்தினை அறவிடு வதற்கு சுதந்திரமானவராக காணப் படுகின்றார். பாரம்பரிய கண் ணோட்டத்தில், 1950களின் முற் பகுதியில் இந்தியாவின் கிராமிய கடன் முறைமைகளின் திருப்பு முனைக்குரிய ஆய்வானது கைய டக்கப்படுகின்றது. விவசாய கடன் கள் அரைகுறையான பொருத்த மற்ற இருமடங்கு பிரச்சினைக ளினை முன்வைத்தது (RBI, 1954, vol. 2, p. 151).

*ii. நிறைவான சந்தைகள்*

சிக்காக்கோ பாடசாலையின் George Stigler (1967) என்பவரின் கருத்துக்கு இணைந்ததாக, கடன் சந்தைகளில் நிறைவில் தன்மையாக இருக்கின்ற இரண்டாவது கண்ணோட்டமானது கடன் சந்தைகளின் முக்கியத்துவம் அற்றதாகத் தோன்றுகின்றது. பொதுவாக உயர் வட்டி வீதங்கள் ஏகபோக உரிமையின் வலுவினை பிரதிபலிக்காது ஆனால் உயரளவில் கடனின் மீளளிப்பு தவறல் வீதத்தினையும் உயர் தகவல் செலவினையும் பிரதிபலிக்கின்றது.

நிறைவான சந்தைகளின் கண் ணோட்டத்தில், கடன் சந்தைப் பங்குகள் அண்ணளவாக பரற் றோவின் திறன் (Pareto-efficient) ஆக இருக்குமென அனுமானிக்கப் படுகின்றது. கடன் சந்தைகளில் அரசாங்கத்தின் தலையீட்டின் அடிப்படையில் மட்டுமே வருமா னமானது வறியவர்களுக்கு மீள் விநியோகம் செய்யப்படுகின்றது (சில வினைத்திறனற்ற செலவுகளில்).

**3. "நிறைவில் தகவலின்" உருமாதிரியுரு**

கடந்த தசாப்தங்களில் கடன் சந்தை களின் தொழிற்பாடு தொடர்பாக ஈட்டப்பட்ட கோட்பாட்டு ரீதியிலான புரிந்துகொள்ளல்களின் முன்னேற் றங்களுடன் நிறைவில் தகவல் மற்றும் நிறைவில் அமுலாக்கம் போன்றவற்றின் பிரச்சினையானது முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக் கின்றது. சில அறிஞர்களின் கூற் றுக்கு இணங்க பண்ட சந்தைகளில் இருந்து நிதியியல் சந்தையானது வேறுபடுகின்ற ஒரே வழியானது பண கடன் வழங்குநர்களினால் எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஆபத் தாக இருக்கின்றது. அவ் ஆபத் தானது கடன் மீளளிப்பு செய்வதில் தவறுகை ஆபத்தாக இருக்கின்றது. பணத்தினை எதிர்காலத்தில் மீள ளிப்பு செய்வதாக கூறப்பட்ட உறுதி மொழிக்கு இணங்க கடன் வழங் குநர்கள் இன்று பணத்தினை பரிமாறுகின்றனர். அவ்வாறான வாக் குறுதிகள் நிறைவு செய்யப்படு கின்ற பொழுது அதிகளவில் பெருக்குவதற்கான நடவடிக்கைக ளினை எடுக்கின்றனர். வழங்கல் செயற்பாடுகள் இவ்விதமாய் அமைந்திருக்கின்றன. (அ) எதிர்காலத்தின் நுகர்விற்காக இன்றைய நுகர்வின் பரிமாற்றம் (ஆ) கடன் மீளளிப்பு தவறல் ஆபத்திற்கு எதிரான காப்பீடு (இ) கடன் விண்ணப்பங்களின் கையகப் படுத்தல் - இது தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சினையாக உள்ளது (ஈ) கடன் பெறுபவர்கள் அநேகமாக மீள் கொடுப்பனவிற்கான நடவடிக் கைகளினை மேற்கொள்வார்கள் என உறுதிசெய்கின்ற வழிமுறைகள் - இது செயல்புரிவதற்கு தூண்டு கின்ற பிரச்சினை (உ) மீள்கொடுப் பனவினை செய்கின்ற கடன் பெறு பவர்களினால் மீள் கொடுப்பனவிற் கான சாத்தியக்கூறுகளினை அதி கரிப்பதற்கு அமுலாக்கல் நடவடிக் கைகள்.

மேலுள்ள சூழ்நிலைகளினை கருது கையில், கையகப்படுத்தல், பரப் புகை, மற்றும் தகவல்களின் பரி மாற்றம் போன்றவற்றிற்கான நிறை வான பொறிமுறையானது முன் வைக்கப்படுகின்ற நிலைமையில் இது தட்டிக்கழிக்க முடியாததாக காணப்படுகின்றது. மேலும் கிடைக் கக்கூடிய தகவல்களின் உண்மைத் தன்மையானது கேள்விக்குரியது. நிறைவில் தகவலின் பிரச்சினைக ளினை தெளிவுபடுத்துவதற்கான பொறிமுறையானது அடையாளப் படுத்தப்பட வேண்டும். Stiglitz J E. Grenwald மற்றும் Bruce (1986) ஆகியோரின் கருத்துக்களுக்கு இணங்க பயன்படுத்தக்கூடிய இரண்டு வகையான பொறிமுறை கள் காணப்படுகின்றன. அவை நேரடியானவையாகவும் அத்துடன் மறைமுகமானவையாகவும் காணப் படுகின்றன. தேர்ந்தெடுப்பதில், கடன் மீள் செலுத்துவதை ஊக்குவிப்பதில் மற்றும் அமுலாக்கலில் உள்ள பிரச் சினைகளினை தீர்ப்பதற்கு கடன் பெற்றுக்கொள்பவர் தனது சுய அக்கறையில் இவ் ஒப்பந்தங்க ளுக்கு பொறுப்புக்கூறுகின்ற பொழுது, கடன் பெற்றுக்கொண்டவரின் ஆபத் துத்தன்மை தொடர்பான தகவ லினை பெறுகின்றபொழுது மற்றும் கடன் பெற்றுக்கொள்பவர் கட னினை மீள் செலுத்துவதற்கு போது மான வளங்களினை கொண்டிருக் கின்ற பொழுதும் அத்துடன் கடன் மீளளிப்பு செய்வதற்கான தவறு கைக்கான வாய்ப்புக்களினை குறைப்பதற்கு நடவடிக்கைகளினை எடுப்பதற்காக ஊக்கப்படுத்துகின்ற பொழுதும் அவ்வாறனவற்றிற்கு கடன் வழங்குநரினால் ஒப்பந்தங் களின் வடிவமைப்பு தொடர்பாக நேரடிப் பொறிமுறையானது சார்ந் திருக்கின்றது. இவ் வகையான பொறிமுறையானது கடன் சந்தை களில் அதனுள்ளேயே கொண்டிருக் கக்கூடும் (கடன் நிபந்தனைகளில் வட்டி வீதங்கள் மற்றும் கடனின் அளவு போன்றன) அல்லது தொடர்

புபட்ட சந்தைகளின் ஒப்பந்தங்களின் மீது சார்ந்திருக்கக்கூடும் (உதாரணமாக வாடகை உடன்படிக்கைகள்). அவை கடன் சந்தைகளில் கடன்பட்டவர்களின் நடத்தையில் செல்வாக்கினை செலுத்துகின்றது. முதலாவது சந்தர்ப்பத்தில் வட்டி வீதமானது விலையின் இரட்டை தொழிற்பாட்டிற்கும் மறைமுக தரப்படுத்துதல் அல்லது தூண்டுகின்ற பொறிமுறைக்கும் சேவையாற்றுகின்றது. கீழே மேலும் கலந்துரையாடப்படுவதற்கு இணங்க சந்தையினை தெளிவுபடுத்துவதற்கு சமநிலை வட்டி வீதமானது அவசியமில்லை என இது கருதுகின்றது. அவை கடன் பங்கீடாக இருக்கக் கூடும்.

நேரடிப் பொறிமுறையானது (அ) செயலூக்கமான வகையில் விண்ணப்பதாரிகளினை தேர்ந்தெடுத்தல் மற்றும் கடன்களை அமுலாக்கல் போன்றவற்றில் ஆதாரங்களைப் பயன்படுத்துபவர்கள் (ஆ) குறிப்பிட்ட கூட்ட உறுப்பினர்களுக்கு, குறிப்பிட்ட பிராந்தியத்தில் வதிவோருக்கு அல்லது அவர்களுடன் வணிகத்தில் ஈடுபடுகின்ற தனிநபர்கள் போன்றோருக்கு மட்டுமாக கடன் வழங்குநர்களை உள்ளடக்குகின்றது. இவ் நேரடி பொறிமுறைகள் (தனிப்பட்ட உறவுகள், வர்த்தக கடன் இணைப்புக்கள், நுகர்வுரிமைக் கடன்கள் மற்றும் ஏனைய வழிமுறைகள் ஊடாக) கிராமிய கடன் சந்தைகளின் வேறுபட்ட பிரிவினர்களுக்கு இடையே வியாபித்திருக்கின்ற வட்டி வீதங்களுடன் ஏகபோக ரீதியில் போட்டி கட்டமைப்பிற்கு இட்டுச் செல்வதற்கு முனைகின்றது. கிராமிய கடன் சந்தைகளினுள் நிறுவன கடன்களின் நுழைவானது தேர்ந்தெடுத்தல், ஊக்குவித்தல் மற்றும் அமுலாக்கல் போன்ற பிரச்சினைகளினை வெற்றிகொள்வதற்கு பணக்கடன் வழங்குநர்களினால் பயன்படுத்தப்படுகின்ற நேரடி பொறிமுறைகளுக்காக புதிய நிறுவன அமைப்புக்களினை தாங்களாகவே அடையாளப்படுத்தாவிட்டால் பணக்கடன் வழங்குநர்களின் வலுவினை உடைப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

### 4. கொள்கை வகுப்பாளர்கள் எவற்றினை செய்ய முடியும்? கொள்கை வகுப்பிற்காக கடன் சந்தைகள் எவ்வாறு தொழிற்படுகின்றது என பின்வரும் நடைமுறைகள் நல்ல புரிந்துணர்வினை வழங்கும்

#### *i. மறைமுக தெரிவு செய்தல் முறையாக வட்டி வீதங்களினை பயன்படுத்துதல்*

பயன்பாட்டிலுள்ள கடன் வாங்கப்பட்ட நிதிகளுக்கான கருத்திட்டத்தின் ஆபத்துத்தன்மையின் அதிகரிப்பானது தவறுகைக்கான சந்தர்ப்பங்களினை அதிகரிக்கின்றது. அவ்வாறான எதிர்பாராத நிகழ்வினால் கடன் வழங்குநரினால் மொத்தமாக இடப்பட்டதை மீளப்பெறுவதற்கு இயலாமையாக இருப்பதுடன் உண்மையில் பல சமுதாயங்களின் சட்ட ஏற்பாடுகள், கடன் வழங்குநரினால் மீளப்பெற முடியுமான அளவின் வரையறையினை கடுமையாக வரையறுக்கின்றது. கடனின் மூலமாக நிதியளிக்கப்பட்ட கருத்திட்டத்தின் மீதான மொத்த திரும்புகையின் நிகழ்தகவிற்கமைய கடனின் தவறுகையின் நிகழ்வு தங்கியிருக்கின்றது. இது கொடுக்க வேண்டிய முதலினையும் வட்டியினையும் பார்க்க குறைவானதாகும். ஆகையினால் கடன் வழங்குநர் கருத்திட்டத்தின் ஆபத்துத்தன்மையின் அதிகரிப்பினால் மனவேதனையடைகின்றார்.

கருத்திட்டங்களின் ஆபத்துத் தன்மையினை மறைமுகமாகத் தேடிக் கண்டுபிடிப்பதில் வட்டி வீதங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என பார்ப்பதற்கு கடன் பெற்றுக் கொள்பவர்களின் ஆபத்து நடுநிலையானது என எண்ணுவது இலகுவானது (ஆனால் அவ்வாறு அவசியமில்லை). ஆபத்தில் நடுநிலையான கடன் பெற்றுக்கொள்பவர்கள் தவறுகைக்கான ஏற்பாடுகளினை கருத்திற்கொண்டு தேறிய ஆதாயத்தின் சாதகமான எதிர்பார்ப்புடன் கருத்திட்டத்திற்காக கடன் விண்ணப்பங்களினை சமர்ப்பிப்பார்கள். வேறுபட்ட ஆபத்துக்களுடன் அதே வழிமுறையிலான மொத்த ஆதாயத்துடன் கருத்திட்டத்தின் எந்தவொரு வகைக்காகவும், அது கடன் பெற்றுக் கொள்பவர்களால் எதிர்பார்க்கப்படுகின்ற அதாவது வெளிப்படையாக மட்டுமே சாதகமாக தேறிய ஆதாயத்தினை கொண்டிருக்கின்ற எல்லைக் கருத்திட்டங்களினை வட்டி வீதங்கள் தீர்மானிக்கும். மேலுள்ள கருத்தின் மூலமாக உயர் அளவிலான எதிர்பார்க்கப்பட்ட தேறிய ஆதாயத்தினை கடன் பெற்றுக் கொள்பவர்களுக்கு கொடுக்கின்ற இவ்வகைக்குரிய அனைத்து கருத்திட்டங்களும் தவறுகைக்கான உயரளவிலான நிகழ்தகவினைக் கொண்டுள்ளது.

#### *ii. முடிவுறுத்தல்களினதும் சந்தை இடை இணைப்புக்களினதும் ஊக்குவிப்பு விளைவுகள்*

ஒரு கடன் வழங்குநர் அவரினால் விரும்பப்படுகின்ற நடவடிக்கைகளினை கடன் பெற்றுக்கொண்டவர்களினால் மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளினை அதிகரிப்பதற்கு மற்றைய இரண்டு மறைமுக பொறிமுறைகளினை கையாளக்கூடும். முதலாவதாக, கடன் வழங்குநர் கடன் பெற்றுக்கொள்பவரின் நடத்தையின் விருப்பத்தினை தூண்டுவதற்காக கடனினை குறைப்பதற்கான அச்சுறுத்தலினை பயன்படுத்தலாம் (Stiglitz மற்றும் Weiss 1983). அந்த ஊக்குவிப்பினை பயனளிப்பதாக மாற்றுவதற்கு கடனினைப் பெற்றுக்கொள்பவர் கடன்களினை பெற்றுக்கொள்வதில் இருந்து தேவைக்கு அதிகமானதை அனுபவிக்க வேண்டும். இது நிறைவான தகவலுடன் கூடிய சந்தைகளிலி

ருந்து அடிப்படையில் வேறுபட்ட தாக இருக்கின்ற நிறைவில் தக வலுடனான சந்தைக்கான மற்றொரு வழியினை வழங்குகின்றது: போட்டியானது ஆதாயத்தினை பூச்சியத்திற்கு இட்டுச்செல்லாது.

இரண்டாவதாக தவறுகையின் வாய்ப்பின் பாதிப்பிற்காக இவ் வகையான ஏனைய பரிமாற்றங் களில் நில உரிமையாளர்களாக இருக்கின்றவர்கள் அல்லது வியா பாரிகள் ஒப்பந்த ரீதியிலான நிபந் தனைகளினை பயன்படுத்தக்கூடும். அவர்கள் பொருளின் அல்லது வாட கைச் சந்தைகளில் பரிமாற்றங்க ளுடன் கடன் சந்தைகளில் பரிமாற் றத்தின் நிபந்தனைகளினை ஒன்று சேர்த்து இணைக்கக்கூடும் (Braverman மற்றும் Stiglitz 1982, 1986). உதாரணமாக, விற்பனையா ளர் (கடன் வழங்குநர் அவரிடம் கடன் வாங்குகின்ற விவசாயிக்கு பசளைகளினையும் பீடைநாசினிகளி னையும்) அவ்வாறான உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்ற பொழுது தவறுகைக்கான வாய்ப்பு குறைக் கப்படுகின்றமையினால் - குறைந்த விலைக்கு வழங்கக்கூடும். இவ்வண் ணம், கீழே உள்ள தகவல் மற்றும் அமுலாக்கல் பிரச்சினைகளினை தீர்ப்பதற்காக நேரடி பொறிமுறை யாக இடை இணைப்பின் பயன்பாட் டினை ஒருவர் கருத்திற்கொள்ள முடியும்.

### iii. நேரடியான தேடல் மூலமான கண்டுபிடித்தல் பொறிமுறை

மறைமுக தேடிக்கண்டுபிடித்தல் பொறிமுறைகளுக்கு மேலதிகமாக, கடனினை பெற்றுக்கொள்கையில் கடனுக்கான நிபந்தனைகள் மீறப் படுவதாக தோன்றுகின்ற கடன் பெற்றுக்கொள்கின்றவர்களின் நடத்தையினை கண்காணிக்கக் கூடிய நேரடியான தேடல் மூல மான கண்டுபிடித்தல் பொறிமுறை களினையும் பெரும்பாலான கடன் வழங்குநர்கள் உபயோகிக்கின்றனர். அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் செயற்திறனுள்ள கடன் வழங்குநர்களின் கடனுக்கான மீள் செலுத்துகைக்கான நேரடியான தேடல் மூலமான கண்டுபிடித்தல், கண்காணித்தல், மற்றும் அமுலாக் கல் போன்வற்றுக்கான செலவுகள் பெருமளவு வேறுபடுகின்றது. சில கடன் வழங்குநர்களுக்கு அவ்வா றான செலவுகள் குறைவானது. உதாரணமாக, தகவலானது கடன் பெற்றுக்கொள்பவரின் அருகில் உடனிருக்கின்ற உப விளைவுடன் அல்லது அவருக்கு சமனான உறவு முறையுடைய கூட்டத்துடன் அல் லது அவருடன் ஏனைய சில பரி மாற்றங்களுடன் தொடர்புபட்ட தரப் பினருடன் இருக்கக்கூடும். ஆகை யினால், கிராமிய கடன் வழங்குநர் கள் அநேகமாக குறிப்பிடத்தக்க கண்காணிப்புக்களினை மேற்கொள் கின்ற அதேவேளை வங்கிகள் அவ் வாறு செய்வதனை ஏறக்குறைய சாத்தியமற்றதாக கண்டுகொள்ளக் கூடும். தேடித் தேர்ந்தெடுத்தல், கண் காணித்தல் மற்றும் அமுலாக்கல் செலவுகள் போன்றவற்றில் கடன் வழங்குநர்களுக்கு இடையிலான வேறுபாடுகளானவை சந்தைகளின் துண்டாக்கலுக்கு இட்டுச் செல்லக் கூடும்.

### iv. ஏனைய சந்தைகளுடன் இடை இணைப்புக்கள்

ஒரே செல்வவளம் மற்றும் உற் பத்தி இயலுமையுடன் கூடிய கடன் விண்ணப்பதாரிகள், ஒரு குறிப்பிட்ட கடன் வழங்குநருக்காக அவர்களு டைய கடன் தகுதிநிலையினை செயற்திறனுள்ள கடன் வழங்குநரி டம் உறுதிப்படுத்துவதற்கான அவர் களின் இயலுமையானது வேறுபடக் கூடும். அதேபோல் ஒரு விண்ணப் பதாரிக்காக கடன் வழங்குநர்கள் கடன் செயற்பாட்டின் தேர்ந்தெடுத் தல் மற்றும் அமுல்படுத்தலுக்கான அவர்களின் செலவு வேறுபடக் கூடும். இவ்வகை வேறுபாடுகளின் முக்கிய மூலமாக ஏனைய சந்தை களில் தனிப்பட்டவர்களின் பங்கேற் பின் வீச்செல்லை காணப்படுகின் றது. அவ்வாறான பங்கேற்பானது அவ்வாறான சந்தைகளில் பரிமாற் றங்களுடன் கடன்களின் இடை இணைப்பிடல் சாத்தியப்பாட்டினை உருவாக்குகின்றது. இடை இணைக் கப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் தேர்ந் தெடுத்தல், ஊக்குவித்தல் மற்றும் அமுலாக்கல் பிரச்சினைகளினை எளிதாக்குவதற்கான வழிமுறைக ளினை வழங்கக்கூடும்.

இடை இணைப்புக்கள் மிக வினைத் திறனான செயற்பாட்டின் தனிச் சிறப்பான பொறிமுறைக்கு இயலு மையளிக்கவும் கூடும். இது உறவு முறையிலிருந்தான மொத்த நன் மைகளாக இருக்கின்ற நடத்தைப் போக்கினைப் பாதிக்கும். பொருளா தார உறவுமுறை பல சந்தைகளில் பரிமாற்றங்களினை உள்ளடக்கு கின்ற பொழுது அதிகளவு விளைவு களுக்கான வீச்செல்லை காணப் படுகின்றது.

### v. தகவல் சமச்சீரின்மையின் விளைவுகளினையும் அமுலாக் கல் பிரச்சினைகளினையும் வரையறுக்கின்ற உபாயங்கள்

அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் கிராமிய கடன் சந்தை களில் மூன்று உபாயங்கள் பொது வாக பயன்படுத்தப்படுகின்றன - உத்தரவாத அவசியப்பாடுகள், சேமிப்புக்களினை சுற்றோட்டமிடல், கடன் சங்கங்கள் போன்றனவாகும். இவை தகவல் சமச்சீரின்மை விளை வுகளினையும் அமுலாக்கல் பிரச்சி னைகளினையும் வரையறுப்பதற் கான முறையாக கருதப்படுகின்றன. புவியியல் மற்றும் சந்தை பங்கேற்பு போன்ற உபாயங்கள் சில கடன் பெறுபவர்களுக்கும் வழங்குநர் களுக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. இது மற்றவர்களுக்கு அல்ல. ஆகையினால் கடன் வழங்குநர்களுக்கு இடையில் கடன் பெற்றுக்கொள்பவர்களின் வகைப்

படுத்தலுக்காகவும் கிராமிய கடன் சந்தைகளின் கூறாக்கலுக்குமாக விளைவுகளினை கொண்டுள்ளன.

***உத்தரவாதம்*** - அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் வங்கிகள் கடன் பெறுபவர்களினை நேரடியாக தேர்ந்தெடுப்பதும் கண்காணிப்பதும் கடினமாக இருப்பதாக அடையாளப்படுத்தியிருந்தன. ஆகையினால் பொதுவாக நிலத்தின் வடிவத்தினாலான உத்தரவாதத்தின் மீது வங்கிகள் தீவிரமாக நம்பியிருக்கின்றன. ஆனால் முறைசாரா கடன் வழங்குநர்கள் அவ்வாறு அல்ல. ஏனெனில் கிராமப் பிரதேசங்களில் நிலச் சொத்தானது வருவாயுடன் தொடர்புபடுகின்றது. இது சராசரியிலும் பார்க்க கூடிய வருவாயினை உடைய கடன் பெறுபவர்கள் ஏனையவற்றிலும் பார்க்க முறைசார்துறை மூலங்களினை பெருமளவு அடையக்கூடியதாக அடையாளம் கண்டிருப்பது ஏன் என விளக்குகின்றது.

சேமிப்புக்களினை சுற்றோட்டமிடலும் கடன் சங்கங்களும் - பணமாக வழங்கப்படுகின்ற காலத்திற்கு முன்பிருந்தே அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் சேமிப்புக்களினை சுற்றோட்டமிடலும் கடன் சங்கங்களும் (ROSCAS) நீண்டகால வரலாற்றினை கொண்டுள்ளது (Bouman 1983). அவை ஆபிரிக்காவில் பிரதான கடன் மூலமாக தக்கவைத்துக்கொண்டது (பொதுவாக தவணைக் கொடுப்பனவு என அழைக்கப்படுகின்றது). இது ஓரளவிற்கு "கிராமிய நுண் கருத்திட்டத்தின்" (Grameen micro finance) எண்ணக்கருவிற்கு ஒத்ததாக காணப்பட்டாலும் மிகப் பூரணமாக ஒத்ததல்ல - இது பங்களாதேஷில் பேராசிரியர் மொஹமட் யூனஸ் (Mohamed Yunus) இனால் அறிமுகப்படுத்தப்பட்டு இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வழமையான சந்தர்ப்பங்களில் வலுவான சமுதாய அனுமதியளிப்பு காரணமாக அமுலாக்கல் செலவு தாழ்வாக இருக்கின்ற கிராமத்திலிருந்து அல்லது குடும்பங்களில் இருந்து சிறிய குழுவானது உருவாக்கப்படுகின்றது. பெரிய நிதியினை ஈட்டிக்கொள்வதற்கு இயலுமையாக ஒவ்வொரு உறுப்பினரும் சுழற்சி முறையில் சிறிய தொகையினை பொது நிதிக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் செலுத்துவதற்கு உடன்படுகின்றனர். முறைசார் கடன் சந்தையில் சேமிப்பு வட்டி வீதங்களுக்கும் மற்றும் கடன் வாங்கல் வட்டி வீதங்களுக்கும் இடையிலான இடைவெளியானது விசேடபண்பாக அமைந்துள்ளதனால் முறைசார் சந்தையில் பங்கேற்பிற்கு ROSCAS ஆனது விரும்பப்படக்கூடும்.

### 5. கொள்கைக் கண்ணோட்டங்கள்

#### *i. பொருளாதார அபிவிருத்தியும் கிராமிய கடன் சந்தைகளின் மலர்ச்சியும்*

இந்த கட்டுரையானது அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் கிராமிய கடன் சந்தைகளின் அவதானிக்கப்பட்ட பண்புகளான, தேர்ந்தெடுத்தல், ஊக்குவிப்புக்கள் மற்றும் அமுலாக்கல் போன்றவற்றின் பிரச்சினைகளுக்கான புரிந்துகொள்ளப்படக்கூடிய பிரதிச்செயல்களினை தெளிவுபடுத்தியிருக்கின்றது. எவ்வாறாயினும், தகவலின் மிகவும் பரந்துபட்ட சமச்சீரின்மை மற்றும் சட்ட அமுலாக்கலுக்காக மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பரப்பு போன்றவை காரணமாக இப்பிரச்சினைகள் அபிவிருத்தியின் ஆரம்ப காலகட்டங்களில் உள்ள நாடுகளுக்கு மிகவும் தீவிரத்தன்மையானதாக இருக்கின்றன (குறிப்பாக மிகவும் வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்). ஆகையினால், அபிவிருத்தியானது சுயமாகவே கிராமிய கடன் சந்தைகளின் நிறைவில் தன்மையினை நீக்குமா? அல்லது குறைக்குமா? என ஒருவர் வினாவக்கூடும். தொடர்கின்ற அபிவிருத்தி மற்றும் அதிகரிக்கின்ற சராசரி வருமான மட்டங்கள் காரணமாக கிராமிய கடன் சந்தைகளின் நிறைவில் தன்மையானது அற்றுப்போக வேண்டுமென பல ஆய்வுகள் பரிந்துரைத்திருக்கின்றன. இந்த வாதமானது பணக்கடன் வழங்குநர்களிடமிருந்து குறைவான வட்டி வீதங்களினை எதிர்கொள்வதாக தென்படுகின்ற சராசரியிலும் பார்க்க உயர் வருவாயுடனான இந்தியாவின் பிரதேசங்களில் சான்றுகள் மூலமாக ஆதரவளிக்கப்படுகின்றது (Bell> Clive &sirinivasan T.N.1989).

உயர் வீதமானது அநேகமாக பலமான உத்தரவாத்தினை கொண்டிருக்காத விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக கிராமப்புற பணக் கடன் வழங்குநர்கள் வழமையாக அறவிடுகின்ற உயர் ஆபத்து காப்பீட்டு தொகையின் விளைவாக இருக்கின்றது. கடன் தகுதிநிலையின் குறைபாடானது குறைவான வருமானம் மற்றும் அற்ப சேமிப்புக்கள் போன்றவற்றின் பிரதிபலிப்பாக உண்மையில் இருக்கின்றது. ஆகையினால், நிகழ்நேர வருமானத்தின் வளர்ச்சியானது தவறுகையின் நிகழ்தகவினையும் ஆபத்து காப்பீட்டுத்தொகையினையும் குறைக்க வேண்டும் அதன் விளைவாக வட்டி வீதங்கள் குறையும் (Ghatak 1983, pp. 21-22).

மேலுள்ள வாதங்கள், வருமானங்களும் உற்பத்தித்திறனும் அதிகரிக்கின்றது, தவறுகையின் ஆபத்து குறைகின்றது என்ற அவதானிப்புக்களை நம்புகின்றன. கடன் சந்தைகளில் தேர்ந்தெடுத்தல், ஊக்குவிப்பு, மற்றும் அமுலாக்கல் பிரச்சினைகள் அநேகமாக கடன் சந்தைகளுக்கும் மற்றும் ஏனைய சந்தைகளுக்கும் இடையிலான இடை இணைப்புக்களின் ஊடாக குறைக்கப்படுகின்றன. (உதாரணமாக, நிலத்திற்காகவும் பண்டங்களுக்காகவும்). சந்தை இடைத்தாக்

கங்களின் நெருக்கமான வலையமைப்பின் உருவாக்கமானது அபிவிருத்தி வருவாய்களாகவும் தேர்ந்தெடுத்தல் மற்றும் அமுலாக்கல் செலவுகளினதும் குறைவாகவும் எதிர்பார்க்கலாம். நில உரிமைப் பத்திரம் மற்றும் வணிகமயப்படுத்தல் வருவாய்களாக நில உரிமைகளின் தனியார்மயப்படுத்தலுடன் இணைப்பு போன்ற சட்ட மேம்பாடுகள் நிலத்தினை உத்தரவாதமாக பயன்படுத்துவதற்கும், அதன் விளைவாக கடன் சந்தைகளின் செயற்பரப்பினை விரிவுபடுத்துவதற்கும் அனுமதிக்கின்றது.

எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் தொழில்நுட்ப மாற்றங்கள் பாரம்பரிய பிணைப்புகளினை குழப்புவதனால் கடன் மீள் செலுத்துகையின் அமுலாக்கலில் சமூக ஒப்புதலின் பலமானது குறையக்கூடும். ஆகையினால், அபிவிருத்தியின் எழுச்சியில் சமூக பிணைப்புக்கள் உடைகின்றமையினால் கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தன்மையானது சிறப்படைவதற்கு முன்னர் மிக மோசமான நிலையினை அடையக்கூடும். ஆனால் அதற்கு முன்னர் சந்தைகளுக்கு இடையில் இடையீட்டு விளைவுகளின் நெருக்கமான வலையமைப்பானது உருவாக்கப்படுகின்றது. குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் கிராமிய கடன் சந்தைகளில் நிறைவில் தன்மையின் அக்கறைக்கு அபிவிருத்தியின் மூலமாக சுயமாக வாய்பில்லாதமையினால் கொள்கைத் தலையீடானது வேண்டப்படக்கூடும்.

### *ii. அரசாங்க தலையீடும் கடன் மானியங்களும்*

கிராமிய கடன் சந்தைகளின் பிரச்சினைகளில் ஒன்றாக அமுலாக்கலானது (அதன் குறைபாடு) காணப்படுகின்றமையினால், பிந்தைய காலப்பகுதியில் மானியங்களினை (பொது வருவாயினைப் பயன்படுத்தி) விரிவுபடுத்துவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ இயலுமையினையும் அழுத்தத்தினையும் பயன்படுத்துவதற்கு சட்டரீதியிலான ஏகபோக உரிமையினையும் கொண்டிருக்காதமையினால் கடன் வழங்குநரான அரசாங்கமானது தனியார் துறையினர் மீது சாதகமான போக்கினைக் கொண்டுள்ளது என விவாதிக்கப்படகூடும். எவ்வாறாயினும் பல அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் அனுபவமாக அநேகமாக அரசாங்கமானது அரசியல் ரீதியாக இந் நன்மைகளினை பயன்படுத்துவதற்கு இயலுமையற்றதாக இருக்கின்றது என பரிந்துரைக்கின்றது.

இத் தொகுக்கப்பட்ட சான்றுகளினை கருத்திற்கொண்டு, அமுலாக்கல் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கின்ற வழிமுறையாக அரசாங்கத்தினால் நேரடி கடன் நிரம்பலுக்கான காரணமானது வினாவப்பட வேண்டும். விடுபட்டிருப்பவை எவை?, அரசாங்கத்தினால் இலாபகரமாக கடனினை விநியோகிக்க இயலுமாக இருப்பது உண்மையா?, கிராமிய முறைசார கடன் சந்தை மீது இதன் விளைவாக இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் எவை? போன்றன. கிடைக்கக்கூடிய சான்றுகளுக்கு இணங்க, இலாபகரமான கடன் வழங்கலானது முறைசாராதுறையினை சார்ந்த கடன் வழங்குநர்களினை வெளியேற்றும் என நிச்சயமாக பரிந்துரைக்கவில்லை. அத்துடன் அவர்களினால் அறவிடப்படுகின்ற வட்டி வீதங்களினையும் குறைந்த மட்டத்திற்கு தள்ளிச் செல்லாது.

கடனினைப் பெற்றுக்கொள்பவர்களில் சிலர் அரசாங்க நிறுவனங்களில் இருந்து இலாபகரமான நிதிக்கான நேரடி அனுகலினை கொண்டிருந்தால் அத்துடன் இம் மூலங்களில் இருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் அனைத்து அவசியப்பாடுகளினையும் திருப்தி செய்வதற்கு முடியுமானால் உண்மையில் முறைசாரா துறையில் கடனுக்காக குறைவான கேள்வி காணப்படும். செயற்பட வேண்டிய கிராமிய கடன் சந்தைகள் பாரம்பரிய சந்தைகளாக செயற்பட்டால் இது வட்டி வீதங்களின் மீது கீழ்நோக்கிய அழுத்தத்திற்கு முயலும். ஆனால் கிராமிய கடன் சந்தைகள் அந்த பாணியில் நடந்துகொள்ளாது வட்டி வீதமானது தேர்ந்தெடுப்பதற்கான பங்கினை வகித்தால் அத்துடன் இது கடன் பங்கீட்டுக்கு இட்டுச் செல்லுமாயின் கடனின் சிறிய ஊக்குவிப்புடன் வட்டி வீதம் வீழ்ச்சியடைவது சாத்தியம் இல்லாமல் காணப்படுகின்றது. மாறாக, கடன் வழங்குநர்கள் நேரடித் தேர்ந்தெடுப்பில் ஈடுபட்டால் அவ்வாறான பணக் கடன் வழங்குநர்கள் உயர் தேர்ந்தெடுத்தல் செலவுகளுடன் சந்தையினை விட்டு வெளியேறக்கூடும். அத்துடன் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கலாம்.

கடன் பெற்றுக்கொள்பவர் அரசாங்கத்திடமிருந்து அவர்களுடைய தேவைகளினை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாவிடின் அத்துறையிலிருந்து அவர்களுடைய கடன் தேவைகளின் பகுதியினை மட்டுமே பெறவேண்டும். அப்பொழுது முறைசாராத்துறை தொடர்பாக முறைசார் துறையின் கடன்களினை முன்னுரிமையானதாகவோ அல்லது முன்னுரிமையற்ற கடனாகவோ கையாளுவதென்பது பிரச்சினையாகும். முறைசார்த்துறையானது முன்னுரிமையானது ஆயின் உண்மையில் முறைசாராத்துறையானது உயர் ஆபத்தானதாக மாறுகின்றது. இது முறைசாராத்துறையில் வட்டி வீத அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லக் கூடியதா? செயலூக்கமான தேர்ந்தெடுத்தல் காணப்படுகின்ற ஏகபோக உரிமை ரீதியிலாக போட்டி அமைப்புக்களில் பிரச்சினையினை

மேலும் மோசமாக்குவது, சிறிய அளவினதான கடன்களுக்கு மத்தியில் தேர்ந்தெடுத்தல் செலவுகளினை பங்கிடப்பட வேண்டியிருப்பதால் ஆகும். இது சராசரி செலவினை அதிகரிப்பதுடன் வட்டி விதத்தினையும் உயர்த்துகின்றது. மாறாக, முறைசார் துறை கடன்கள் முன்னுரிமையற்ற கடனாக கையாளப்படுமாயின் முறைசாராத்துறை கடன் தொடர்பான விளைவு நிச்சயமற்றதாக காணப்படுகின்றது. குறைவான வீதங்களினை அடையக்கூடியதன் விளைவாக பாரிய கடனினை பெற்றுக்கொள்ளல் தவறுகைக்கான ஆபத்தினை அதிகரிக்கின்றது (முறைசாராத்துறை கடன்கள் மற்றும் வட்டி வீதங்கள் எந்தவொரு கொடுக்கப்பட்ட மட்டத்திலும்). ஆனால் தவறவிடுகைக்கான ஆபத்தின் சரிசம விகிதாசாரமற்ற பகிர்வானது முறைசாரா துறையினால் பொறுத்துக்கொள்ளப்படுகின்றது. முறைசாராத்துறை நிதிக்கான சமத்துவமற்ற அணுகல் முறைசாராத்துறைக்காக மேலும் சிக்கல்களினை கொண்டிருக்கக்கூடும். அதிக உத்தரவாதத்துடன் முறைசார்த்துறை கடனானது அதிக எண்ணிக்கையான கடன் பெற்றுக்கொள்பவர்களுக்கு செல்லுமாயின் அத்துடன் ஆதாரங்கள் அவ்வாறு பரிந்துரைக்குமாயின் அப்பொழுது தேர்ந்தெடுக்க வேண்டியுள்ள முறைசாராத்துறையினுள் உள்ள விண்ணப்பதாரிகளின் கலவையினை பாதகமான முறையில் மாற்றுகின்றதுடன் இது அங்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதங்களினையும் அதிகரிக்கக்கூடும்.

முறைசார் துறை கடன்கள் கடன் பெற்றுக்கொள்பவர்களுக்கு நேரடியாகச் செல்லாமல் மாறாக நிதி மத்தியஸ்தர்களாக செயற்படுகின்ற பண வழங்குநர்களுக்கு செல்லுமாயின் அதன் விளைவானது (அ) முறைசாரா வழங்குநர்கள் செலவினை எவ்வாறு மாற்றுகின்றார்கள் (ஆ) முறைசாராத் துறையில் போட்டியின் மட்டம் எவ்வாறு மாறுகின்றது போன்றவற்றில் தங்கியிருக்கின்றது. அரச நிதிகளுக்கான சலுகையளிக்கப்பட்ட அடைவுகள் நுழைவினை அதிகரிக்குமாயின் ஒவ்வொரு பண கடன் வழங்குநர்களினதும் சிறிய வாடிக்கையாளர் குழுமத்தின் மீதும் பரந்திருக்கின்ற கடன் பெற்றுக் கொள்பவர்களின் தேர்ந்தெடுத்தல் செலவு காரணமாக பண வழங்கலின் சராசரி செலவுகளினை அதிகரிக்கின்றது. அப்பொழுது முறைசாரா துறையின் வட்டி வீதங்கள் அறவே குறைய வேண்டியது அவசியமில்லை. இது கிராமிய கடன் சந்தைகளில் ஏகபோக ரீதியிலான போட்டியின் மற்றொரு சிக்கலாகும்.

பொதுவாக, நிறைவில் தகவல் கட்டமைப்பானது கிராமிய கடன் சந்தைகளில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நிதி மத்தியஸ்தர்களின் மீது சார்ந்திருப்பதன் இடர்பாடுகளினை நாடுகளுக்கு எச்சரிக்கின்றது. முறைசார் துறை நிறுவனங்கள் பண வழங்குநர்கள் தொடர்பாக அதே வகையான தகவல் மற்றும் அமுலாக்கல் பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர்.

### iii. நிறுவன ரீதியிலான புத்தாக்கமும் அரசாங்கக் கொள்கையின் பங்கும்

“நிறைவில் தகவல்” / “செலவுமிக்க அமுலாக்கம்” உருமாதிரியானது பாரம்பரிய “ஏகபோகவுரிமை” எதிர் “நிறைவான சந்தைகள்” இருந்து விலகியிருக்கின்றது. பாரம்பரிய போட்டிச் சந்தைகளாக செயற்படாது கிராமிய கடன் சந்தைகளாக இருப்பதாக வைத்துக் கொண்டு விவாதிக்க முடியுமாயின், அவை வினைத்திறனானது என கருதவில்லை. எவ்வாறாயினும், முதன்மையாக கிராமிய பண கடன் வழங்குநர்களின் ஏகபோக அதிகாரத்தின் பிரதிபலிப்பிலும் கூட கோட்பாடு மற்றும் சான்று ஆகிய இரண்டும் உயர் வட்டி வீதங்கள் அவசியமானதல்ல என பரிந்துரைக்கின்றது. மேலும், தேர்ந்தெடுத்தல், ஊக்குவிப்புக்கள் மற்றும் அமுலாக்கல் பிரச்சினைகள் காரணமாக கிராமிய கடன் சந்தைகள் செயற்பட வேண்டிய வழியில் நடந்துகொள்கின்றன.

அரச கடன் வழங்குகின்ற நிறுவனங்கள் கடன் பெற்றுக்கொள்பவர்கள் தொடர்பான அதே மாதிரியான பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் தகவல் சமச்சீரின்மை, கண்காணிப்பு மற்றும் அமுலாக்கல் போன்றவற்றினைப் பொறுத்தவரையில் மோசமான நிலைமையில் காணப்படக்கூடும். அவ்வாறாயின், இவை அனைத்துக்குமாக அரசாங்கக் கொள்கை சார்பாக ஏதாவது பங்கு காணப்படுகின்றதா? Greenwald மற்றும் Stiglitz (1986) என்பவர்கள் நிறைவில் தகவலுடனான சந்தை வெளிவாரி விளைவிற்கு -சரிநேர் விளைவுகள் - அதிகரிப்பினை கொடுக்கின்றதுடன் அரசாங்கத்தினுடைய தலையீடானது மிகவும் வெற்றிகரமானதாக இருக்கக்கூடும் என தெளிவுபடுத்தியிருந்தனர். கடன் சந்தைகளின் சூழ்நிலையில், அடையாளப்படுத்தப்படக்கூடிய வெளிவாரி விளைவொன்றானது ஏனைய சந்தைகளில் அபிவிருத்தியினால் ஏற்படுகின்ற அமுலாக்கல் மற்றும் தகவல் செலவுகளின் குறைப்பாக காணப்படுகின்றது. உத்தரவாதம் மற்றும் பணப் பயிர்களின் அறிமுகம் என்ற ரீதியில் நிலத்தின் உரிமைப் பத்திரமானது நிலத்தின் பெறுமதியினை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதிகரிக்கின்றது. இது வணிக கடன் ஒப்பந்தங்களில் இடை இணைப்பிற்கான வாய்ப்பினை உருவாக்குகின்றது. இது அமுலாக்கலுக்கான கடன் வழங்குநர்களின் செலவினை குறைக்கின்றது. குறைவான ஆபத்தினை கொண்ட விவசாய உருவாக்கத்திற்கான உட்கட்டுமானங்களில்

அரசாங்கத்தின் முதலீடானது கடன் பெற்றுக்கொள்பவர்களுக்கும் கடன் வழங்குநர்களுக்கும் இடையிலான தகவல் சமச்சீரின்மையின் முக்கியத்துவத்தினை குறைக்கும்.

## முடிவுரை

இந்தக் கட்டுரையானது செயல்முறை ரீதியிலான மற்றும் அனுபவ ரீதியிலான அனுபவங்களில் இருந்து பெறப்படுகின்றது. அவற்றிலிருந்து, "நிறைவில் கடன் சந்தைகளாக" ஒருசமயம் சாதாரணமாக கூறப்பட்ட சிக்கலான முறைமையினுள் (கறுப்புப் பெட்டியினுள்) ஒருவர் அவதானிக்கக்கூடியதை தெளிவுபடுத்துவதற்கு இது விருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. ஒருவர் உள்ளார்ந்த தன்மையினையும் அவ்வாறான நிறைவில் தன்மைகளின் மூலங்களினையும் மதிப்பிட முடிகின்றதுடன், அரசாங்கத்தின் மாற்றுவழிக்குரிய கொள்கைகளின் விளைவுகளினை மதிப்பிடுவதற்கான கட்டமைப்பினையும் நாம் கொண்டுள்ளோம். ஒரு வளமான ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் எம்முன்னிலையில் இடப்படுகின்றது. அவையாவன, இந்த ஆய்வில் அடையாளப்படுத்தப்பட்ட ஏனைய நாடுகளுக்கு பொதுவாக இருக்கின்ற பரிமாணத்தினை ஆராய்தல், இந்த அத்தியாயத்தில் எம்மால் ஆராயப்பட்டிருக்கின்ற, கடன் விண்ணப்பதாரிகளினை தேர்ந்தெடுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கான முறைகளின் வினைத்திறனினை ஆராய்தல், அத்துடன் கடன் சந்தைகளில் பல்வேறுபட்ட அரசாங்கத்தின் தலையீடுகளின் விளைவுகளினை மதிப்பாய்வு செய்தல், தகவல் சமச்சீரின்மையினை கவனத்திற்கொள்ளல் மற்றும் இலங்கையில் உள்நாட்டுக்குரிய அமுலாக்கல் பிரச்சினைகள் போன்றன ஏனையவையாகும்.

## உசாத்துணை நூல்கள்


Adams, Dale W., and Delbert A. Fitchett, eds. 1992.Informal Finance in Low-Income Countries.Boulder, Colo.: Westview Press.

Adegboye, R. 0. 1983. "Procuring Loans by Pledging Cocoa Trees." In J. D. Von Pischke, Dale W. Adams, and Gordon Donald, eds., Rural Financial Markets in Developing Countries. Baltimore, Md.: Johns Hopkins University Press.

Akerlof, George. 1970. "The Market for Lemons: Qualitative Uncertainty and the Market Mechanism." Quarrerly Journal of Economics 84: 488-500.

Bell, Clive, and T. N. Srinivasan. 1989. "Interlinked Transactions in Rural Markets: An Empirical Study of Andhra Pradesh, Bihar and Punjab." Oxford Bulletin of Economics and Statistics 51 (1): 73-83.

Bell, Clive, T. N. Srinivasan, and Christopher Udry. 1990. "Agricultural Credit Markets in Punjab: Segmentation, Rationing and Spillover." Yale University, Economic Growth Center, New Haven, Conn. Processed.

Besley, Timothy, Stephen Coate, and Glenn Loury. 1991. "The Economics of Rotating Savings and Credit Associations." R.P.D.S. Discussion Paper 142.Princeton University, Woodrow Wilson School, Princeton, N.J.

Bouman, F. J. A. 1983. "Indigenous Savings and Credit Societies in the Developing World."In J. D. Von Pischke, Dale W Adams, and Gordon Donald, eds., Rural Financial Markets in Developing Countries. Baltimore, Md.: Johns Hopkins University Press.

Braverman, Avishay, and Joseph E. Stiglitz. 1982. "Share cropping and the Interlinking of Agrarian Markets." American Economic Review 72 (4): 695-715.. 1986. "Landlords, Tenants and Technological Innovations." Journal of Development Economics,2 3: 383-413.

de Meza, David, and David C. Webb. 1987. "Too Much Investment: A Problem of Asymmetric Information." Quarterly Journal of Economics 100: 281-92.

Edwards, John H. Y 1989. "Rotating Credit Associations and Lotteries as Financial Instruments for thePoor."Tulane University, Economics Department, New Orleans, La. Processed.

Floro, Sagrario, and Pan Yotopoulos. 1991. Informal Credit Markets and the New Institutional Economics: The Case of PhilippineAgriculture. Boulder, Colo.: Westview Press. Ghatak, Subrata. 1983. "On Inter regional Variations in Rural Interest Rates." Journal of Developing Areas 18: 21-34.

Greenwald, Bruce, and Joseph E. Stiglitz. 1986. "Externalities in Economies with Imperfect Information and Incomplete Markets." Quarterly Journal of Economics 101: 229-64.

Harriss, Barbara. 1983. "Money andCommodities: Their Interaction in a Rural Indian Setting." In J. D. Von Pischke, Dale W. Adams, and Gordon Donald, eds.,


தொடர்ச்சி 40 ஆம் பக்கத்தில்....

# நல்லாட்சி

பங்குனி - 2015

நந்தசிறி கீம்பியஹெட்டி

*பொருளியலில் சிரேஷ்ட விரிவுரையாளர்*

*றுகுணு பல்கலைக்கழகம்*

## அறிமுகம்

ஆளுகை தொடர்பான இவ் எண்ணக்கருவானது புதியதல்ல. அது மனித நாகரிகத்தினைப் போல் பழமை வாய்ந்தது. எனினும், "நல்லாட்சி" ஆனது இலங்கையின் பொது நிர்வாகத்தின் சொற்றொகுதியில் 2015 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலினைத் தொடர்ந்து அதிக கவனத்தினை பெற்றிருந்த அண்மைய நுழைவாக இருக்கின்றது.

நல்லாட்சிக்கு உலகளாவிய தனியொரு வரைவிலக்கணம் இல்லாத போதிலும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க தகுதிவாய்ந்த நன்கு வரையறுக்கப்பட்ட குறியிலக்கு காணப்படுகின்றது. இப்பதமானது சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதிக நெகிழ்ச்சித்தன்மையுடன் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் நல்லாட்சியானது அபிவிருத்தியினதும் சமத்துவத்தினதும் நோக்கத்தினை அடைவதற்கு அவசியமாகின்ற அரசியல் மற்றும் நிறுவன ரீதியிலான நடைமுறைகள் அத்துடன் வெளிப்பாடுகளுடன் தொடர்புபடுகின்றது என்ற கணிசமான அளவு ஏற்றுக்கொள்ளல் காணப்படுகின்றது. பொது விவகாரங்கள், வளங்களின் மீது கட்டுப்பாடு, முக்கியமாக துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் அற்ற தன்மையில் மனித உரிமைகளின் உணர்விற்கு உத்தரவாதமளித்தல் மற்றும் உரிய கவனத்துடன் சட்ட ஆளுகை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை போன்றவற்றிற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நல்லாட்சி செயல்முறைகள் காணப்படுவதாக உணரப்படுகின்றது. "நல்லாட்சியின்" உண்மையான அளவீடானது, நியாயமான சட்ட உரிமை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு அத்துடன் குடியியல், கலாசார, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் போன்ற மனித உரிமைகளின் வாக்குறுதிகள் மீதான வெளிப்படுத்தல்களின் அளவாக இருக்கின்றது. அரசாங்கத்தின் முறைசார் எண்ணக்கரு, ஜனநாயகத்தின் மீளுருவாக்கம், பொது நிர்வாகத்தினை மேலும் திறந்ததாகவும், வெளிப்படைத்தன்மையானதாகவும் மற்றும் பொறுப்புக்கூறத்தக்கதாகவும் உருவாக்குதல் போன்றவற்றிற்கு அப்பால் பொது நிர்வாகத்தின் குறியிலக்கினை விரிவுபடுத்துவதற்கான முயற்சியாக இருப்பது வெளிப்படையானது.

இந்த பல்வேறுபட்ட சர்வதேச நிறுவனங்களினால் "நல்லாட்சிக்காக" வழங்கப்படுகின்ற பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களினையும் இக்கட்டுரையானது ஆராய்கின்றதுடன் நல்லாட்சிக்கான அர்த்தம், அடிப்படைக்கூறுகள் மற்றும் பண்புகளினை விரிவாக விபரிப்பதற்கும் முயற்சிக்கின்றது.

## ஆட்சியும் நல்லாட்சியும்

"ஆட்சி" என்ற பதத்தின் மூலமாக பல்வேறுபட்ட மக்களினால் பல்வேறுபட்ட விடயங்கள் கருதப்படக்கூடும். "அபிவிருத்திக்காக நாட்டினுடைய பொருளாதார மற்றும் சமூக வளங்களின் முகாமைத்துவத்தில் அதிகாரத்தினை பயன்படுத்துகின்ற தன்மையினை" "நல்லாட்சி" ஆக உலக வங்கியானது வரையறுக்கின்றது. ஆளுகையின் எண்ணக்கருவினை குறிப்பாக தெரிவிக்கின்ற இந்த வரைவிலக்கணமானது அபிவிருத்தி செயன்முறைகளின் முகாமைத்துவம் மற்றும் அரசாங்கத்தினதும் அத்துடன் தனியார்துறையினர் ஆகிய இரண்டினதும் ஈடுபாடு போன்றவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இது அரச துறையின் தொழிற்பாடுகளினையும் அதேபோல் செயற்பாடுகளினையும் நிறைவேற்றுவதற்கு அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டிற்குமான கட்டமைப்பினை உருவாக்குகின்ற நெறிமுறைகளினையும் ஒழுங்குவிதிகளினையும் உள்ளடக்கியிருக்கின்றது. பரந்த அர்த்தத்தில், பிரசைகள் அரசாங்க முகவர்களுடனும்/அலுவலர்களுடனும் அதேபோல் அவர்களுக்கு இடையேயும் தொடர்புகொள்கின்ற நிறுவன பொறிமுறையாக ஆளுகையானது காணப்படுகின்றது.

வெப்ஸ்தரின் கலைக்களஞ்சிய அகராதியானது (Webster's Encyclopedic Dictionary) "ஆட்சி" இனை அரசாங்கத்தின் அல்லது முகாமைத்துவத்தின் முறை அல்லது முறைமையாக வரையறுக்கின்றது. "ஆட்சி" என்ற பதமானது "அரசாங்கம்" என்ற பதத்தில் இருந்து வேறுபடுகின்றது. ஆட்சி பண்பறிரீதியிலான எண்ணக்கருவாக இருக்கின்ற அதேசமயம் பௌதீக அமைப்பாகவும் காணப்படுகின்றது. சாதாரணமாக "ஆட்சி" எனக் குறிப்பிடப்படுவது தீர்மான

மெடுத்தல் செயல்முறையினையும் தீர்மானமெடுத்தல் மூலமான செயல்முறை அமுல்படுத்தப்படுவதனையும் கருதுகின்றது (அல்லது அமுல்படுத்தப்படுவதில்லை). கூட்டாட்சி, தேசிய ஆட்சி மற்றும் உள்ளூராட்சி போன்ற பல வடிவங்களில் ஆட்சியினைப் பயன்படுத்த முடியும்.

அண்மையில் "ஆட்சி" மற்றும் "நல்லாட்சி" என்ற பதமானது அபிவிருத்தி இலக்கியத்தில் அதிகளவு பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மோசமான ஆட்சியானது எமது சமுதாயத்தினுள் அனைத்து தீமை தருகின்ற அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக தொடர்புபடுகின்றது. நல்லாட்சியானது குறிப்பிட்ட பெறுமதி ஏற்பனவினை சுட்டிக் காட்டுகின்ற ஆதாரமாக இருக்கின்ற அதேசமயம் ஆட்சியானது பெறுமதியினை சுட்டிக்காட்டுகின்ற செயல்முறையாகும்-தன்னிச்சையான கருத்து.

"நல்லாட்சி" எண்ணக்கருவானது 1989 இல் துணை சஹாரன் ஆபிரிக்கா தொடர்பான உலக வங்கியின் ஆவணத்தில் முதல் தடவையாக வலியுறுத்தப்பட்டது. "நாட்டின் உள்ளார்ந்த பண்புகளின் தோற்றப்பாட்டினை தீர்மானிக்கின்ற நிறுவன ரீதியிலான சூழலின் (பொறுப்புக்கூறல், சட்ட ஆளுகை, திறந்த தன்மையும் வெளிப்படைத் தன்மையும் போன்ற முக்கிய ஆளுகைக்கான அடிப்படைக் கூறுகள் தொடர்பாக கரிசனையுடன்) மதிப்பீட்டுடன் ஆட்சியின் மேம்படுதல் ஆரம்பிக்கும்: ஏனைய அனைத்து காரணிகளும் இல்லாதிருக்கின்ற பொழுது உயர்வாகவும் அவை உள்ள பொழுது தாழ்வாகவும் காணப்படும்". நல்லாட்சியின் மூலமாக திறமையான நிறுவன ரீதியிலாக முகாமைத்துவத்தினை கருத்தில் கொள்வது அறிக்கையின் நோக்கமாக இருந்தது. இந்த உள்ளடக்கத்தில் நான்கு முக்கிய குறியிலக்குகள் காணப்பட்டன. அவையாவன (i) அரசாங்கத்துறையின் முகாமைத்துவம் (ii) பொறுப்புக்கூறல் (iii) அபிவிருத்திக்காக சட்ட கட்டமைப்பு (iv) தகவலும் வெளிப்படைத்தன்மையும் போன்றனவாகும்.

1992 ஆம் ஆண்டின் "ஆட்சியும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பிடப்பட்ட உலக வங்கியின் மற்றொரு அறிக்கையில் "ஆட்சியானது அபிவிருத்திக்காக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளங்களின் முகாமைத்துவத்தில் நடைமுறைப் படுத்துகின்ற அதிகாரத்தின் பாங்கு" என வரையறுக்கப்படுகின்றது. வலுவானதும் சமத்துவமான அபிவிருத்தியினை ஊக்குவிக்கின்ற ஒரு பலனளிக்கத்தக்க பொருளாதார சூழலின் உருவாக்கத்திற்கும் நிலைத்திருப்பிற்குமாக நல்லாட்சியானது முக்கிய அடிப்படைக் கூறாக இருந்ததாக உலக வங்கியானது உணர்ந்திருந்தது.

(1) அரசியல் ஆட்சிமுறை வடிவம் (பாரளுமன்றம்/சனாதிபதி, படைப்பிரிவு/குடிமக்கள் அத்துடன் சர்வாதிகார/ஜனநாயக).


(2) நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளங்களின் முகாமைத்துவத்தில் அதிகாரத்தின் மூலமாக செயற்படுத்தப்படுகின்ற நடைமுறை.

(3) அரசாங்கத்தின் தொழிற்பாடுகளினை செயற்படுத்துவதற்காக கொள்கைகளினையும் மற்றும் பொதுவாகவும் வடிவமைப்பதற்கும், உருவாக்கத்திற்கும் மற்றும் அமுலாக்கலுக்கும் அரசாங்கத்தின் இயலுமை.

அரசியல் மற்றும் நிர்வாக சிறப்புக்களுடன் கையாளுவதற்கு நல்லாட்சியின் சிறப்பியல்புகள் பலவற்றினை உலக வங்கியானது அடையாளப்படுத்தியிருக்கின்றது. அவை பின்வருமாறு...

- மக்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் முறைமையினையும் அரசியல் அதிகாரத்தின் செயற்பாட்டினையும் சட்டபூர்வமானதாக்குவதற்கு ஒழுங்கு முறையிலமைந்த தேர்தல்களை உள்ளடக்குகின்ற **அரசியல் பொறுப்புக்கூறல்.**
- ஆட்சியின் செயல்முறைகளில் பல்வேறுபட்ட சமய, சமூக, பொருளாதார, கலாசார மற்றும்

**உரு 1**
**நல்லாட்சியின் சிறப்புக்கள்**



தொழில்சார் குழுக்களினால் **பங்கேற்பிற்கான சுதந்திரம்**.

- மனித உரிமைகள், சமூக நீதியின் பாதுகாப்பு மற்றும் சுரண்டல் அத்துடன் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான உறுதிப்பாடு போன்றவற்றினை பாதுகாப்பதற்கு சுதந்திரமான நீதித்துறை முறைமை - **சட்ட ஆளுகையின் இறையாண்மை**

- தரமான சேவை வினைத்திறனற்ற மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பில் அரச அலுவலர்களின் செயற்பாடுகளினை கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான முறைமையினை உறுதிப்படுத்துகின்ற **அதிகாரத்துவ பொறுப்புக்கூறல்**. இது நிர்வாகத்தின் திறந்த, வெளிப்படைத் தன்மையினையும் உறுதிப்படுத்தும்.

- அரசாங்க கொள்கைகளின் உருவாக்கம், தீர்மானமெடுத்தல், கண்காணித்தல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மதிப்பாய்வு போன்றவற்றுக்காக அவசியப்படுகின்ற **தகவலினை அறிவதற்கான சுதந்திரம்**.

- வினைத்திறனுக்கும் பலனளிப்பிற்கும் இட்டுச்செல்கின்ற **பலனளிக்கத்தக்க நிர்வாக முறைமை** (பொருளாதார ரீதியில் வினைத்திறனான).

- **அரசாங்கத்திற்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் இடையில் ஒத்துழைப்பு** (தீர்மானமெடுத்தலிலும் அமுலாக்கலிலும் பங்குதாரர்களின் பங்கேற்பு).

அரசாங்கமானது நல்லாட்சியில் முக்கிய பங்கு வகிப்பவராக இருப்பது அவசியமாகின்றது. ஆளுகையில் தொடர்புபடுகின்ற ஏனைய பங்காளர்கள் அரசாங்கத்தின் அக்கறைகளின் அளவினைப் பொறுத்து வேறுபடக்கூடும். உதாரணமாக, கிராமப் பிரதேசங்களில் முனைப்பான நில உரிமையாளர்கள், விவசாய தொழிலாளர்களின் அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் மதத்தலைவர்கள் போன்ற ஏனைய பங்கேற்பாளர்களினை உள்ளடக்கக்கூடும். நகர்ப்புற பிரதேசங்களில் இதன் கட்டமைப்பானது மிகவும் பன்முகப்படுத்தப்பட்டது. தேசிய ரீதியில் மேற்கூறப்பட்ட பங்குதாரர்களிற்கு மேலதிகமாக ஊடகங்கள், பிரபல்யமானவர்கள், சர்வதேச நன்கொடையாளர்கள், பல்தேசிய நிறுவனங்கள் போன்றன தீர்மானமெடுத்தலில் நேரடிப்பங்கினை வகிக்கக்கூடும் அல்லது தீர்மானமெடுக்கின்ற செயல்முறைகளில் மறைமுகமாக செல்வாக்கினை செலுத்தக்கூடும். அரசாங்கத்தினைத் தவிர அனைத்து பங்குதாரர்களும் அத்துடன் படைகளும் சிவில் சமூகமாக ஒன்றுதிரட்டப்படுகின்றனர்.

## நல்லாட்சியின் அடிப்படைக் கூறுகள்

உலக வங்கிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு (OECD) போன்ற பல எண்ணிக்கையான பல்தரப்பு அமைப்புக்கள் நல்லாட்சியினுள் அமைந்துள்ளனவற்றினை வலியுறுத்தியுள்ளன. UNDP இற்கு இணங்க நல்லாட்சியானது பங்கேற்பு, இசைவு, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, பதிலளிக்கத்தக்க, பலனளிக்கத்தக்க, வினைத்திறனான, சமத்துவமானதும் அனைவரையும் உள்ளடக்கியதும் மற்றும் சட்ட ஆளுகையினைப் பின்பற்றுதல் போன்ற எட்டு பிரதான சிறப்புப் பண்புகளினை கொண்டிருக்கின்றது. நல்லாட்சியானது ஊழல் நீச்சப்படுத்தப்படுகின்றது என்றும், சமூகத்தின் மிகவும் கைவிடப்பட்ட மற்றும் சிறுபான்மையினரின் குரல்களினை தீர்மானமெடுத்தலில் கருத்திற்கொள்ளப்படுகின்றது என்றும் உறுதிப்படுத்துகின்றது. இது மேலும் சமுதாயத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால அவசியப்பாடுகளுக்கு அனுகூலமான வகையில் செயலாற்றுகின்றதாகவும் காணப்படுகின்றது.

### (1)பங்கேற்பு

நல்லாட்சியின் முக்கிய அடித்தளமாக பங்கேற்பு காணப்படுகின்றது. அனைத்து ஆண்களும் பெண்களும் நேரடியாகவோ அல்லது அவர்களின் அக்கறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டரீதியிலான மத்தியஸ்தம் வகிக்கும் நிறுவனங்களின் ஊடாகவோ தீர்மானமெடுத்தலில் தமது குரலினை எழுப்பவேண்டும். அவ்வாறான பரந்தளவிலான பங்கேற்பு கூட்டுரிமை மற்றும் பேச்சுச் சுதந்திரமும் அதேபோல் ஆக்கபூர்வமான முறையில் பங்கேற்பதற்கான ஆற்றலும் கட்டியெழுப்பப்படுகின்றது. பல நாடுகளில் நடைமுறைப்படுத்துகின்ற பிரதிநிதித்துவ ஜனநாயகமானது தீர்மானமெடுத்தலில் கருத்திற்கொள்ளப்படுகின்ற மிகவும் கைவிடப்பட்ட சமுதாயத்தின் அக்கறைகளுக்கான அவசியமான உத்தரவாதமில்லை என்பது இங்கு குறிப்பிடுவது முக்கியமானது. மக்கள் அபிவிருத்தியின் இறுதிப் பயனாளி மட்டுமல்ல அவர்கள் அபிவிருத்திக்கான முகவர்களும் கூட என முதலாவதாக பங்கேற்பின் கொள்கை

யானது ஏற்றுக்கொள்கின்றது. இரண்டாவதாக ஆற்றலானது, இங்கு மக்கள் வர்த்தக தொழிற் சங்கங்கள், வணிகக்கழகங்கள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் அல்லது அவர்களின் தனிப்பட்ட இயலுமைகள் (வாக்களிப்பு, வானொலி, மற்றும் தொலைக்காட்சி பேச்சுக்கள் ஊடாக) போன்றவற்றின் ஊடாக செயற்படுவதாக கருதப்படுகின்றது. நல்லாட்சியானது அவசியமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தானது, அபிவிருத்தியானது மக்களினால் மக்களுக்கானதாக இருக்கின்றது என குறிக்கின்றது. கீழ்மட்டத்தில், பங்கேற்பானது அரசாங்க நிறுவனங்களின் கட்டமைப்பானது பயனாளிகளுக்கு போதுமான அளவு நெகிழ்ச்சித்தன்மையாக இருத்தல், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு கீழிருந்து மேலான அணுகுமுறையினை வளர்த்தெடுக்கின்ற அரச கருத்திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் அமுலாக்கல் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு என சுட்டிக் காட்டுகின்றது. உடைமையுரிமையின் அதிகரித்த எண்ணம் மற்றும் அதிக உறுதிப்பாடு விளைவினை அதிகரிக்கும்.

## (2) கருத்தொருமிப்பு சார்நிலை

நல்லாட்சியானது மொத்த சமுதாயத்தினதும் சிறந்த அக்கறையாக இருக்கின்ற சமுதாயத்தில் பரந்தளவிலாக கருத்தொருமிப்பினை எட்டுவதற்கு பல்வேறுபட்ட அக்கறைகளின் மத்தியஸ்தம் அவசியப்படுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது சமூகத்தின் வரலாற்று ரீதியிலான, கலாசார ரீதியிலான மற்றும் சமூக ரீதியிலான சூழ்நிலைகளின் புரிந்துணர்வின் விளைவாகும்.

## (3) பொறுப்புக்கூறல்

அரசாங்கத்தின், தனியார் துறையினரின் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் தீர்மானமெடுத்தலானது பொதுமக்களுக்கும் அதேபோல் நிறுவன பங்குதாரர்களுக்கும் பதில் சொல்லும் கடப்பாடு உடையதாக இருக்கின்றது. இந்த பொறுப்புக்கூறலானது நிறுவனத்தினைப் பொறுத்தும் மற்றும் தீர்மானமானது நிறுவனத்தின் உள்ளக ரீதியிலானதா அல்லது வெளியக ரீதியிலானதா என்பதனைப் பொறுத்தும் வேறுபடக்கூடும். அரச அலுவலர்கள் அரசாங்கத்தின் செயற்பாடு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அமைப்பிற்கு பொறுப்புக்கூறத்தக்கதாக பொதுமக்களுக்கு பதில் கூறத்தக்கவர்களாக உருவாக்குவதற்கு பொறுப்புக்கூறலானது அவசியமானதாக இருக்கின்றது. பொறுப்புக்கூறலானது அரசாங்க அலுவலர்களின் செயற்பாட்டினை அளவிடுவதற்கு பிரமாணத்தினை விருத்திசெய்தலினையும் உள்ளடக்குகின்றது. பொறுப்புக்கூறலின் குறைபாடானது அரசின் நம்பகத்தன்மையினை குறைப்பதற்கு முனைகின்றதுடன் தனியார் துறையின் நீண்டகால செயற்பாட்டுக்கான தன்நம்பிக்கையினை நிலைநாட்டுகின்ற அரசாங்கத்தின் கொள்ளளவுத்திறனின் அடிப்படையினைத் தகர்க்கின்றது. நிதியியல் பொறுப்புக்கூறலானது செலவினக் கட்டுப்பாடும் அத்துடன் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வுகளுக்கான கணக்கீட்டு முறைமையினை உள்ளடக்குகின்ற அரசாங்கத்தின் பணத்துடன் தொடர்புபடுகின்றது.

## (4) வெளிப்படைத்தன்மை

வெளிப்படைத்தன்மையானது பொதுமக்களுக்கு நம்பத்தகுந்த தகவலின் கிடைப்பனவினையும் அத்துடன் அரசாங்க விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் தீர்மானங்கள் போன்றவற்றின் தெளிவுபடுத்தல் என்பனவற்றினைக் குறிக்கின்றது. தகவலின் சுதந்திரமான ஓட்டத்தின் மீது வெளிப்படைத்தன்மையானது கட்டியெழுப்பப்படுகின்றது. செயற்பாடுகள், நிறுவனங்கள் மற்றும் தகவல் போன்றன அக்கறையுடையவர்கள் நேரடியாக அடையக்கூடியவர்களாக இருக்கின்றதுடன் போதுமானளவு தகவலானது அவற்றினை புரிந்துகொள்வதற்கும் கண்காணிப்பதற்கும் வழங்கப்படுகின்றது. ஒரு புறம் தகவலுக்கான பிரசைகளின் உரிமையினை வலுப்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கக்கூடும். அத்துடன் மற்றொருபுறம் பிரசைகளுக்கு தகவலினை மறுப்பதற்கு அரசாங்க அலுவலர்களினை அனுமதிக்கின்ற கட்டுப்பாட்டுச் சட்டங்களினை அமுலாக்கல் போன்றவற்றினால் அவ்வாறான மறுப்பானது பொதுமக்களின் மீதான அதிகரிசனையினால் நியாயப்படுத்தப்படுகின்றது.

## (5) செயலூக்கமான பதிலளிப்பு

நல்லாட்சியானது பங்குதாரர்களின் ஒன்றுக்கு ஒன்று நிகரான அக்கறைகளினை சீராக்குகின்ற

அதேவேளை நியாயமான காலப்பகுதியினுள் பொருத்தமான அத்துடன் செயலூக்கமான பதில் கூறலுடன் ஒட்டுமொத்த சமூகத்தின் அவசியப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் பணியாற்றுவதற்கு எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும்.

**(6)சமத்துவமும் அனைவரும் உள்ளடக்கப்படுதலும்**

இது உரித்துடைமையின் உணர்வுடன் ஓரளவு தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமுதாயத்தில் பங்கு உள்ளது என்ற உணர்வும் அவர்கள் முக்கிய செயற்பாடுகளில் இருந்து விலக்கப்படாமலும் உள்ளார்கள் என்ற உணர்வினையும் உறுதிப்படுத்தலின் ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனாகும். குறிப்பாக மிகவும் கைவிடப்பட்ட அனைத்து குழுக்களும் அவர்களின் நலனினை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் சமவாய்ப்பினை கொண்டுள்ளவர்களாக இருத்தல் அவசியப்படுகின்றது.

**(7)பலனளிக்கத்தக்கதும் வினைத்திறனானதும்**

செயல்முறைகள் மற்றும் நிறுவனங்கள் அவற்றின் செயல் முடிவில் வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டுடன் சமுதாயத்தின் அவசியப்பாடுகளினை அடைகின்ற விளைவினை உருவாக்குகின்றது. ஆகையினால், நல்லாட்சி சூழ்நிலையில் வினைத்திறனுக்கான எண்ணக்கருவானது இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாட்டினையும் சுற்றாடலின் பாதுகாப்பினையும் கருதுகின்றது.

**(8)சட்ட ஆளுகை**

நல்லாட்சியினைப் பொறுத்தவரை சட்ட கட்டமைப்பானது அனைவருக்காகவும் பாரபட்சமின்றி அமுலாக்கப்படுகின்ற நியாயமான சட்ட கட்டமைப்பாக இருப்பது மிக முக்கிய நிபந்தனையாக காணப்படுகின்றது. இது குறிப்பாக சிறுபான்மையினர் மற்றும் சலுகையற்ற சமூக குழுக்கள் போன்றவர்களின் மனித உரிமைகளின் பூரண பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தின் பாரபட்சமின்றிய அமுலாக்கலுக்காக பாரபட்சமற்ற ஊழலற்ற காவல்துறையின் பணி மற்றும் சுயாதீன நீதித்துறை முறைமை போன்றன முன்நிபந்தனையாகும்.

க.பொ.த (உயர்தரம்) மாணவர்களுக்கான சுயமதிப்பீட்டு வினா: நல்லாட்சியின் முக்கிய அடிப்படைக் கூறுகள் எவை?

**உசாத்துணை நூல்கள்:**


UNDP (1997) Governance for Sustainable Human Development. United Nations Development Programme

Webster's New Universal Unabridged Dictionary, London: Dorset & Baber, 1979. ■


**......35 ஆம் பக்கத் தொடர்ச்சி**


Rural Financial Markets in Developing Countries. Baltimore, Md.: Johns Hopkins University Press.

Hirschliefer, Jack. 1971. "The Private and Social Value of Information and the Reward to Inventive Activity." American Economic Review 61: 561-574.

Hoff, Karla, and Joseph E. Stiglitz. 1993. "A Theory of Monopolistic Competition in Rural Credit Markets." Paper presented at the meeting of the Econometric Society, Jan., Anaheim, Calif.

Iqbal, Farrukh. 1988. "The Determinants of Moneylender Interest Rates: Evidence from Rural India." Journal of Development Studies 24(3): 364-78.

RBI (Reserve Bank of India). 1954. All-India Rural Credit Survey. Vol. 1, TheSurvey Report. Vol. 2, The General Report. Vol. 3, The Technical Report. Bombay.

Smith, Adam. 1976 11776].An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations.Edited by Edwin Cannan. Chicago: University of Chicago Press.

Spence, Michael. 1974. "Job Market Signaling." Quarterly Journal of Economics 87: 355-74.

Stigler, George J. 1967. "Imperfections in the Capital Market." Journal of Political Economy 75 (3): 287-92.

Stiglitz, Joseph E. 1975. "The Theory of Screening, Education, and the Distribution of Income." American Economic Review 65: 283-300.

Stiglitz, Joseph E., and Andrew Weiss. 1981. "Credit Rationing in Markets with Imperfect Information." American Economic Review 71 (3): 393-410. -. 1983. "Incentive Effects of Termination: Applications to the Credit and Labour Markets." American Economic Review 72: 912-27. ■

# இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றின் அம்சங்கள்

**பேராசிரியர் டபிள்யூ. ஐ. சிறிவீர அவர்களினால் எழுதப்பட்டது**

**கலாநிதி சமன் கெலேகம அவர்களினால் மதிப்பாய்வு செய்யப்பட்டது**

**நிறைவேற்றுப் பணிப்பாளர் இலங்கையின் கொள்கை கற்கைகள் நிறுவனம்**

இந்தப் புத்தகமானது கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக எழுத்தாளரினால் எழுதப்பட்ட கட்டுரைகளினதும் ஆய்வுக்கட்டுரைகளின்தும் தொகுப்பின் அடிப்படையிலானது. ஆனால் அதிக புரிந்துணர்விற்காக புத்தகத்தின் தலைப்பின் கருத்தியல் ரீதியிலான ஒருமைப்பாட்டினை பொருத்தமாக அமைப்பதற்கு விரிவுபடுத்தப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டிருக்கின்றது. அதிக புரிந்துணர்வினை பேணுவதற்காக "ஒருங்கமைந்த தனித்துவங்களும் சமூகப் படிநிலைகளும்" தொடர்பான புதிய கட்டுரையானது உட்சேர்க்கப்பட்டிருக்கின்றது. நிலம் மற்றும் நிலப் பயன்பாடு, காலநிலை, வெள்ளப் பெருக்கு, வரட்சி, விவசாயம், சுகாதாரம், நோய்களும் உடல் பராமரிப்பும், நில உரிமை மற்றும் அரசிறை நிர்வாகம் போன்ற விடயங்களினை உள்ளடக்குவதற்கு முயலுகின்ற புத்தகத்தில் முக்கியமானவை முன்வைக்கப்பட்டன. இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார புரிந்துணர்விற்கான இவ் அனைத்து விடயங்களும் மிகவும் பொருத்தமானது என கூற வேண்டியது அவசியமில்லை.

புத்தகமானது அரசியல், சமூகம், கலாசாரம் மற்றும் தென்னாசியாவின் பின்னணியில் இலங்கையின் தந்திரோபாய முக்கியத்துவம் போன்றவற்றுடன் ஆரம்ப அத்தியாயத்தில் ஆரம்பித்து அத்தியாயம் 2 மற்றும் 3 இல் குடியேற்ற வடிவம், சமூகத் தனித்துவங்கள், சமூகப் பிரிவுகள் போன்றவற்றினை துரிதமாக ஆராய்கின்ற 9 அத்தியாயங்களாக பிரிக்கப்படுகின்றது. வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி உட்பட காலநிலை அத்துடன் விவசாயமும் விலங்கு வளர்ப்பும் போன்றன அத்தியாயம் 4 மற்றும் 5 இல் கையாளப்படுகின்றது. சுகாதாரமும் ஆரோக்கியமும் போன்ற பிரச்சினைகள் அத்தியாயம் 6 இல் கையாளப்படுகின்ற அதேவேளை அத்தியாயம் 7 மற்றும் 8 இல் குறிப்பாக கோவிலுக்குரிய நிலங்களில் "இராஜ காரிய முறைமை" (நிலம் அனைத்தும் அரசனுக்கு உடைமையானது, நிலத்தினை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த வேண்டுமாயின் அரசனுக்கு கட்டாய சேவை செய்யவேண்டும்) உட்பட நில உரிமை தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. முக்கிய தலைப்பான அரசிறை நிர்வாகம் தொடர்பான கலந்துரையாடலுடன் அத்தியாயம் 9 ஆனது முடிவுறுத்தப்படுகின்றது.

**பிராந்தியப் பின்னணி**

தென்னாசிய பிராந்தியத்தில் இலங்கையின் நிலைமை தொடர்பான அறிமுக அத்தியாயமானது இலங்கையின் மிகப்பெரிய அயலவனான இந்தியாவுடன் இலங்கையின் உறவுமுறை தொடர்பாக பிரதானமாக கருத்திற்கொள்ளப்படுகின்றது. எல்லாவற்றினையும் உள்ளீர்க்கின்றதும் ஒன்றிணைக்கின்றதுமான தன்மையினையும் நீண்டகாலமாக தென்னாசியாவுடன் ஒருங்கிணைந்திருக்கின்ற போட்டி மதங்கள் மற்றும் கலாசாரங்கள் போன்றவற்றினையும் கொண்டிருந்த இந்தியாவின் விசித்திரமான பண்பிற்கு முக்கியத்துவமளிக்கின்றது.

தென்னாசியாவில் சமுதாயங்களின் வரலாற்று ரீதியிலான மறுமலர்ச்சி சிக்கலான செயல்முறையாக இருந்தது. இந்தியாவின் வடக்கு மற்றும் தெற்கு ஆகிய இரண்டு பிராந்தியங்களில் இருந்தும் அத்துடன் பின்னர் ஏறத்தாழ கி.பி 18 ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம்களின் பாரிய புலம்பெயர்வுகளுடனும் இலங்கை சமுதாயமானது பரிணாம வளர்ச்சியடைந்தது. எடுத்துக்காட்டாக அரசியலிலும் மதம் மற்றும் கலாசாரத்தின் செல்வாக்கிலும் கூட தென்னாசியா அதிக மாறுபட்ட பல்வகைத் தோற்றப்பாட்டினை முன்வைக்கின்றது எனினும் எல்லாவற்றினையும் உள்ளீர்க்கின்றதும் ஒன்றிணைக்கின்றதுமான தன்மையானது வரலாற்றின் சுழற்சியில் சான்றாக காணப்படுகின்றது.

இலங்கையில் மதத்தினை கருத்திற் கொள்கையில் இந்து சமய மரபினைச் சார்ந்த தெய்வங்கள் மட்டுமல்ல சாதி முறைமையினையும் உள்ளடக்கிய இந்துக்களின் பல

சிறப்பம்சங்களை தன்னுள் உள்ளீர்த்திருந்த மேலாதிக்கம் உள்ள மதமாக பௌத்தம் காணப்பட்டது என எழுத்தாளர் குறிப்பிடுகின்றார். இலங்கையில் ஆரம்ப பழங்குடி கூட்டங்களின் பேய்ச் சடங்குகளை பௌத்தம் மற்றும் இந்து மதங்கள் இரண்டும் தக்கவைத்திருந்தன.

தென்னாசியாவில், பேரரசுகளும் இராச்சியங்களும் தோன்றி மறைந்திருந்திருக்கையில் புகழ்பெற்ற மதம், சமூக கட்டமைப்பு மற்றும் கிராமத்து வாழ்க்கை போன்றன உள்ளீர்க்கப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளதன் ஊடாக நிலைத்திருக்கின்றன. இந்த வகைகளிலும் கலாசாரத்தின் ஏனைய அம்சங்களிலும் தென்னாசியாவானது அதன் அனைத்து மாறுபட்ட பல்வகைத் தோற்றப்பாட்டுடன் உலகின் பிற பகுதிகளில் இருந்து தனித்துவமான அலகாக கருதப்பட முடிகின்றது.

தற்காப்பு மற்றும் பாதுகாப்பு என்ற வகையில் தென்னாசியாவின் அனைத்து நவீன அரசுகளும் தற்பொழுது காணப்படுகின்ற வகையிலேயே இருந்தது எனினும் நவீன காலத்திற்கு நீடிக்கும் தொடர்ச்சியான தேசிய வரலாற்றுடன் இலங்கையானது வரலாற்று காலத்தில் தனித்துவமான பூகோள அரசியல் அமைப்பாக வெளிப்பட்டது என எழுத்தாளர் வலியுறுத்துகின்றார். மற்றொருபுறம், மிக அண்மைய காலங்களில் இருந்து தென்னிந்தியாவின் அதிகார மையங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு இடையிட்ட அச்சுறுத்தல்களினை ஏற்படுத்தியது. இதில் முக்கியமாக கவனிக்கத்தக்கது என்னவென்றால், இலங்கை குறிப்பாக படைரீதியிலாக பலம் குன்றிய நிலையிலும் பிளவுபட்டும் இருக்கின்ற வேளைகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர்கள் போன்ற அந்நிய சக்திகளின் தொலைதூரத்து அச்சுறுத்தல்களினைக் கூட வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை.

## ஆரம்பகால குடியேற்றங்கள்

அத்தியாயம் 2 ஆனது ஆரம்ப காலத்திலிருந்து இலங்கையில் குடியேற்ற முறையினை கையாளுகின்றது. தொல்பொருளியல் சான்றுக்கு இணங்க, பண்டாரவளை மற்றும் பலாங்கொட போன்ற இடங்களில் மனித வரலாற்றுக்கு முந்திய காலத்தில் அங்குமிங்குமான சிதறுண்ட குடியேற்றங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் தீவில் பெரிய அளவிலான குடியேற்றங்கள் கிட்டத்தட்ட கி.மு ஆறு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்து குடியேறியதன் பின்னர் மட்டுமே ஆரம்பித்தது. பதினேழு நூற்றாண்டுகளுக்கு மேல் அரசியல், பொருளாதார மற்றும் கலாசார செயற்பாடுகளின் மையங்கள் வறண்ட வலயத்திற்குரிய பிராந்தியங்களில் அமையப்பெற்றன. நீர் விநியோகம், வளமான மண் மற்றும் இலகுவாக அகற்றப்பட்ட காடுகள் போன்ற வசதிகளின் கிடைப்பனவு இப் பிராந்தியங்களில் அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பகால குடியேற்றவாசிகளை தூண்டியது. எவ்வாறாயினும் படிப்படியாக குடியேற்றங்கள் ஈரநிலங்களிலும் தாழ்நிலங்களிலும் பரவியதுடன் பின்னர் மலைநாடுக்ளிலும் பரவியதுடன் அதேவேளை யாழ்ப்பாண குடாநாட்டில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலிருந்து அதிகளவில் தமிழ் மக்கள் குடியேறத் தொடங்கினார்கள்.

## சமூக நிலைப்படுத்தல்

அத்தியாயம் 3 ஆனது புராதன இலங்கை சமுதாயத்தில் பழங்குடியினர், வம்சங்கள், இனக்குழுக்கள் மற்றும் சாதி முறைமை அத்துடன் பல்வேறுபட்ட சமூக கூட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புபடுகின்றது. எவ்வாறாயினும் எழுத்தாளர் இந்த ஒருங்கமைந்த தனித்துவங்களானவை சமூக சிதறலுக்கும் பாகுபாட்டிற்கும் பங்களிப்பு செய்யவில்லை என வலியுறுத்துகின்றார்.

பரந்தளவில், புராதன இலங்கையின் சமுதாயத்தினை நான்கு கூட்டங்களாக வகைப்படுத்தப்பட முடியும். முதலாவதாக, அரசன், பிரபு, செல்வந்த வணிகர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களாக இருந்தனர். இரண்டாவது வகையினராக அரச அலுவலர்கள், வர்த்தக தொழில் முயற்சியாளர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய தொழில் நிபுணத்துவ வகுப்பினர் போன்றோர் அடங்கினர். மூன்றாவது கூட்டத்தில், சாதாரண விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் போன்றோரினை பெருமளவு உள்ளடக்கியிருந்தது. நகர சுத்திகரிப்பாளர்கள், மயான தொழிலாளர்கள் மற்றும் வேட்டையாடுதல் போன்ற பழிசுமக்கின்ற பாரம்பரிய தொழில்கள் என்பன கடைசி கூட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டனர். அடக்குவதன் ஊடாகவே அல்லது ஆயுதங்களின் கட்டாயப்படுத்தல் ஊடாகவோ அல்லாமல் சமூக முறைமை நிலைபேறானதாக இருந்தது எனினும் மக்களின் ஆதரவினைப் பெற்ற பௌத்தம் மற்றும் உபதேசங்களின் மூலமாக பகுதியளவில் சாத்தியமானதாக விளங்குகின்ற விருத்திசெய்யப்பட்ட சித்தாந்தத்தினைப் பயன்படுத்துவதன் மூலமானதாக சாத்தியப்பட்டது.

## காலநிலை மாற்றம்

காலநிலை மற்றும் விவசாயம் போன்றவற்றுடன் தொடர்புபட்ட விடயமானது புத்தகத்தின் அத்தியாயம் 4 மற்றும் 5 உடன் தொடர்புபடுகின்றது. வரலாற்றுக்கு முந்திய இலங்கையில் காலநிலை, வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி போன்றவை தொடர்பான தகவல்

மிகக் குறைவாக இருந்தது எனினும் புராதன இராஜரட்டை நாகரிகத்தின் சரிவில் காலநிலையானது ஒரு முக்கிய காரணியாக இருந்தமை சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது. காலத்துக்கு காலம் ஏற்பட்ட கடல் அரிப்பும் கொந்தளிப்பும் நாட்டின் நிலப்பரப்பினை குறைப்பதற்கு இட்டுச்சென்றது என எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

புராதன நாகரிக காலத்தின் பொழுது மலைநாட்டுப் பிராந்தியங்களில் சிதைக்கப்படாத காட்டின் போர்வை தீவினுடைய அபரிமிதமானதும் ஒழுங்குமுறையிலமைந்ததுமான மழைவீழ்ச்சியினை தூண்டியது. குறிப்பாக பத்தாம் மற்றும் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளின் பின்னர் குடியேறியவர்களினால் மலைப் பிராந்தியத்தில் புராதன காடுகள் அகற்றப்பட்ட பொழுது காட்டினுடைய அதிகளவிலான அகற்றலின் விளைவாக நீர் விநியோகங்களின் குறைவிற்கு இட்டுச்சென்றது. நீர் விநியோகங்களின் குறைவிற்கு அப்பால், காடுகளின் அதிகளவிலான அகற்றல் வெள்ளப்பெருக்கு, வரட்சி, நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களின் உடைப்பு அதேபோல் மண் சரிவுகள் போன்ற ஏனைய சூழலியல் மாற்றங்கள் விளைவாக இருந்தது. துட்டகைமுனு அரசனின் காலப் பகுதியிலும் அத்துடன் வலகம்பா, குன்சநாக, ஸ்ரீ சங்கபோ, கீர்த்திஸ்ரீமேவன், 2 ஆம் பராக்கிரமபாகு, மற்றும் 1ஆம் புவனேகபாகு போன்ற அரசர்களின் காலப்பகுதியிலும் கூட பல பஞ்சங்கள் பற்றி புராதன வரலாறுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மிகவும் முக்கிய படிப்பினையாக சாதாரண காலநிலை காணப்படவில்லை என புராதன வரலாற்றுப் பதிவுகளில் காணப்படுகின்றது என எழுத்தாளர் விபரிக்கின்றார். வேறுபட்ட காலங்களில் பல்வேறுபட்ட இயற்கை அழிவுகளினை விளைவிக்கின்ற காலநிலையானது எப்பொழுதும் மாறிக்கொண்டிருந்தது.

**விவசாயம்**

காலநிலை மாற்றத்தின் பகுப்பாய்வுடன் தொடர்புபட்ட எழுத்தாளரின் விபரிப்பானது ஆரம்ப காலங்களின் விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை போன்ற தலைப்புக்களுடன் தொடர்புபட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதின் கற்காலத்திற்குப் பிற்பட்ட இலங்கை மக்களின் வாழ்க்கையின் பகுதியாக விவசாயமானது இருந்திருக்காத பொழுதிலும் குறிப்பாக கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து வறண்ட வலயத்தில் குடியேறியவர்கள் நீர்ப்பாசன முறைமையினை விருத்தி செய்தார்கள். இது கி.மு 4 ஆம் நூற்றாண்டிலிருந்து கிட்டத் தட்ட கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரை நாகரிகத்திற்கான அடித்தளத்தினை வழங்கியது.

விவசாய முறைமையானது ஆரம்ப கால சேனைப்பயிர்ச்செய்கை (காடுகளை அழித்து தீ மூட்டுதல்) முறையிலிருந்து மிகவும் வேறுபட்ட முன்னேற்றகரமான பயிர்ச்செய்கை முறைகளின் பல வடிவங்களினை உள்ளடக்கியிருந்தது. பயிர்கள் நெல்லினை மட்டுமல்ல குரக்கன், பல்வேறுபட்ட தானியங்கள், கரும்பு, பருத்தி, மரக்கறிகள் மற்றும் வீட்டுத் தோட்ட உற்பத்திகள் போன்ற ஏனையவற்றினையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், எழுத்தாளர் பயிர்ச்செய்கை செயல்முறைகளின் விபரமான வர்ணிப்பினையும் வழங்குகின்றார். விலங்கு வேளாண்மையானது பெருமளவில் எருமை, மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு போன்றவற்றினை உள்ளடக்கியிருந்தது. பயிர்ச்செய்கைகளின் சமூக முறைமை மற்றும் உற்பத்திகளின் பகிர்வு குறிப்பாக "அந்தே" முறைமை அல்லது பிந்திய நிலையில் பிரதிகூலங்களுடன் நில உரிமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் பயிர்ப் பங்கீடு போன்றவற்றினை எழுத்தாளர் மேலும் விபரிக்கின்றார். புதிய பல்வேறு வகையான விதைகள், பசளைகள், களைநாசினிகள், பீடைநாசினிகள் போன்றவற்றின் அறிமுகப்படுத்தலுடன் தற்கால இலங்கையின் விவசாய நடவடிக்கைகள் பொறிமுறையாக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை பல நூற்றாண்டுகளாக அடிப்படையில் ஒட்டுமொத்த முக்கிய விவசாய முறைமையானது ஒரேமாதிரியாகவே தொடர்ந்தும் இருக்கின்றது என எழுத்தாளர் கூற்றின் மூலமாக உள்ளடக்குகின்றார்.

**ஆரோக்கியம்**

எழுத்தாளர் பிரிதொரு கட்டுரையாக எழுதியிருக்கின்ற தலைப்பினை அத்தியாயம் 6 உள்ளடக்குகின்றது. இது கி.பி 13ஆம் நூற்றாண்டுவரை இராஜரட்டை நாகரிகத்தின் எழுச்சியின் பொழுது இலங்கையில் நிலவிய சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய பராமரிப்பு முறைமையுடன் தொடர்புபடுகின்றது. புராதன இலங்கை சமுதாயமும் இடர்களுக்கு முகம் கொடுக்கின்ற விவசாயிகளிலும் பார்க்க ஒப்பீட்டளவில் வசதியான வாழ்க்கைக்கு இட்டுச்செல்கின்ற ஆதாய உரிமை, பிரபுத்துவம் மற்றும் ஆசாரியத்துவம் போன்றவற்றுடன் நிலைப்படுத்தப்பட்டது.

எனினும், சுகாதாரத்துடன் தொடர்புடைய விதிகள் அனைவருக்கும் பொருத்தமானதாக இருந்தது. ஒழுங்குவிதிகள் நகர்ப்புறங்களில் ஆரோக்கிய மற்றும் சுகாதார முகாமைத்துவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் குப்பை கூழங்களும் அவற்றினை அகற்றுவதற்கான தடையும், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிக்குமிடங்கள் உட்பட சுற்றாடல், சுகாதார நிலைமைகள் மற்றும் உடல் நல பராமரிப்பு போன்றவற்றினை இலங்கையின் புராதன நகரங்களில் கவனம் செலுத்தியிருந்தமை நிரூபிக்கின்றன.

நான்கு வகையான மருத்துவமனைகள் இருந்திருப்பதாக தென்படுகின்றது. (அ) துறவிகளுக்குரிய மருத்துவமனைகள் (ஆ) சமயக்குருவல்லாதவர்களுக்கான மருத்துவமனைகள் (இ) மகப்பேறு வைத்திய சாலைகள் (ஈ) வெளிநோயாளர் சிகிச்சைக்கான மருத்துவமனைகள். எழுத்தாளர் இவ் மருத்துவமனைகளின் சிலவற்றினை குறிப்பாக துறவிகளினால் தாங்களாகவே முகாமைத்துவம் செய்யப்பட்ட துறவிகளுக்கான மருத்துவமனைகள் தொடர்பாக விபரமாக விபரிக்கின்றார். அதேவேளை ஏனைய மருத்துவமனைகளில் பெரும்பாலானவற்றை பராமரிப்பதற்கான பொறுப்பினை அரசு ஏற்றிருந்தது. புராதன நூல்கள் ஆயுர்வேத முறைமை, அதேபோல் சித்த மருத்துவம் மற்றும் யுனானி முறைமை மூலமாக சிகிச்சையளிக்கப்பட்ட அக்காலத்தில் நிலவிய பலவகையான நோய்களினையும் குறிக்கின்றது. உடல்நல பராமரிப்பானது மனிதர்களுக்கு மட்டுமானதாக காணப்படவில்லை அதேபோல் மிருக பராமரிப்பிற்காகவும் காணப்பட்டது.

### நில உரிமைமுறை

நில உரிமைமுறை மற்றும் "இராஜ காரிய" முறைமை போன்றவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சினை அத்தியாயம் 7 இல் கையாளப்பட்டதுடன் கோயில் நிலங்களின் "இராஜ காரிய" முறைமையினை அடுத்த அத்தியாயமான 8 இல் விபரமாக கையாள்கின்றது. பொதுவாக, இந்தியாவைப் போல் இலங்கையிலும் அரசன் "பூபதி" ஆக அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளனாக இருந்தான். அந்நிலங்கள் வழங்கப்பட்ட பல்வேறுபட்ட சேவைகளுக்காக அரசனினால் அல்லது அவனது கட்டளைக்கு ஏற்ப தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடையளிக்கப்பட்டன. இதனை பெரும்பாலான எழுத்தாளர்கள் ஆதரித்திருந்தார்கள். எழுத்தாளர் இந்த கோட்பாட்டினையும் எண்ணக்கருவினையும் பரிசீலிப்பதுடன் சில அம்சங்களில் உடன்படவில்லை. மேலும் இலங்கையில் நிலத்தின் அரசனுடைய ஏகபோக உரித்துடைமை கோட்பாட்டிற்கான அடிப்படை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என குறிப்பிடுகின்றார்.

நிலத்திற்கான அரச நன்கொடைகள் மூன்று வகைகளினுள் உள்ளடக்கப்படுகின்றது. முதலாவதாக, நிலங்கள் முற்றுமுழுதானதாக உரிமையாளருக்குரிய உரிமைகளுடன் நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் அரசனினால் நன்கொடையளிக்கப்பட்டன. இரண்டாவதாக நிலத்திலிருந்து அரசனுக்கு தகுந்த வரிகளுடன் மட்டுமே பரிமாற்றப்படுகின்றது. அத்துடன் மூன்றாவதாக நிலத்தில் இருந்து கொடையளிக்கப்பட்டவருக்கு எழுகின்ற வருமானத்தினை பண ஈடாக மாற்றுதல். உரிமை முறையின் ஏனைய மூன்று வகைகளான "அந்தே", "உகஸ்", மற்றும் "பள்டொர" போன்றன சில சந்தர்ப்பங்களில் காணப்பட்டன. அவ்வாறான நன்கொடைகளின் விபரமானது பொதுவாக ஓலைச் சுவடிகளில் அல்லது "சன்னஸ்" என்று அழைக்கப்படுகின்ற செப்புத் தகடுகளில் எழுதப்பட்டு அரசனின் முன்னிலையில் அல்லது சில சந்தர்ப்பங்களில் அரசனின் சமூகமில்லாத நிலையிலும் வழங்கப்படுகின்றது. மத்தியகால இலங்கையில் நிலவுரிமை முறையின் பிரச்சினைகளானது எழுத்தாளர்கள் முன்னதாக கற்பனை செய்தவாறு மிகவும் இலகுவானதாக இருக்கவில்லை என எழுத்தாளர் முடிவுக்கு வருகின்றார். மேலும் அவருடைய ஆய்வுகள் மிகவும் பல்லின மையப்படுத்தப்பட்ட சிக்கலான வடிவத்தினை வெளிப்படுத்துகின்றது.

### வரி/வருமானம்

அரசியல் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பு தொழிற்பாடுகளின் மீதான அடிப்படையினை விபரிப்பதன் மூலமாக புராதன இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அம்சங்கள் தொடர்பான அவருடைய கட்டுரைகளின் தொகுப்பினை முடிவுறுத்துகின்றார். உதாரணமாக, அரச வருமானத்தின் தன்மையும் சேகரிப்பும் மற்றும் புராதன காலத்தில் வருமானத்திற்கான பரிபாலனம் போன்றன.

தேவையான விடயங்களுக்கு அரசனினால் வழங்கப்பட்ட பாதுகாப்பிற்காக அரசனுக்குரியதை வழங்குவதாக அறவிடப்படுகின்ற வரிகளுக்கான அடிப்படை கோட்பாடு இருந்தது. எவ்வாறாயினும் ஆட்சிசெய்பவர்களின் அவசியப்பாடுகளினை சரிசெய்து கொள்வதற்காக அரசனுக்குரிய பங்காக ஆறில் ஒரு பகுதி என கோட்பாடு இடப்பட்டது. எனினும் அவசரகால நிலைமையில் இது சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியில் நான்கில் ஒன்றாக அதிகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயல்முறையில் எல்லாக் காலப்பகுதியிலும் அத்துடன் நாட்டின் அனைத்து வட்டாரத்திலும் வரியின் வடிவத்தில் சேகரிக்கப்பட்ட உற்பத்தியின் அளவு ஒரே சீரானதாக இருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில், ஆட்சியாளர்களினதும் உள்ளூர் வரி சேகரிப்பாளர்களினதும் இயலுமையினைப் பொறுத்து அதிகமானதாகவும் சில சந்தர்ப்பங்களில் குறைவான நிலையிலும் இருந்தது.

வருமானத்தின் பிரதான மூலமாக பல்வேறுபட்ட வகையான பயிர்ச் செய்கைகளில் இருந்து வற்புறுத்தப்பட்ட நில வரியாக இருந்தன. மிகப் பிரதானமாக நெல் வயல்களில் இருந்து அறவிடப்பட்டிருந்தது. சேனை நிலங்களும் வரி அறவிடுதலுக்கு உட்பட்டிருந்தது. ஆனால், நிஸங்கமல்ல மன்னன் இம் முறையினை ஒழித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. நிலத்திற்கான

வரிகளுக்கு அப்பால், அரசனுக்கு பெரியளவிலான வரிகளின் உருவாக்கமாக வணிகம் அல்லது சுங்கத்திற்குரிய முக்கிய வரிகள் காணப்பட்டன. ஏனைய வரிகளாக (விற்பனைக்கான விற்பனைப் பொருள்களின் எடுத்துச் செல்லலுடன் தொடர்பல்லாதது) நீர்ப்பாசன வேலைகளுக்கான நீரின் கட்டணங்களாகவும் வரிகளாகவும் காணப்பட்டன.

நேரடி வரிகளுக்கு அப்பால் தண்டங்கள், புதையல்கள் மற்றும் இறப்பு வரி போன்ற அரச வரிகள் உள்ளடக்கப்பட்டன. அரசனும் அவனுக்கு உரித்தான நிலம் மற்றும் இரத்தினங்கள், முத்துக்கள், கறுவா, யானைகள் அதேபோல் முத்துக் குளிப்பு போன்ற குறிப்பிட்ட வணிக பண்டங்கள் மீதான ஏகபோக உரிமை என்பனவற்றினால் வருமானத்தினைப் பெற்றான்.

பொது வருவாய்க்கான கணக்குப் பதியுநர்கள் அதேபோல் "பாண்டரா பொத்தகின்" என அழைக்கப்படுகின்ற ஒட்டுமொத்த பொதுவருவாயின் பரிபாலனத்தினை மேற்கொள்கின்ற அலுவலர்கள் போன்ற பல்வேறுபட்ட அலுவலர்களினால் வருமானத்திற்கான பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டது. பிரதம பொருளாளர் *"முதல் நாயக்கய"* மற்றும் *"பாண்டகார நாயக்கய"* போன்ற வேறுபட்ட மூலங்களில் வேறுபட்ட பதங்களினால் குறிக்கப்படுகின்றது. கிராம அதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் அரசனுக்குரிய கிராம வரிகளினை சேகரிப்பதில் பொறுப்பளிக்கப்பட்டனர். கடல் துறைமுகங்களில் வரிகளின் சேகரிப்பு துறைமுகத்தின் அலுவலகப் பொறுப்பதிகாரியின் பொறுப்பாக இருந்தது. எனவே வருமான நிர்வாகத்தில் பன்முக மையப்படுத்தப்பட்ட சமூக பொருளாதார கட்டமைப்பு வெளிப்படுகின்றது. கோயில் நிலங்கள் மற்றும் அறப்பணி நிறுவனங்கள் அத்துடன் அரசனுடைய குறிப்பிட்ட அலுவலர்கள் போன்றவற்றுக்கான குறிப்பிட்ட நிலங்கள் தொடர்பாக அரசனினால் வரிகள் குறைக்கப்பட்டு இருந்தது.

**மீளாய்வு**

இலங்கையின் பொருளாதார வரலாறு தொடர்பான விடய நூல்கள் மிக சொற்பமானதாகவும் ஒருங்கிணையாததாகவும் காணப்படுகின்றது- Siriweera's earlier work (published in 1994, Vikas Publications) titled "A Study of the Economic History of Pre-Modern Sri Lanka", Martha Prickett's work on "Sri Lanka's Foreign Trade Before AD 600: Archaeological Evidence" (in K.M De Silva, et al., ed. (1990) "Asian Panorama: Essays in Asian History, Past & Present), some essays in the special issue of the Economic Review (People's Bank) titled "Ancient Economy & Society: A Retrospect of Heritage (Oct/Nov 1997), போன்றன மனதில் உள்ளவை. மீளாய்விலுள்ள இந்த புத்தகமானது ஏனைய ஆராய்ச்சியாளர்களினாலும் நிபுணத்துவ வரலாற்று ஆசிரியர்களினாலும் புறக்கணிக்கப்பட்டிருந்த மத்திய காலத்தின் முக்கியத்துவ விடயங்களினை உள்ளடக்குவதனால் தற்பொழுதுள்ள தொகுப்புக்களுக்கு முக்கியமான மேலதிக இணைப்பாக இருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக, புத்தகமானது இலங்கையில் புராதன மற்றும் மத்தியகால சமுதாயத்தின் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார மற்றும் நலன்புரி அம்சங்கள் தொடர்பாக ஒரு பகுப்பாய்வு கண்ணோட்டத்தினை வழங்குகின்றது. பல்வேறுபட்ட தலைப்புக்கள் முக்கியமான பொழுதிலும் அவற்றிடையே மத்தியகால இலங்கை சமுதாயத்தின் பரந்தளவிலான சமூக பொருளாதார கண்ணோட்டத்துடன் வாசகர்களுக்கு வழங்குவதற்கு அவசியமான ஒத்திசைவு குறைவாக காணப்படுவது இந்நூலின் பலவீனமாக காணப்படுகின்றது. "ஒருங்கமைந்த தனித்துவங்களும் சமுதாய நிலைப்படுத்தல்களும்" தொடர்பான புதிய கட்டுரையின் வடிவத்தில் சீர் செய்வதற்கான எழுத்தாளரின் முயற்சியானது பகுதியளவில் மட்டுமே வெற்றியளித்துள்ளது. அதற்குமேலும், ஒரு பொருளாதார வரலாற்று ஆசிரியருக்கான பல வினாக்கள் விடையளிக்கப்படாததாக தற்பொழுதும் காணப்படுகின்றது. அவையாவன, (1) இலங்கையின் புவியியல் ரீதியிலான அமைவிட சாதகப் போக்கினால் பயன்படுத்தப்பட்ட காலனித்துவ மற்றும் ஏனைய அந்நிய அதிகாரங்கள் காலனித்துவத்திற்கு முற்பட்ட புராதன காலங்களின் பொழுது பயன்படுத்தப்படாமல் இருந்தது ஏன்? - உலகளாவிய சந்தையின் பரீட்சயமற்ற தன்மையின், கடல் வழி இயலுமை பற்றாக்குறையின் அல்லது தொழில் முயற்சியாண்மையற்ற நிலையின் அல்லது ஒன்றிணைந்த இவை அனைத்துக் காரணிகளின் விளைவாகவா? (2) நவீன இலங்கையின் பொருளாதாரத்திற்கு முன்னரான தொடர்ச்சியான மலர்ச்சியினை காலனித்துவ இடைமாற்றக் காலமானது தடுத்ததா? மேலும் தங்கிவாழ்கின்ற பொருளாதாரத்தினை உருவாக்கியதா? அத்துடன் தொல்பொருளியல் பிரதேசங்களில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்ற மக்களின் நீர்ப்பாசன மற்றும் பொறியியல் திறன்களினை நீர்த்துப்போக வைத்ததா? இக் குறைபாடுகள் இருந்த பொழுதிலும், பொருளாதார வரலாற்று ஆசியர்கள், சமூக பகுப்பாய்வாளர்கள், மாணவர்களும் இலங்கை பொருளாதார வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் அதேபோல் பொது மக்கள் போன்றவர்களுக்கும் உதவியினையும் ஆர்வத்தினையும் வழங்குவதாக இருக்கும். ■

QD/24/News/ 2015 எனும் இலக்கத்தின் கீழ் இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு வரும் ***பொருளியல் நோக்கு*** சமகால சமூக பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் ஆழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான ஒரு பொதுமன்றத்தை வழங்குகின்றது. மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டவர்களின் நன்மைக்காக தற்பொழுதும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற சில வெளியீடுகளின் பிரதிகளின் பட்டியலினை நாம் கீழே கொடுக்கின்றோம்.

| | |
|---|---|
| **2010** | |
| மாசி/பங்குனி | வடக்கு மற்றும் கிழக்கு பகுதியின் அபிவிருத்தி |
| சித்தி/வைகா | சுதேச வேளாண்மை பற்றிய அறிவு |
| ஆனி/ஆடி | துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து |
| ஆவணி/புரட் | அறிவுச் செழிப்பிற்கான கல்வி |
| ஐப்/கார்த் | பொருளாதார மேம்பாட்டில் வரி விதிப்பு |
| மார்.2010/தை.2011 | பாதீடு - 2011 |
| **2011** | |
| மாசி/பங்குனி | சுற்றுலாத்துறை |
| சித்தி/வைகா | வங்கியியல் தொழிற்துறை |
| ஆனி/ஆடி | புதிய உலக ஒழுங்குமுறை |
| ஆவணி/புரட் | போக்குவரத்து |
| ஐப்/கார்த் | ஆயுர்வேதம் |
| மார்2011/தை | பாதீடு - 2012 |
| **2012** | |
| மாசி/பங்குனி | சமத்துவம், மனிதநேயம் மற்றும் நிலை பேறாண்மையுடனான வளர்ச்சி |
| சித்தி/வைகா | கொள்நெறிக் கருவியாக பரிமாற்ற வீதம் |
| ஆனி/ஆடி | அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| ஆவணி/புரட் | கூட்டாட்சி |
| ஐப்/கார்த் | பொருளாதாரத்தில் பெண்களின் பங்கேற்பு |
| மார்.2012/தை.2013 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் |
| **2013** | |
| மாசி/பங்குனி | பிராந்திய அபிவிருத்தி |
| சித்தி/வைகா | CHOGM 2013 - இலங்கை |
| ஆனி/ஆடி | பொருளாதார வளர்ச்சியில் நாணயம் மற்றும் இறைக் கொள்நெறி |
| மார்/தை 2014 | 2014 ஆம் ஆண்டிற்கான சில வரவு செலவுத்திட்ட தாற்பரியங்கள் |
| **2014** | |
| மாசி/பங்குனி | தேயிலை தொழிற்துறை - அண்மைக்காலபோக்குகள் |
| சித்தி/வைகா | இலங்கையில் இளைஞர் |
| ஆனி/ஆடி | உருளைக்கிழங்கு சந்தைப் படுத்தலில் அறுவடைக்கு பின்னரான இழப்புக்கள் |

| வருடாந்த சந்தா விபரம் (4 பிரதிகளுக்கு) | |
|---|---|
| உள்ளூர் | - ரூபா. 200.00 |
| வெளிநாடு | - $ 25 |

ஆர்வமுள்ள வாசகர்கள் இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக் காரியாலயத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தகசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட எமது விற்பனை நிலையங்களில் விற்பனைக்குண்டு.

*தொலைபேசி*: 011-2481429, 011-2481449, *தொலைநகல்.* 011-2543864, *மின்னஞ்சல்.* ersales@peoplesbank.lk

***பொருளியல் நோக்கு***
***மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித்திட்டமாகும்***

பிரதி ஒன்றின் விலை:ரூபா 50/-

இது மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடாகும். பொருளியல் நோக்கு எனக்குறிப்பிட்டு இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள்காட்டவோ அல்லது மீள்பிரசுரிக்கவோ முடியும்.
இதழ் இல : 0259/9779